
பாக்கெட் புக்ஸ்
பட்டுக்கோட்டை
பிரபாகர்
மீண்டும்
தொடரும்

# மீண்டும் தொடரும்



பட்டுக்கோட்டை பிரபாகர்

முன்குறிப்பு: இங்கே **அவன், அவள் இவள்** என்கிற மூன்று தொடர்கதைகள் துவங்குகின்றன. இந்த மூன்று தொடர்களும் முடியும் போது இவை **மீண்டும் தொடரும்** என்கிற ஒரேக் கதையின் கிளைக் கதைகள் என்பது புரியும்.



# அவன் 1

அவன் செத்துப் போயிருந்தான்.

சற்று முன் அவன் பிடித்த சிகரெட் நெடி இன்னும் காற்றில் உயிரோடு இருந்தது. சாம்பல் கிண்ணத்தில் இன்னும் முழுமையாக அணையாமல் பாக்கியிருந்த ஒரு கங்குப் புள்ளியிலிருந்து நூலாக புகை வந்து கொண்டிருந்தது. டியூப்லைட் அருகில் பல நிமிடங்களாக ஒரு பூச்சியை குறி வைத்துக் காத்திருக்கும் ஒரு பல்லி அவனைத் திரும்பிப் பார்க்கவில்லை. காற்றுக்கு திடீர் கர்ப்பமாகி உடனே கருக்கலைத்துக் கொண்டிருந்த திரைச் சீலைகளும் அவனைக் கண்டுகொள்ளவில்லை. சுவரில் ஓவியமாக தொங்கிக் கொண்டிருந்த விவேகானந்தர்கூட சும்மாதான் இருந்தார். போராட்டத்தில் எகிறி தரையில் விழுந்த அந்தப் புத்தகம் மட்டும் மல்லாந்து விழுந்ததால் தன் பக்கங்களை விசிறி அடித்துக் கொண்டிருந்தது. அவன் வயிற்றிலிருந்து பெருகி அகன்று உறைந்த கருஞ்சிவப்பு ரத்தத் தீவுக்கடியில் பெட்ஷீட் கிளிகள் இன்னும் இணை பிரியாமல் கொஞ்சிக்கொண்டுதானிருந்தன.

தான் பிடித்திருந்த கத்தியைப் பார்த்துக் கொண்டிருந்தாள் அவள். நிதானமாக சேகரமாகிய கடைசிச் சொட்டு ரத்தம் அதன் முனையிலிருந்து சொட்டி தரையில் இருந்த மற்ற புள்ளிகளோடு சேர்ந்து கொண்டது.

வியர்வையில் அவள் உடலும் அதனால் உடைகளும் நனைந்திருந்தன. அவள் பிடி தளர்ந்து கத்தி 'டினார்' என்று கீழே விழுந்து எகிறி இன்னொரு குட்டி 'டினார்' தந்து புரண்டு விழுந்தது.

மெல்ல நகர்ந்து நாற்காலியில் அமர்ந்தாள். விழிகள் திறந்தபடி இறந்திருந்த அவனைப் பார்த்தாள்.

'உங்கள் கண்களில் மட்டும் எப்படி காந்த சக்தி? கண்களா அவை? இல்லை.... தூண்டில்கள்! என் இதயத்தை அருகில் இழுத்து சிக்க வைத்த தூண்டில்கள்!'

அவன் மீசை முடிகளின் மேல் தெறித்து விழுந்த ஓர் ரத்தத் துளி



காய்ந்து கொண்டிருந்தது.

'உங்கள் மீசையைப் பற்றி பதினாறு வரிகளில் ஒரு கவிதை எழுதி வைத்திருக்கிறேன் தெரியுமா? ம்கூம்..அதை இப்போது சொல்ல மாட்டேன். வெட்கமாக இருக்கிறது. அந்த மீசை என் மனதை வருடும் இறகு.'

அவன் உதடுகளிரண்டும் பிரிந்து மேல் வரிசைப் பற்கள் பளிச்சிட்டன.

'ஆமாம், அதெப்படி உங்களை யாரும் இன்னும் பற்பசை விளம்பரத்திற்கு அழைக்காமலிருக்கிறார்கள்? அழகிருக்கும் இடத்தில் ஆபத்தும் இருக்கும் என்பது உண்மைதான். முத்தத்தின் போது அவை சமர்த்தாக இருக்கின்றனவா என்ன? சிலசமயம் காயப்படுத்தி அடையாளக் குறிகள்கூட போடுகின்றனவே. அவை வன்முறை இச்சை கொண்ட தீவிரவாதிகள்! ஆனால் ரசிக்க வைக்கும், மீண்டும் மீண்டும் ஏங்க வைக்கும் தீவிரவாதம்!'

அவனுடைய நீளமான கைகளில் ஒன்று படுக்கையில் கிடக்க, மற்றொன்று படுக்கைக்கு வெளியே தொங்கிக் கொண்டிருந்தது.

'இனிமேல் உங்களை சந்திப்பதென்றால் ஒரு நிபந்தனை. முதல் காரியமாக உங்கள் இரண்டு கைகளையும் பின்பக்கமாக வைத்து ஒரு கயிறு போட்டு கட்டி விட்டுதான் பக்கத்தில் உட்காருவேன். சம்மதமா? ஏன் என்றா கேட்கிறீர்கள்? உங்களுக்கு காரணம் தெரியாதாக்கும்? நம் உதடுகள் பேசிக் கொண்டும், காதுகள் கேட்டுக் கொண்டிருக்கும்போது என் கைகளுக்கு உங்கள் கைகளை எதிர்த்துப் போராட்டம் நடத்துவதே சதா வேலையாக இருக்கிறதே..ஒரு இடத்தில் ஒழுங்காக அவை இருந்தால்தானே? அங்கே, இங்கே என்று பதுங்கிப் பாய்ந்து என் கைகளை கலபமாக வென்று..பிறகு என் அவஸ்தைகள் பற்றி அவற்றுக்கு கொஞ்சமாவது கவலை உண்டா? இரவில், தனிமையில் என் தலையணையை உங்கள் முகமாக நினைத்து முத்தம்தான் கொடுக்க இயலும். ஆனால் என் தலையணைக்கு கைகள் ஏது? கைகள் கொண்ட தலையணைக்கு நான் எங்கேப் போவேன்?'

அவள் அவனை வெறித்துப் பார்த்தபடி வெகுநேரம் பொம்மை மாதிரி அப்படியே அமர்ந்திருந்தாள்.

அங்கிருந்த தொலைபேசியின் மணி அவளைக் கலைத்தது. திரும்பிப் பார்த்தாள். அது தொடர்ந்து அடித்துக் கொண்டிருந்தது.

எழுந்து அருகில் சென்றாள். எடுக்க கை நீண்டது. நின்றது. மீண்டும் வந்து அமர்ந்து கொண்டாள். அடிக்கட்டும்.

அது பிடிவாதமாக தொடர்ந்து அடித்தது. ஒரு கட்டத்தில் ஓய்ந்தது. எழுந்தாள். தொலைபேசி அருகில் வந்தாள்.

எடுக்க வேண்டும். எண்கள் தொட வேண்டும்.

"ஹலோ, போலீஸ் கண்ட்ரோல் ரூம்" என்று குரல் வரும்.

சொல்ல வேண்டும். என்னவென்று? வாக்கியம் அமைத்துப் பார்த்தாள்.

" சார், இங்க ஒரு கொலை நடந்துடுச்சி. விலாசம் சொல்றேன். வாங்க. கொலையை செஞ்சது நான்தான். இதைத் தவிர்க்க முடியலை. எனக்கு வேற வழி தெரியலை. கத்தியால குத்திட்டேன். நிறைய ரத்தம்! கொஞ்ச நேரம் துடிச்சான். அப்புறம் செத்துட்டான். நான் எங்கேயும் போக மாட்டேன். இங்கேயே இருப்பேன். வாங்க. வந்து என்னைக் கைது பண்ணிக்குங்க."

அவ்வளவுதானே? சரி, சொல்லி விடலாம்.

தொலைபேசி நோக்கி நீண்ட அவள் கை மீண்டும் நின்றது.

ஏன்? நான் ஏன் தண்டனை பெற வேண்டும்? நான் செய்தது குற்றமா இல்லை தர்மமா? நான் வழங்கியது தீர்ப்பு! நியாயமான ஒரு தண்டனை! ஒரு நேர்மையான நீதிபதியாகத்தான் நான் செயல்பட்டேன். என்னிடம் அதற்கான அதிகாரம் கிடையாது என்பதுதான் குறை.

நான் சரணடைந்து, குற்றவாளிக் கூண்டில் நின்று, தீர்ப்பு வாங்கி, தூக்கு மேடையேறி சாகத்தான் வேண்டுமா? நான் பாவம் இல்லையா? அப்பாவி இல்லையா? சட்டத்தின் பார்வையில் மட்டும்தானே குற்றவாளி? அதாவது... சட்டம் என்னைப் பார்த்தால்தானே?

இங்கே நடந்ததை யாரும் பார்க்கவில்லையே! இந்த பல்லி, இரைச்சிலை, புத்தகம், கட்டில், பெட்ஷீட் இவைகள் எல்லாம் சாட்சி சொல்லாதே.. பிறகு ஏன் நான் தண்டமாக வலிய சென்று சரணடைய வேண்டும்?

மாட்டேன்! நான் வாழ வேண்டும். அதற்கு இந்தக் கொலையை மறைக்க வேண்டும். எப்படி?

...தொடரும்



# அவள்



பவித்ரா ஆணியில் மாட்டியிருந்த லிட்டன் சைஸ் கண்ணாடியில் பார்த்து ஸ்டிக்கர் பொட்டு ஒட்டிக் கொண்டாள். துப்பட்டாவை சரி செய்து கொண்டாள். அடுப்பு பகுதிக்கு வந்து காபி கலந்து குடித்தாள். டவரா, டம்ளரைக் கழுவி கவிழ்த்து விட்டு மேஜையிலிருந்து கிளைபையும், வீட்டு சாவியையும் எடுத்துக் கொண்டாள்.

தன் போர்ஷனுக்கு வெளியே வந்து இரட்டைக் கதவுகளை இழுத்துப் பூட்டினாள். கதவில் முருகர் படம் ஒட்டியிருந்தது.



முற்றத்தில் கை பம்பில் தண்ணீர் அடித்துக் கொண்டிருந்த எதிர் போர்ஷன் இளைஞன், ''குட் மார்னிங்'' என்று இளித்தான்.

'' ஹலோ! இந்த ஸ்டோர்ல இருக்கிற அத்தனை பேருக்கும் நீங்க குட் மார்னிங் சொல்றீங்களா? அதென்ன எனக்கு மட்டும்? அதென்ன கரெக்ட்டா நான் வெளில வர்றப்பதான் தண்ணி அடிப்பீங்களா? சரி, அப்பப்ப ஒரு குட் மார்னிங், ஒரு இளிப்பு, பூகம்பம், கனாமின்னு எதாச்சும் பேச்சு கொடுக்கறது.. ஆச்சலவா உங்க மைண்ட்ல என்ன இருக்கு? எனக்குத் தெரியும். இது லவ் இல்லை. ஒரு வேளை நான் பதிலுக்கு இளிச்சி, சிக்னல் கொடுத்தா ஒரு நாளைக்கு உங்க போர்ஷனுக்குக் கூப்பிட்டு என்னைத் தொடணும். அதானே? சொல்லுங்க சார்! அதானே?'' ...என்று தினம் கேட்கத் தோன்றும். ஆனால் கேட்டதில்லை. பயமில்லை. சூழ்நிலை!

அவன் தான் ஸ்டோரின் ஓனர். எதிர்த்துக் கொண்டால் பல சௌகரியங்கள், சலுகைகள் ரத்தாகலாம். எனவே, வேறு வழியில்லாமல் பேசுவாள், உயிரே இல்லாமல்.

இன்றும் தனக்கே கேட்காமல், ''குட் மார்னிங்'' என்றாள்.

''லைப்ரரிக்கா?''

''இல்லை சார் ''

''பின்னே?''

''இன்டர்வியூ''

''எந்த கம்பெனி?''

''வழியுது சார் ''

''என்ன?''

''தண்ணி வழியுது பாருங்க பக்கெட்ல. வர்றேன்.''

''சொல்லாம போறீங்களே..''

''அதான் வர்றேனே..''

விரைவாக வெளியேறி சாலையில் நடந்தாள்.

தெருமுனையில் அந்த டெலிபோன் பூத்துக்குள் வந்து, ''இந்தாம்மா சாவி'' என்று வைத்து, ''நான் புறப்படட்டுமா?'' என்றாள்.

கண்ணாடி அணிந்த அம்மா, ''டிஃபன் சாப்பிட்டியா பவித்ரா?'' என்றாள்.

''இல்லம்மா ''

''உப்புமா பண்ணி வெச்சிட்டுத்தானே வந்தேன். பாக்கலையா?''

''பசிக்கலைம்மா. காப்பி போட்டு குடிச்சிட்டேன்.''

''சாமி கும்பிட்டியா?''

''ஒரு தடவை கும்பிடாமதான் போய்ப் பாக்கறேனே.''

''என்ன பேச்சு இது?''

''அம்மா, எனக்கு இது பதினெட்டாவது இன்டர்வியூ.''

''அதுக்காக நம்பிக்கையை விட்டுடறதா?''

''இதுவே உன் வற்புறுத்தலுக்காகதான் போறேன். பேசாம எனக்கும்

இதே மாதிரி ஒரு பூக் வெச்சிக் குடுத்துடும்மா. போதும்."

"அதுக்குதான் எம்.எஸ்.சி கெமிஸ்டிரி படிச்சியா?"

"உன்னை யார் படிக்க வைக்கச் சொன்னது? பணத்தை வேஸ்ட் பண்ணிட்டே. இப்பல்லாம் உத்தியோகம் படிப்புக்கு இடையாது. நடிப்புக்குதான்."

"இந்த மாதிரி அங்க போய் எடக்கு பேசாதே. சரி, போறப்போ தலையில பூ வாங்கி வெச்சிக்கிட்டுப் போ பவித்ரா."

"நான் சுயம்வரத்துக்குப் போகலை. வர்றேன். பஸ் போய்டும்"

வெளியேறி நடந்த மகளை கவலையாகப் பார்த்து பெருமூச்சு விட்டாள் அம்மா.

அந்தக் கம்பெனியின் அலுவலகம் ஐந்தாவது மாடியில் இருந்தது. நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப் பட்டிருந்த முப்பது பேரில் பத்து பேருக்குத்தான் அமர நாற்காலிகள் இருந்தன. மற்றவர்கள் அங்கங்கே நெருக்கடியாக சுவரில் சாய்ந்து நின்று கொண்டும், வராந்தாவில் நடந்து கொண்டும், படிக்கட்டுகளில் அமர்ந்துகொண்டும்காத்திருந்தார்கள்.

ரிசப்ஷனில் அமர்ந்திருந்த பெண் சிரித்துச் சிரித்து போனில் பேசி முடித்து வைக்கும்வரை காத்திருந்த பவித்ரா, "எக்ஸ்யூஸ் மீ.. வாட் ஈஸ் யுவர் சிஸ்டம்? என்னோட டர்ன் என்ன? எல்லாருக்கும் பத்து மணின்னு போட்டு அனுப்பிட்டிங்க. எல்லாரும் வந்தாச்சு. மணி இப்ப பதினொண்ணு. இதுவரைக்கும் ரெண்டு பேரைத்தான் உள்ள கூப்பிட்டிருக்காங்க. என்ன நியாயம் இது?" என்று படபடத்தாள்.

"என்ன நீங்க, இத்தனைக் கேள்வி கேக்கறீங்க? எந்த ஆர்டர்ல கூப்புடறாங்கன்னு எனக்குத் தெரியாது. அது அவங்க இஷ்டம். உங்களுக்கு அவசரமா வேலை இருந்தா போய்ட்டு வாங்க. அது உங்க இஷ்டம்."

"ஹலோ! என்ன நக்கலா? நீங்க ஈவினிங் அஞ்சி மணிக்கு கூப்பிட்டாக்கூட அது வரைக்கும் நாங்க வெய்ட் பண்ணிக்கிட்டே இருக்கணுமா? இண்டர்வியூவுக்கு வர்றவங்கன்னா என்ன அப்படி ஒரு அலட்சியம்?"

"ஏன் இப்படி தகராறு பண்றீங்க ?"

"தகவல் கேட்டா தகராறா?"

"அதானே? இவங்க கேக்கறதுல என்ன தப்பு?" என்று இன்னொரு பெண்ணும், இளைஞனும் ஆதரவுக் குரல் எழுப்ப.. அவள் எழுந்து, "இருங்க. ஃபஸ்ட் செக் பண்ணிட்டு வந்து சொல்றேன்" என்று உள்ளே சென்றாள்.

சிறிது நேரத்தில் வெளியில் வந்து ஒரு பட்டியல் பார்த்து, "யாருக்கு அப்புறம் யாருன்னு படிக்கிறேன். ஒரு ஆளுக்கு பத்து நிமிஷம். டைம் எல்லாம் கரெக்ட்டா சொல்ல முடியாது" என்று விட்டு பெயர்களைப் படித்தாள்.

பவித்ரா நான்காவது நபரில் இருந்தாள். காத்திருந்தாள். அடுத்த



பதினைந்தாவது நிமிடத்தில் அவள் முறை வர... கதவைத் தள்ளி உள் அறைக்குள் சென்றாள்.

தலை, மீசை எல்லாம் நரைத்து, கோட், டை ஆசாமி சைகையில் அவளை அமரச் சொல்லி, ஃபைல் வாங்கிப் புரட்டினார்.

" ரொம்ப கோபப் படுவீங்க போலிருக்கே?" என்றார்.

"என் கோபத்துக்கு யாரும் சர்ட்டிஃபிகேட் தரலையே..கோபப்பட வேண்டிய விஷயத்துக்கும் கோபப் படலைன்னா எனக்கும் இந்த மேஜை, நாற்காலிக்கும் வித்தியாசம் இல்லை சார்."

தன் மீசையைத் தடவியபடி அவளை நிமிர்ந்து பார்த்தார்.

...தொடரும்



# இவள்




"யார் பேசறீங்க?" என்றாள் அனிதா.

"நங்கநல்லூர்லேர்ந்து தாமோதரன்"

"தாமோதரன், நல்லா இருக்கிங்களா?"

"நல்லா இருக்கேன் மேடம். நீங்க எப்படி இருக்கீங்க?"

"நான் நல்லா இருக்கேன். தாமோதரன், உங்க ரேடியோ வால்யூமை கொஞ்சம் குறைக்கிறீங்களா?"

"குறைச்சுட்டேன் மேடம்"

"தாமோதரன், நீங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க?"

"டெய்லரிங் கடை வெச்சிருக்கேன்"

"அப்படியா? நல்லா தைப்பீங்களா?"

"சூப்பரா தைப்பேன் மேடம். உங்களுக்கு ஒரு ஜாக்கெட் தெச்சி அனுப்பட்டுங்களா?"

"அளவு தெரியாம எப்படி தைப்பீங்க?"

"குரலை வெச்சே என்னால கெஸ் பண்ண முடியுங்க"

"பயங்கரமான டைலரா இருப்பீங்க போலிருக்கே. ஆனா பாருங்க.. நான் கடிதார்தானே யூஸ் பண்ணுவேன் "

"அப்ப சுடிதார் தெச்சி அனுப்பட்டுமா?"

"வேணாம். நீங்க சொன்னதுக்கே தேங்க்ஸ். உங்களுக்கு என்ன பாட்டு வேணும்?"

"காதலன் படத்திலேருந்து என்னவளே.. அடி என்னவளே பாட்டு போடுங்க மேடம்"

"காதலன் படத்திலேர்ந்து என்னவளே பாட்டா? அந்தப் பாட்டு உங்களுக்கு ஏன் ரொம்பப் பிடிக்கும்?" என்று போர்ட் மைக்கில் பேசியபடி கம்ப்யூட்டரில் கிளிக் செய்து அந்தப் பாடலை செலக்ட் செய்து தயாராய் வைத்துக் கொண்டாள் அனிதா.

"என் லவ்வரைப் பாத்து நான் அடிக்கடி பாடற பாட்டு மேடம் அது"

"ஆஹா.. நீங்க லவ் பண்றீங்களா? வெரிகுட். உங்க லவ் சீக்கிரமே சக்ஸஸ் ஆக வாழ்த்துக்கள். அப்ப இந்தப் பாட்டை உங்க லவ்வருக்குத்தானே டெடிகேட் பண்றீங்க?"

"ஆமாங்க. எல்லா லவ்வர்சுக்கும்.."

"என்னது எல்லா லவ்வர்சுக்குமா? எத்தனைப் பேரை லவ் பண்றீங்க?"

"இல்லைங்க. என்னை மாதிரி லவ் பண்ணிட்டிருக்கிற எல்லா லவ்வர்சுக்கும் டெடிகேட் பண்றேன்."

"ஓகே தாமோதரன். உங்களுக்குப் பிடிச்சப் பாட்டைக் கேளுங்க"

மைக்கை அணைத்து விட்டு பாடலை ஒலிக்கச் செய்து விட்டு சக்கர நாற்காலியை பின் தள்ளி எழுந்து அனிதா சற்றுத் தள்ளி பாதியில் வைத்திருந்த காபியைக் குடித்து விட்டு காகிதக் கோப்பையை நசுக்கி குப்பைத் தொட்டியில் போட்டாள்.

அனிதாவிற்குப் பிறகு நிகழ்ச்சியைத் தொகுக்கத் தயாராய் இருந்த ஹம்சினி தன் கையிலிருந்த ஸ்க்ரிப்ட் காகிதத்தில் திருத்தம் செய்தபடி, "அனிதா, சனிக்கிழமை ஏதாச்சும் ப்ரோக்ராம் இருக்கா உனக்கு?" என்றாள்.

"ஒரு வெட்டிங் ரிசப்ஷன் இருக்கு"

"யாரு?"

"என் ஹாஸ்டல் மேட். என்ன விஷயம்?"

"ரூமிக்கு டிக்கெட் புக் பண்ணியிருந்தேன். பரணிக்கு திடீர்னு ஒரு கிளாஸ் வொர்க் வந்துடுச்சாம். ப்ளடி வர முடியாதுன்னுட்டான்"

"ஸாரிப்பா. முக்கியமான கல்யாணம். ஒரே ஹாஸ்டல்ல தங்கியிருக்கோம். போனாதான் நல்லாருக்கும்"

"சரி, சரி. விடு. நோ ப்ராப்ளம்"

அனிதா தன் குதிரைவால் கூந்தலை டைட் செய்து கொண்டு போர்டுக்கு முன்பாக வந்து அமர்ந்து. பட்டனை கீழே இழுத்து பாடலை ஃபேட் செய்துவிட்டு தொலைபேசி அழைப்பில் காத்திருந்த அடுத்த அழைப்பாளரிடம், "ஹலோ, யார் பேசறீங்க?" என்றாள்.

"கும்மிடிப்பூண்டிலேர்ந்து ருக்மணி பேசறேங்க"

"ருக்மணி, நல்லா இருக்கிங்களா?"

"நல்லா இருக்கேங்க. நீங்க எப்படிங்க இருக்கிங்க?"

"ரொம்ப நல்லா இருக்கேன். ருக்மணி, என்ன பண்றீங்க?"

"காய்கறி கடை வெச்சிருக்கேங்க"

"வியாபாரம் எல்லாம் எப்படி இருக்கு?"

"நல்லா இருக்கு. அனிதா, உங்க குரல் ரொம்ப நல்லா இருக்குங்க, அழகா பேசறீங்க. உங்களை எனக்கு ரொம்பப் பிடிக்கும்."

"அப்படியா? ரொம்ப தேங்க்ஸ்"

"எங்க வீட்டுக்கு வருவீங்களா?"

"வந்தாப் போச்சு. வந்தா என்ன குடுப்பீங்க?"



"பெரிய விருந்து கொடுக்கறேங்க"

"உங்க கடைலேர்ந்தே காய்கறி எடுத்து சமைச்சிப் போடுவீங்களா?"

"ஆமாங்க. எப்ப வர்றீங்க?"

"ரொம்ப தேங்க்ஸ். நீங்க சொன்னதே சாப்பிட்ட மாதிரி இருக்கு. உங்களுக்கு என்ன பாட்டு வேணும்?"

"ஆட்டோகிராஃப் படத்திலேர்ந்து சினேகா பாடுமே, அது என்ன பாட்டு?"

"ஒவ்வொரு பூக்களுமே.."

"அதான்..அந்தப் பாட்டைப் போடுங்க. அதைக் கேக்கறப்பவே மனசைப் பிசையுதுங்க."

"சரி, போடறேன். கேளுங்க." என்று அழைப்பைக் கத்தரித்துவிட்டு மைக்கில், "இந்தப் பாடலோட இந்த நிகழ்ச்சி முடியுதுங்க. 'கலாய்க்கலாம் வாங்க' நிகழ்ச்சிலே உங்களை எல்லாம் கலாய்க்கிறதுக்கு ஹம்சினி ரெடியா இருக்காங்க. ஸ்டே ட்யூன்ட். வித் இட்..யுவர் அனிதா சன் சைனிங் ஆஃப்! ரேடியோ மிர்ச்சி. இது செம ஹாட் மச்சி..." -என்று விரைவாக, ஸ்டைலாக சொல்லி மைக்கை அணைத்து. பாடலை ஒலிக்கச் செய்துவிட்டு எழுந்தாள் அனிதா.

கழற்றி வைத்திருந்த ரிஸ்ட்வாட்சை கட்டிக் கொண்டு, கைக்குட்டையை எடுத்து கைப்பைக்குள் வைத்து தோளில் மாட்டி, செல்போன் எடுத்துக் கொண்டு, "ஹம்சினி... சீ யூம்மா" என்றாள்.

அந்த ரெக்கார்டிங் அறையிலிருந்து வெளியேறி வராந்தாவில் நடந்தாள். மற்றொரு அறைக் கதவைத் தள்ளித் திறந்து, "புவன், புறப்படறேன். பை" என்றாள்.

பாக்கெட்டில் பேனா செருகியபடி திரும்பிய புவன், "ஒரு நிமிஷம் அனிதா. நானும் புறப்பட்டாச்சு" என்றான். அவன் தன் பொருள்களை சேகரித்துக் கொண்டு வரும்வரைக் காத்திருந்து, பிறகு அவனோடு லிஃப்ட் நோக்கி நடந்தாள் அனிதா. லிஃப்ட்டுக்காகக் காத்திருந்தபோது அவன் கையடக்க சீப்பு எடுத்து தலைவாரிக் கொண்டான்.

"ஒரு புது ப்ரோக்ராம் பத்தி கண்ணன் சொன்னாரா?"

"சொன்னார்"

"எனக்கு அந்த கான்செப்ட் சுத்தமா பிடிக்கலை. க்ளிக் ஆகாதுன்னு படுது. நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"அந்த ஏரியாவுல தலையை நுழைக்கிறதுக்கு எனக்கு உரிமை இல்லைன்னு நினைக்கிறேன்"

"நீங்களும் இந்த எஃப்.எம். ரேடியோவுல ஒரு அங்கம்."

"ஆனா என் போஸ்ட்டுக்கு சில எல்லைகள் இருக்கு புவன்"

"கண்ணன்கிட்ட என்ன சொன்னீங்க?"

"இந்தப் புது ப்ரோக்ராமை நீங்கதான் பண்றீங்கன்னு கண்ணன் சொன்னார். சரின்னு சொன்னேன்."

"அப்ப உங்களுக்கு இந்த கான்செப்ட் பிடிச்சிருக்கா?"

''ஹோட்டல் முதலாளி சொல்ற அயிட்டத்தை சமைக்கிறதுதான் சமையல்காரன் வேலை. அவனுக்குப் பிடிச்சதை மட்டும் சமைக்க முடியாது புவன்''

''உங்ககிட்ட பேச முடியாது. சரி, உங்க அபிப்ராயமாவது சொல்லுங்களேன்''

''அப்படிக் கேட்டா...இந்தப் ப்ரோக்ராம் க்ளிக் ஆகறது சந்தேகம்''

''இதைத்தான் நாளைக்கு மீட்டிங்ல நான் சொல்லப் போறேன். ஒரு மாரல் சப்போர்ட்டுக்காகத்தான் கேட்டேன்.''

''புவன்..''

''கவலைப்படாதிங்க. நீங்க இப்படிச் சொன்னீங்கன்னு போட்டுக் கொடுத்துட மாட்டேன்''

லிஃப்ட் வந்ததும், நுழைந்து பட்டன் அழுத்த.. கீழ் நோக்கி அது இறங்கத் துவங்கியது. மௌனமாகப் பார்த்துக் கொண்டார்கள்.

கீழே வந்ததும் வெளிப்பட்டு பார்க்கிங் பகுதியில் அவள் தன் ஸ்கூட்டி எடுக்க, அவன் தன் பைக்கை எடுத்தான்.

''அனிதா, நாளைக்கு லஞ்ச் என்னோட சாப்பிட முடியுமா?''

''ஏன்?''

''சும்மாதான். ஒரு விஷயம் பேசணும்''

''சரி'' என்றாள். வண்டியை ஸ்டார்ட் செய்தாள்.

கோட்டூர்புரத்தில் அந்த வொர்க்கிங் வுமன்ஸ் ஹாஸ்டலின் காம்ப்பவுண்டுக்குள் வந்து வண்டிகள் நிறுத்தும் ஆஸ்பெஸ்டாஸ் கூரைக்குக் கீழே நிறுத்திவிட்டு நடந்தாள்.

கட்டிடத்தின் படிகளில் ஏறி இரண்டாவது மாடியிலிருந்த தன் அறைக்கு வந்து கதவைத் தட்டினாள். கதவைத் திறந்த ஜான்சி நைட்டியில் கையில் ஆங்கில நாவலுடன் இருந்தாள்.

''அனிதா, உன் புருஷன்கிட்டேர்ந்து லெட்டர் வந்திருக்கு'' என்று அவள் சொன்னதும் கோபத்தில் முகம் சிவந்தாள் அனிதா.

...தொடரும்



# அவன்




எப்படி? எப்படி இந்தக் கொலையை மறைப்பது?

அப்படியே விட்டுவிட்டு கொலை ஆயுதம் கத்தியை மட்டும் எடுத்துக் கொண்டு என் பொருள்களோடு வீட்டைப் பூட்டிக் கொண்டு புறப்பட்டு சென்றுவிடலாம். இந்த நிகழ்ச்சியைவிட்டு உடனே விலகி விடலாம்.

புறநகர் பகுதியில் அனாதையாக இருக்கும் வீடுதான் இது. சுற்றிலும் அநேகமாகாக காலி மனைகள். மிக தூரத்தில் ஒரு வீடு. பிறகு இன்னும்



தூரத்தில் ஒரு வீடு.

இங்கே நாங்கள் வந்ததை யாரும் பார்க்கவில்லை. இந்த இரண்டு நாட்களில் யாரோடும் பழக்கமில்லை. பழக்கத்திற்கு மனிதர்கள் இல்லையே. வேலைக்காரி, பால்காரன், பேப்பர்காரன், காய்கறி, சலவை என்று எந்த ஏற்பாடுகளும் செய்யவில்லையே.

ஆனால் இரண்டு நாட்கள் கழித்து பிணம் அழுகத் துவங்கி நாற்றம் வெளியே வரும்! அது போலீசை வரவழைத்து விடும்.

கூடாது. எனில் பிணத்தை ஏதாவது செய்தாக வேண்டும். என்ன செய்யலாம்?

வீட்டின் பின்புறம் தண்ணீர் இல்லாததால் புறக்கணிக்கப்பட்டு மேலே நாலு பலகைகள் போட்டு மூடி வைக்கப்பட்டிருக்கும் கிணறு அவள் நினைவுக்கு வந்தது.

அதுதான் சரி என்று தீர்மானித்தாள்.

வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வைத்துவிட்டு மறுபடி அறைக்குள் வந்தாள்.

கட்டிலில் கிடந்த அவனை நெருங்கினாள். அவன் போட்டிருந்த மோதிரம், கிங்ஸ் செயின் மற்றும் கெடிகாரத்தைக் கழற்றி வைத்தாள். படுக்கையின் பெட்ஷீட்டோடு சேர்த்து வலுவாக இழுத்தாள். தொம்மென்று தரையில் விழுந்தான். தவறு, விழுந்தது. அப்படியே பெட்ஷீட்டைப் பிடித்து இழுத்துச் செல்வது மொசைக் தரையில் கொஞ்சம் சுலபமாகவே இருந்தது.

பின்புறம் இரண்டு படிக்கட்டுகளில் இறக்கினாள். முக்கால் நிலவின் வெளிச்சம் போதுமானதாக இருந்தது.

கிணற்றை நோக்கி மண்தரையில் இழுத்துச் செல்வதுதான் கொஞ்சம் சிரமமாக இருந்தது.

கிணற்றின் மேல் போட்டு வைக்கப் பட்டிருந்த மரப் பலகைகளை எடுத்து ஓரமாக வைத்தாள்.

கிணற்றின் கைப்பிடிச் சுவரின் மேல் பிணத்தை பெட்ஷீட்டால் ஒரு மூட்டை மாதிரி சுருட்டித் தூக்கி வைப்பதற்குள் வியர்த்து விட்டது.

யோசிக்காமல் உள்ளேத் தள்ளினாள். முப்பதடி ஆழத்திற்குப் பயணப்பட்டு பொத்தென்று விழுந்தது. உள்ளே எட்டிப் பார்த்தாள். அரைகுறையாகத் தெரிந்தது.

மீண்டும் வீட்டுக்குள் வந்தாள். அவன் சம்பந்தப்பட்ட உடைகள், சூட்கேஸ், சிகரெட், புத்தகம் என்று கவனமாக எதையும் விடாமல் சேகரித்து அவனுடைய செருப்புகள் உட்பட கொண்டு வந்து கிணற்றுக்குள் போட்டாள்.

பாத்ரூமில் பக்கெட்டில் தண்ணீர் எடுத்து வந்து பார்த்துப் பார்த்து ரத்தக் கறைகளை துணி போட்டுத் துடைத்து சுத்தம் செய்தாள்.

சமையலறையிலிருந்து கெரசின் டின்னும் தீப்பெட்டியும் எடுத்துக் கொண்டு மறுபடி கிணற்றடிக்கு வந்தாள்.

மூடி திறந்து கெரசின் முழுக்க கிணற்றுக்குள் கொட்டினாள். தீக்குச்சி கிழித்து உள்ளேப் போட... அது பாதி வழியில் அணைந்து போனது. ஒரு காகிதத்தில் பற்ற வைத்து, எரியும் காகிதத்தை உள்ளேப் போட்டாள்.

இப்போது கிணற்றுக்குள் குப்பென்று பற்றிக் கொண்டு எரியத் துவங்கியது.

அந்த மரப் பலகைகளை எடுத்து கிணற்றை மூடினாள். பிறகு பின்புறக் கதவை மூடிவிட்டு பாத்ரூம் வந்தாள்.

உடைகளைக் களைந்துவிட்டு ஷவரைத் திருகி அப்படியே நின்றாள். அவள் முகத்தில் கடந்த தண்ணீருடன் கொஞ்சம் கண்ணீரும் கலந்தது.

ஏன்? ஏன் இப்படியெல்லாம் எனக்கு நடக்க வேண்டும்?

கடவுளே! என் வாழ்க்கையில் கொலை! நான் ஒரு கொலைகாரி! சட்டம் என்னைத் தூக்குகிறதோ இல்லையோ.. சாகும் வரை என் மனசாட்சி என்னை விடாமல் துரத்தப் போகிறதே.. அதனிடமிருந்து நான் எப்படித் தப்பிக்க முடியும்?

இனி என் வாழ்வின் ஒவ்வொரு நிமிடங்களும் திக்திக் என்றே படபடத்துடன் கழியப் போகிறது. எதற்கு இந்த அவஸ்தை?என்ன இருக்கிறது இனிமேல்?இனி நான் வாழ்ந்து என்ன செய்யப் போகிறேன்?பேசாமல் தற்கொலை செய்து கொண்டு விடலாமா?

இந்தக் கேள்வி எழுந்த அடுத்த நிமிடமே 'முட்டாள்! இந்தத் தற்கொலையில் என்ன அர்த்தம் இருக்க முடியும்? இவனிடம் தோற்றுப் போவதாகத்தானே அர்த்தம்? நீ ஏன் தோற்க வேண்டும்? நீ என்ன தவறு செய்தாய்? நேசித்தது தவறா? நம்பியது தவறா? நீ வாழ வேண்டும். உனக்கு இன்னும் வாழ்க்கை இருக்கிறது. இந்த உலகம் இந்தத் துரோகியோடு முடிந்துவிடவில்லை' என்று மனதிற்குள் பலமான எதிர்ப்பு எண்ணமும் ஏற்பட்டது.

குளித்து முடித்து வேறு உடைகள் அணிந்தாள். தலை பின்னிக் கொண்டு, அந்த வீட்டிலிருந்த தனது பொருள்களை எல்லாம் சேகரித்தாள்.

ஒரு சூட்கேஸ், ஒரு தோள் பையில் எல்லாம் அடங்கி விட்டது.

ஒரு கிச்சன், ஒரு படுக்கையறை கொண்ட அந்தச் சிறிய வீட்டை நிதானமாகப் பார்த்தாள். ஒரு ஆணும், பெண்ணும் இந்த வீட்டில் இரண்டு தினங்கள் தங்கினார்கள் என்பதற்கு ஏதாவது அடையாளங்கள் தென்படுகின்றனவா என்று பார்த்தாள். எதும் தெரியவில்லை.

மணி என்ன? இரவு 9.10. இங்கிருந்து முக்கிய சாலைக்கு பத்து நிமிட நடையில் போய்விடலாம். அங்கே ஆட்டோ கிடைக்கும். பிடித்து நேராக பஸ் ஸ்டாண்ட். சரி. அங்கிருந்து? அது.. ஆட்டோவில் போகும்போது யோசிக்கலாம். முதலில் இங்கிருந்து சீக்கிரம் விலகிவிட வேண்டும்.

அவள் தன் சூட்கேசையும், பையையும் கையில் எடுத்த போது,



அறையிலிருந்த தொலைபேசி ஒலித்தது.

முதலில்கூட ஒருமுறை ஒலித்ததல்லவா? யார்? யாராய் இருக்கும்? எடுப்பதா, வேண்டாமா? இவன்தான் எண் கொடுத்திருக்க வேண்டும். அழைப்பது இவன் நண்பனாக இருக்க வேண்டும்.

எடுக்காமல் விட்டால் அந்த நண்பன் புறப்பட்டு நேரில் வந்துத் தொலைத்து விட்டால்? இவனைக் காணாமல் சந்தேகப் பட்டு போலீசில் தகவல் கொடுத்து விசாரணைத் துவங்கி விட்டால்?

எடுக்கலாம். சாமர்த்தியமாகப் பேசி சமாளிக்கலாம்.

நடுங்கும் விரல்களுடன் ரிசீவரை எடுத்தவள், "ஹலோ, யாரு?" என்றாள் குரலில் பதட்டம் காட்டாமல்.

...தொடரும்



# அவள்




பவித்ராவின் ஃபைலில் இருந்த சான்றிதழ்களைப் புரட்டியபடி மேனேஜர் கேட்டார். "ஃபுட் பால் இப்பவும் விளையாடறதுண்டா?"

"இல்லை சார். காலேஜ்ல விளையாடியதுதான் " என்றாள் பவித்ரா.

"நாடகத்தில் பங்கேற்புன்னு ஒரு சர்ட்டிஃபிகேட் இருக்கே.. என்ன பங்கு?"

"என் ஃப்ரெண்டு போட்ட நாடகத்தில் ஒரு கேரக்டர்ல நடிச்சேன்"

"ஐ சீ. நல்லா நடிப்பீங்களா?" என்று புன்னகைத்தார்.

"ஓரளவு நடிப்பேன் சார்"

"ரிசப்ஷனிஸ்ட்கிட்ட சத்தம் போட்டது நிஜமா இல்லை நடிப்பா?"

"இங்க நான் எதுக்கு நடிக்கணும்?"

"மத்தவங்க கவனத்தை ஈர்க்கறது சிலருக்குப் பிடிச்ச விஷயம் மிஸ் பவித்ரா" என்றார் விஷமச் சிரிப்புடன்.

"மன்னிக்கணும் சார். எனக்கு அப்படி மத்தவங்க கவனத்தை ஈர்க்கணும்னு அவசியமில்லை. எங்களுக்கு சரியான பதில் சொல்லாம காக்க வெச்சதுல எந்த நியாயமுமில்லைன்னு பட்டது. கேட்டேன். அதுக்கு அவங்க சொன்ன பதில் சரியில்லை. அதனால ஆத்திரப்பட்டேன்"

"வெல். இப்படித் திடீர்னு ஆத்திரப்பட்டது தப்புன்னு இப்ப ஃபீல் பண்றீங்களா?"

"இல்லை. என் ஆத்திரம் நியாயமானதுன்னுதான் இப்பவும் ஃபீல் பண்றேன்"

"இந்தப் போஸ்டுக்கு எந்த வகையில நீங்க தகுதியானவர்னு நினைக்கிறீங்க?"

"நீங்க கேட்டிருக்கிற கல்வித் தகுதி எனக்கு இருக்கு. வயசுத் தகுதியும் இருக்கு. இதைத் தவிர என்னைப் பத்தி சொல்லணும்னா நான் ரொம்ப சின்சியர். எதிலயும் பர்ஃபெக்ஷன் பாக்கறவ. டீம் வொர்க்கை மதிக்கிறவ. எதையும் பாசிட்டிவா பாக்கறவ. விடா முயற்சி என்கிட்ட இருக்கு. அடிப்படையா மென்மையான ரகம். ஒரு சின்ன வேலையைக்கூட அழகா, சுத்தமா, கட்டுப்பாட்டோட செய்றது என் பழக்கம். அதனால இந்தப் போஸ்ட் எனக்குக் கிடைச்சா உங்க கம்பெனிக்கு ஒரு நல்ல ஸ்டாஃப் கிடைப்பா"

"ரொம்ப நம்பிக்கையாப் பேசறீங்க. பணத்துக்கு நீங்க கொடுக்கற வேல்யூ என்ன மிஸ் பவித்ரா?"

"பணம் ஒவ்வொரு நபருக்கும் அத்தியாவசியமான தேவை சார். அதாலதான் வாழ்க்கைக்கு உதவ முடியும். பணத்து மேல மதிப்பு இருக்கணும். வெறி கூடாது. நேர்மையான வழில வர்ற நியாயமான பணத்துலதான் நிம்மதியும், திருப்தியும் இருக்கும். பணத்தை முடக்கறது தப்பு. ஒரு நிறுவனம் பணத்தை லட்சியமா வெச்சி செயல்படறப்போ அது சொஸைட்டிக்கு நல்லதுதான்"

"எப்படி?"

"நிறைய பணம் சேர்ந்தா உங்க நிறுவனம் கண்டிப்பா இன்னொரு தொழில்லதான் போடும். அப்போ எத்தனையோ ஆயிரம் பேருக்கு வேலை கிடைக்குமே"

"சமரசம் செய்துக்கறது சரியா?"

"சூழ்நிலையைப் பொறுத்தது. எதுக்காக எதை விட்டுக் கொடுக்கறோம்னு யோசிக்கணும். வெற்றிக்காக சௌகரியங்களை விட்டுக் கொடுக்கலாம். தன்மானத்தை விட்டுத் தரக் கூடாது. அதே தன்மானத்தை நட்புக்காக, உறவுக்காக விட்டுக் கொடுக்கலாம்"

"வெல். பத்திரிகைகள்ல படிச்சிருப்பீங்க. இந்தி சினிமா உலகத்துல சிலர் நடிகையாகறதுக்காக கற்பை விட்டுக் கொடுத்ததா ஒரு நடிகர் சொல்லி பரபரப்பாச்சே... அது உண்மையா இருந்தா உங்கக் கருத்து என்ன?" என்றார் நமுட்டுச் சிரிப்புடன்.

"வாய்ப்புக்காக உடம்பை மூலதனமா போடற கேவலமான பெண்கள் பெண் இனத்தையே கொச்சைப் படுத்தறாங்க"

"கற்பைப் பத்தின கண்ணோட்டம் இப்ப இளம் பெண்கள் மத்தில மாறியிருக்கிறதா சில சர்வே ரிப்போர்ட்ஸ் சொல்லுது. அப்படின்னா கற்பைப் புனிதமா நினைக்கிற சிந்தனை தேஞ்சிட்டிருக்கா?"

பவித்ரா அமைதியாக அவரைப் பார்த்தாள். வேகத்தைக் கட்டுப்படுத்தி, "தப்பா நினைக்காதீங்க சார். இந்தப் போஸ்டுக்கான இண்டர்வியூல கடைசி ரெண்டு கேள்விகளும் எந்த வகையில சம்மந்தப்பட்டிருக்குன்னு நான் தெரிஞ்சிக்கலாமா?" என்றாள்.

"உங்களைப் பத்தின முழு ஐடியா தெரிஞ்சுக்கத்தான்..."



"நீங்க வேலைதானே குடுக்கப் போறீங்க? உங்க பையனுக்கு என்னைக் கட்டி வைக்கவாப் போறீங்க? என் பதில்களை வெச்சிக்கிட்டு என்னை உங்களால முழுசா புரிஞ்சிக்க முடியுமா? உங்களை அசத்தறதுக்காக நான் போலியான கருத்துக்களை சொன்னா, அது உங்களுக்குத் தெரியுமா?"

"இல்லை மிஸ்..." என்று எரிச்சலுடன் பேசியவரை கையமர்த்திய பவித்ரா, "ஸ்டாப். நீங்க இந்த நிறுவனத்துல வேலை கொடுக்கறதா இருந்தாக்கூட எனக்கு இங்கே வேலை பார்க்க விருப்பமில்லை. என் ஃபைலைக் கொடுக்கறீங்களா?" என்று எழுந்து கை நீட்டினாள்.

இதை எதிர்பார்க்காத மேனேஜர், "வாட் இஸ் திஸ்! உங்க வீட்டுக்கு வந்து இந்தப் போஸ்ட்டுக்கு அப்ளை செய்யுங்கன்னு நாங்க கெஞ்சலை. நீங்க போகலாம்" என்று வேகமாக ஃபைலைத் தூக்கிப் போட்டார்.

முறைத்து விட்டு எடுத்துக் கொண்டாள்.

"இவ்வளவு வாய் ஆகாதுங்க. ஒரு அட்வைஸ் சொல்லட்டுமா?" என்றார் மேனேஜர்.

"வேணாம். நான் உங்களுக்கு ஒரு அட்வைஸ் சொல்றேன். வேலைக்கு இண்டர்வியூவுக்கு வர்றவங்களை எப்படி நடத்தறது, வக்கிரத்தனம் இல்லாம எப்படிக் கேள்வி கேக்கறதுன்னு பயிற்சி எடுத்துக்கிட்டு அப்புறம் இந்த சீட்ல உக்காருங்க. உங்க முதலாளி யாரோ.. அவரை நினைச்சாப் பாவமா இருக்கு. நிர்வாகம் பண்ணத் தெரியாத முதலாளி! பை!"

பவித்ரா படபடப்பாகப் பேசிவிட்டு வேகமாக வெளியேற, மேனேஜர் கர்ச்சீப் எடுத்து நெற்றியை ஒற்றிக் கொண்டார்.

புத்தகம் படித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்த பவித்ராவின் எதிரில் அமர்ந்து பரிமாறிக் கொண்டிருந்த அம்மா, "தட்டைப் பார்த்து சாப்பிடு. அப்புறம் படிக்கலாம்" என்றாள் கோபமாக.

"உனக்கு என் மேல கோபமாம்மா?"

"இல்லை.. ரொம்ப சந்தோஷம்! அவன் கேள்வி கேட்டானாம். இவளுக்கு ஆத்திரம் வந்திடுச்சாம். இப்படி எல்லாரையும் எடுத்து எறிஞ்சி பேசிட்டு வந்தா எவன்டி வேலை கொடுப்பான்?"

"நான் நியாயமாதான் நடந்துக்கிட்டேன். என் தன்மானம் உனக்குப் புரியலை"

"ஆமா. இவ பெரிய கலெக்டரு.. தன்மானமாம்!"

"கலெக்டருக்கு மட்டும்தான் தன்மானம் இருக்கணுமாம்மா?"

"என்னமோ போ! இது நல்லால்லை. அவ்வளவுதான் சொல்லுவேன்"

கதவு தட்டப்படும் ஓசை கேட்டது. அம்மா திறந்தாள். கையில் கவருடன் நின்றிருந்த இளைஞன், "ஸ்வஸ்திக் கெமிக்கல்ஸ் கம்பெனிலேர்ந்து வர்றேன். மிஸ் பவித்ரா இருக்காங்களா?" என்றான்.

...தொடரும்



# இவள் 2

அனிதா அறைக்குள் வந்து தனித்தனியாய் இருந்த இரண்டு ஒற்றை கட்டில்களில் ஒன்றில் அமர்ந்தாள்.

கட்டில் மேல் புத்தகங்கள், டேப்ரெக்கார்டர், கேசட்கள், அயர்ன் செய்து வந்த துணிகளின் அடுக்கு என்று எல்லாம் கலவையாக இருந்தன.

ஜான்சி மேஜை மீதிருந்து நீளமான பிரவுன் கவரை எடுத்து வந்து நீட்டினாள். '' பாக்கலையா? படி'' என்றாள்.

''அதில என்ன இருக்கும்ன்னு எனக்குத் தெரியும். இதைப் பிரிச்சி வேறப் படிக்கணுமா? அப்படியேக் கிழிச்சி குப்பைத் தொட்டில போட்டுடு ஜான்சி'' என்றாள் அனிதா.

புத்தகங்களை ஒதுக்கிவிட்டு அவளருகில் அமர்ந்த ஜான்சி, ''ஏன் பாசிடிவா நினைக்கக் கூடாது அனிதா?'' என்றாள்.

''எப்படி நினைக்கச் சொல்றே?''

'' நான் திருந்திட்டேன். அந்த ராஜலஷ்தான் பொண்ணை வெட்டி விட்டுட்டேன், என்னைமன்னிச்சிடு. இனிமே நாம சேர்ந்து வாழலாம்ன்னு உருக்கமா எழுதிருக்கலாமில்லையா? தப்பான வழிக்கு மாறின அவர் மனசு இப்ப நல்ல வழிக்கு மாறியிருக்கக் கூடாதா?''

அனிதா விரக்தியாகச் சிரித்தாள்.

'' ஜான்சி, இது உன் ஆதங்கம். என் மேல நீ வெச்சிருக்கிற பிரியத்தால,எனக்கு நல்லது நடக்கணும்னு விரும்பி சொல்றே. ஆனா எனக்கு அந்தாளைத் தெரியும். வாழ்ந்தவ.''

''பிரிச்சிப் பார்த்துடேன், எதுக்கு இவ்வளவு ஆர்க்யூ பண்றே?''

''ஜான்சி, உன்கிட்ட நான் எதை மறைச்சிருக்கேன்? நான் உடம்புல வாங்கின தழும்பும் உனக்குத் தெரியும். மனசுல வாங்கின தழும்பும் தெரியும். நீயே பிரிச்சிப் பாரு''

சற்றேத் தயங்கிவிட்டு ஜான்சி ஒரு கத்திரிக்கோல் எடுத்து கவரை கத்தரித்து உள்ளேயிருந்த காகிதங்களை கற்றையாக வெளியில் எடுத்தாள். மேலே இருந்த கடிதத்தை வாய்விட்டுப் படித்தாள்.

''அனிதா, உன் அலட்சியம் என்னை ஆத்திரப்படுத்துகிறது. பத்து நாட்கள் முன்பு நான் எழுதிய கடிதத்திற்கு பதில் இல்லை. உன் அலுவலகத்திற்கு போன் செய்து பேசிய போது அந்தக் காகிதங்களைக் கிழித்துப் போட்டு விட்டதாக பேசி பாதியிலேயே தொடர்பை துண்டித்தாய். உன் மனதில் என்னதான் நினைத்துக் கொண்டிருக்கிறாய்?



நமக்குள் ஒத்து வரவில்லை. பிரிந்து விட்டோம். நான் கட்டிய தாலியையும் கழற்றி வீசிவிட்டுப் போய் விட்டாய். இனி நாம் மறுபடி சேர்ந்து வாழ்வதற்கு எந்தவிதமான சாத்தியமும் இல்லை. அப்படி இருக்கும்போது பரஸ்பர விருப்பம் என்கிற அடிப்படையில் சட்டப்படி பிரிந்து விடலாம் என்று முடிவு செய்துதானே விவாகரத்து தொடர்பான காகிதங்களை உன் கையெழுத்துக்காக அனுப்பினேன்? அதில் கையெழுத்துப் போட்டு அனுப்புவதில் உனக்கு என்ன பிரச்சனை? அவரவர் வழிகளில் நிம்மதியாக, நிரந்தரமாக பிரிந்து வாழ, இந்த சட்டப்பூர்வமான விவாகரத்து முக்கியமும், அவசியமானதும் என்று உனக்குப் புரியவில்லையா? இதோ இத்துடன் மீண்டும் ஒரு செட் காகிதங்களை நீ கையெழுத்துப் போட்டு அனுப்புவதற்காக அனுப்பி வைத்துள்ளேன். ஒரு வாரத்திற்குள் இவற்றை எனக்கு அனுப்பி வை. அனுப்பாமல் மௌனம் சாதித்தாலோ அல்லது அலட்சியப் படுத்தினாலோ இனியும் நான் பொறுமையாக, அமைதியான வழியைக் கையாள மாட்டேன். எனக்கு வேறு வழிகள் தெரியும். அந்த வழிகளை மேற்கொள்ள என்னை நிர்பந்தப் படுத்த மாட்டாய் என்று நம்புகிறேன். இப்படிக்கு, சசிதரன்.''

படித்து விட்டு ஜான்சி நிமிர்ந்த போது அறைக்குள்ளேயே இருந்த வாஷ்பேசினில் அனிதா முகம் கழுவிக் கொண்டிருந்தாள்.

சோப்பு முகத்தோடு திரும்பிப் பார்த்து,'' இப்படித்தான் இருக்கும்னுஎனக்குத் தெரியும் ஜான்சி. அதான் கிழிச்சிப் போடுன்னு சொன்னேன்'' என்ற அனிதா தண்ணீர் போட்டு சோப்பைக் கழுவினாள். துண்டு எடுத்துத் துடைத்துக் கொண்டு சுவரில் மாட்டிய கண்ணாடிமுன்பாக வந்து நின்றாள்.

''உனக்கு என்ன குறைச்சல் அனிதா? அழகில்லையா? படிப்பில்லையா? பண்பில்லையா?உன்னோட வாழ அந்தாளுக்குக் குடுத்து வெச்சிருக்கணும். அவ உன்னை விட அழகா இருப்பாளா அனிதா? ''

''யாரு?''

''அதான்.. அந்த ராஜலஷ்தான் பொண்ணு''

''அழகா இருந்தா, துரோகம் நியாயமாய்டுமா ஜான்சி?''

''சும்மா கேட்டேன். அவளுக்கு எப்படி மனசு வருது? இன்னொரு பொண்ணோட வாழ்க்கையை கெடுக்கறமேன்னு கொஞ்சம்கூட உறுத்தாதா?''

''புரியலை ஜான்சி''

''டைவர்ஸ் வேணும்னு ஏன் இப்படிப் பறக்கறாரு? அவளைக் கல்யாணமே பண்ணிக்கப் போறாரா?

''கல்யாணம் பண்ணினாதானே அவனோட நாப்பது லட்சம் சொத்தை அனுபவிக்க முடியும் ? அவனுக்கு சொந்த வீடு இருக்கு. டிராவல்ஸ் நடத்தறா. பதினாறு கார் இருக்கு. இதையெல்லாம் வளைச்சிப் போட வேணாமா?''

''உங்கிட்ட டைவர்ஸ் வாங்காமயே இப்ப அவனோடதானே வாழ்ந்துட்டிருக்காரு?''

''தப்பு! அவ இவரை வெச்சிட்டிருக்கா. அதுக்குப் போய் இவரை உதறிட்டு வேற ஒருத்தனைப் பிடிச்சிடக் கூடாதில்ல? ரகசியமா இருக்கிற உறவை ஊரறிஞ்ச உரிமையான உறவா, சட்டப்பூர்வமா மாத்திக்கத்தான் மைனர் இப்படித் துடிக்கிறாரு''

''அவங்க ஹைதராபாத்ல இருக்காங்க. நீ இங்க சென்னைல இருக்கே.அங்க கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன பிரச்சினை?''

''சட்டப்படி செல்லாதே. ஒண்ணு நான் செத்துப் போயிருக்கணும். இல்லை சம்மதிக்கணும். இல்லை சட்டப்படி பிரிஞ்சிருக்கணும். நாளைக்கு நான் கேஸ் போட்டா அந்தாளை அரெஸ்ட் செய்ய முடியுமே.. சரி, நீ ரெடியாகலை?'' என்றாள் அனிதா ஒப்பனையைத் தொடர்ந்தபடி.

''ரிசப்ஷனுக்குத்தானே? அஞ்சி நிமிஷத்துல ரெடியாயிடறேன். இதை மட்டும் சொல்லு. உன் ஐடியாதான் என்ன?''

''என்ன கேக்கறே?''

''உனக்கு வெறுத்துடுச்சிதானே? மறுபடி ஒரு சந்தர்ப்பம் வந்தாக்கூட சேர்ந்து வாழத் தயாரா இல்லைன்றே. சனியன் விட்டுதுன்னு சட்டப்படி பிரிஞ்சிட வேண்டியதுதானே?''

''நான் எவ்வளவு வேதனை பட்டுக்கிட்டிருக்கேன்! இந்தாளு சொகுசா வாழ நான் உதவி வேற பண்ணணுமா? அதெல்லாம் முடியாது. என் சம்மதம் இல்லாம அங்கே கல்யாணம் நடந்தா, கண்டிப்பா கேஸ் போட்டு உள்ளேத் தள்ளிடுவேன் ஜான்சி''

''இல்லை.. நான் எதுக்குச் சொல்றேன்னா.. மறுபடி அலட்சியப் படுத்தினா..வேற வழியில்லை இறங்குவேன்னு மிரட்டற மாதிரி எழுதிருக்காரே...''

''என்ன வேற வழிகள்? என்னை ஆள் வெச்சிக் கொலை செய்வாரா? அதான் உன் பயமா?'' என்று சிரித்தாள் அனிதா.

''எப்படி உன்னால சிரிக்க முடியுது?''

''என்னா.. ஏற்கெனவே நான் செத்தாச்சு'' என்று சொல்லிவிட்டு அலமாரியின் அடுக்கிலிருந்து ஒரு புடவை எடுத்து உடுத்தத் துவங்கிய அனிதாவைக் கவலையோடு பார்த்தாள் ஜான்சி.

...தொடரும்





# அவன்

3

''ரத்னா டிராவல்ஸ்லேர்ந்து பேசறோம் மேடம்'' என்றது எதிர்முனை.

இதயத்தின் வேகமான துடிப்பை உணர்ந்தபடி ஆனால் நிதானமான குரலில், ''சொல்லுங்க, என்ன விஷயம்?'' என்றாள்.

''பெங்களூர் போறதுக்கு அம்பாஸிடர் கார் புக் பண்ணியிருந்தீங்க இல்லையா?''

அப்படியா? இந்த ராஸ்கல்தான் புக் செய்திருக்க வேண்டும்.

''என்ன மேடம் யோசிக்கறீங்க, இந்த நம்பர்தானே கொடுத்தார். மிஸ்டர் செல்வகணேசன்னு சொன்னார். அவர் வீடுதானே இது?''

செல்வகணேசன் என்று பொய்ப் பெயர் வேறு கொடுத்திருக்கிறானா?

''அந்த வீடுதான். சொல்லுங்க''

''காலைல ஆறு மணிக்கு வண்டி கேட்டிருந்தார். கொஞ்சம் லேட்டாகும் மேடம். ஏழு மணிக்குத்தான் வண்டி அனுப்ப முடியும். பரவாயில்லையா? சார் இருந்தா கொஞ்சம் கேட்டு கன்ஃபர்ம் பண்றீங்களா?''

''சார் தூங்கிட்டிருக்காரு. நீங்க வண்டி அனுப்ப வேணாம். கேன்சல் பண்ணிருங்க''

''ஜஸ்ட் ஒன் அவர்தானே மேடம் டிலே ஆகுது?''

''இல்லை. ஆறு மணிக்கு கண்டிப்பா கார் புறப்பட்டாகணும். நான் வேற ஏற்பாடு பண்ணிக்கறேன். நீங்க கேன்சல் பண்ணிருங்க. மறுபடி போன் பண்ணாதீங்க. நான் பாத்துக்கறேன். வெச்சிடுங்க''

சட்டென்று வைத்துவிட்டு கர்சீப் போட்டு ரிசீவரைத் துடைத்து விட்டு சூட்கேஸ் மற்றும் தோள் பையுடன் வீட்டின் எல்லா விளக்குகளையும் அணைத்துவிட்டு வாசலுக்கு வந்தாள்.

வீட்டைப் பூட்டி பூட்டின் மீது ரேகை துடைத்தாள். சாவியை கைப்பைக்குள் போட்டுக் கொண்டாள். முக்கிய சாலை நோக்கி முழுதும் இருட்டாயிருந்த அந்த உள் சாலையில் நிலவின் வெளிச்சத் துணையுடன் வேகமாக நடந்தாள்.

மண் சாலையில் அவள் செருப்புக்கடியில் மண் நெறிபட்டு வரும் சர்ரக் சர்ரக் ஓசை பிரதானமாகக் கேட்டது. மிக தூரத்திலிருந்து வாகனங்களின் தேய்ந்த சத்தங்கள். ஒரு சொம்பேறி நாய் கழுத்தை மட்டும் திருப்பிப் பார்த்து சம்பிரதாயமாக ஒரே ஒரு முறை கொட்டாவியா இல்லை குரைப்பா என்பது புரியாமல் ஒரு சத்தம் செய்துவிட்டு படுத்துக் கொண்டது.

யாரோ தனக்கு வெகு அருகாமையில் தொடர்வது போல ஒரு உணர்வு ஏற்பட்டுக் கொண்டேயிருக்க.. அடிக்கடி திரும்பிப் பார்த்து ஆறுதல் பட்டுக் கொண்டு நடந்தாள்.

முக்கிய சாலைக்கு வந்து சேர்ந்ததுமே ஒரு ஆட்டோ வேகம் குறைந்து வந்து நின்றது.

'எங்கம்மா போகணும்?''

''பஸ் ஸ்டாண்ட்''

''முப்பது ரூபா தர்றீங்களா?''

'' தர்றேன்'' என்று ஏறிக் கொண்டாள்.

ஐந்தே நிமிடத்தில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருந்த திருச்சி பஸ் ஸ்டாண்டில் இறங்கிக் கொண்டாள். பாதையோரம் குவித்து, கோபுரமாய் அடுக்கி பழங்கள் விற்றுக் கொண்டிருக்க, ஒரு ஆப்பிளும் இரண்டு வாழைப் பழங்களும் வாங்கிக் கொண்டாள். பக்கத்துக் கடையில் ஒரு தண்ணீர் பாக்கெட் வாங்கிக் கொண்டாள்.

பேருந்து நிலையம் உள்ளே வந்தாள். இரவு நேரப் பயணத்துக்கு தயாராக டீலக்ஸ் பஸ்கள் நிறைய நின்று கொண்டிருந்தன.

எங்கேப் போவது?

எதுவும் தோன்றாமல் தடுமாறிக் கொண்டிருந்தது மனது.

''பெங்களூர்..பெங்களூர்...அம்மா பெங்களூரா போறீங்க?'' என்றான் ஒரு கைலி ஆசாமி.

ஏனென்றே தெரியாமல், ''ஆமாம் '' என்றாள்.

''வாங்க. செமி ஸ்லீப்பரு. புறப்படப் போகுது. வாங்க. என் பின்னாடி வாங்க''

ஆட்டுக்குட்டி மாதிரி அவன் பின்னாலேயே சென்றாள். வளைந்து வளைந்து பல பஸ்களைக் கடந்து எஞ்ஜின் உறுமிக் கொண்டிருந்த டீலக்ஸ் பஸ்ஸிடம் வந்தார்கள்.

''ஏறுங்கம்மா. சீக்கிரம்''

ஏறிக் கொண்டாள்.

''பதினேழுல உக்காருங்க''

பதினேழு மட்டும்தான் காலியாக இருந்தது. பதினெட்டில் அமர்ந்திருந்த ஜிப்பா மனிதர் எழுந்து ஜன்னலை ஒட்டிய உள் சீட்டில் அவள் அமர வழி விட்டார். சீட்டுக்கு அடியில் சூட்கேஸ், பேக் இரண்டையும் வைத்துவிட்டு அவள் அமர்ந்ததும் பஸ் புறப்பட்டது.

பஸ் நபர் வந்து '' இருநூறு ரூபா கொடுங்க '' என்றதும் கைப்பையிலிருந்து எடுத்துக் கொடுத்தாள்.

சில விநாடிகளில் உள்ளே ஒரே ஒரு டல்லான நீல இரவு விளக்கு தவிர மற்றவை அணைக்கப்பட்டு இருள் சூழ, பஸ் சீரான வேகத்தில் நகர எல்லை தாண்டி விரைய, ஜன்னல் வழியாக ஜிலீரென்று காற்று முகத்தில் மோதியது கொஞ்சம் இதமாக இருந்தது.

நன்றாக சாய்ந்து அமர்ந்து விழிகளை மூடினாள்.



என்னை யாரும் தொடரவில்லைதானே? நடந்தது யாருக்கும் தெரியாதல்லவா? பெங்களூருக்கு என்னை போலீஸ் தேடி வராதுதானே?

சரி, காலையில் பெங்களூரில் இறங்கியதும் எங்கேப் போகப் போகிறேன்? அங்கே எனக்கு யாரையும் தெரியாதே! கன்னட மொழிகூடத் தெரியாதே! அங்கே என்ன செய்யப் போகிறேன்?

யோசிக்கலாம். நிதானமாக யோசிக்கலாம். இந்தப் பயணம் முழுக்க நிதானமாக யோசிக்கலாம்.

ஏன் என் வாழ்க்கையில் இப்படியெல்லாம்? இந்த நம்பிக்கை துரோகியைப் போய் அப்படி நேசித்தேனே.. அவனும் அப்படித்தானே நேசித்தான்? எல்லாம் நடிப்பா இல்லை நயவஞ்சகம் பிறகு வந்து சேர்ந்ததா?

''என் வாழ்க்கையில் கிடைத்த பொக்கிஷம் நீ! உன்னை மட்டும் நான் சந்திக்காம போயிருந்தா என் பிறப்புக்கே அர்த்தம் இருந்திருக்காது.''.. என்று எழுதி மனப்பாடம் செய்து அழகாக வழங்கப்பட்ட நடிப்பு என்று எப்படி நம்புவது?

''உன்னைப் பாக்கலைன்னா மனசு அநியாயத்துக்கு தவிக்கப் போகுது. உடம்பெல்லாம்சத்தியமா கொதிக்குது. நிஜமா பைத்தியம் பிடிக்கிற மாதிரி ஆய்டுது..'' என்ற போது அவன் முகத்தில் பிரதிபலித்த சத்தியமான ஏக்கம் அசத்தியமானது என்று நான்தான் புரிந்து கொள்ளாமல் போனேனோ?

அவ்வளவு முட்டாளா நான்? காதல் என்னை முட்டாளாக்கி விட்டது. என் புத்திசாலித்தனம், குறைந்தபட்ச சந்தேகம் எல்லாவற்றையும் மழுங்க வைத்து விட்டது.

தேவைதான் இந்த தண்டனை அவனுக்கு. இதைவிட உச்சமாக எந்த தண்டனையும் தர முடியாது. இரண்டு முறை கொலை செய்ய வாய்ப்பிருந்தால்கூட செய்யலாம்.

இரண்டென்ன.. இருபது முறைகூட செய்யலாம்.

சனப் பிறவி! இவன் உயிர் வாழ்வது இந்தச் சமுதாயத்திற்கு தீங்கானது. என்னைப் போல பாதிக்கப் படாமல் எத்தனையோ பெண்களின் வாழ்க்கையை நான் காப்பாற்றியிருக்கிறேன்.

ஆமாம், அவனிடமிருந்து வாட்ச், மோதிரம், செயின் எல்லாம் கழற்றி கட்டிலின் தலை மாட்டில் வைத்தேனே. அப்புறம் அவற்றை எடுத்து வைத்துக் கொள்ளவில்லையே!

கடவுளே!

அவை ஏதாவது ஒரு விதத்தில் என்னைக் காட்டிக் கொடுக்க வாய்ப்பு ஏதும் இருக்கிறதா?இந்தக் கேள்வி மனதில் முளைத்ததும் திடீரென்று பீதி சேர்ந்து கொண்டது.

...தொடரும்



# அவள் 3

அந்த இளைஞனின் கண்ணியமான தோற்றம், '' உள்ள வாங்க சார். ஒரு நிமிஷம்'' என்று வரவேற்று நாற்காலி காட்டச் செய்தது.

சமையலறையில் தரையில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த பவித்ராவிடம் வேகமாக வந்த அம்மா, '' நீ இன்டெர்வியூவுக்குப் போய்ட்டு வந்தியே, அந்த கம்பெனிலேர்ந்து யாரோ வந்திருக்காங்க. சீக்கிரம் வாடி. என்ன விவகாரமோ தெரியலையே'' என்றாள்.

''பாதி சாப்பாட்டுல எந்திரிக்கச் சொல்றியா? இருக்கச் சொல்லு. வர்றேன் ''என்று அவசரமே காட்டாமல் சாப்பிட்ட மகளை முறைத்து விட்டு கூடத்திற்கு வந்த அம்மா மின் விசிறியைப் போட்டாள்.

ஐந்து நிமிடம் கழித்து நிதானமாக கை துடைத்தபடி வந்த பவித்ரா அவன் எதிரில் ஸ்டூல் எடுத்துப் போட்டு அமர்ந்து, ''என்ன சார்?'' என்றாள்.

''மேடம், இன்னிக்கு இன்டெர்வியூவுக்கு எங்க ஆபீசுக்கு நீங்க வந்துப்போ எங்க மேனேஜரை அவமானப் படுத்தற விதமா பேசினீங்க. முதலாளி பத்தியும், நிர்வாகம் பத்தியும்கூட தரக்குறைவா பேசினீங்க. எங்க மேனேஜரும், முதலாளியும் ரொம்ப டென்ஷனா இருக்காங்க''

''ஓகோ. சரி, அதுக்கு என்ன?''

''மேனேஜர் ரூம்ல க்ளோஸ்ட் சர்க்யூட் கேமிரா வெச்சி தன் ரூம்லேர்ந்து முதலாளியும் பார்த்துக்கிட்டுதான் இருந்தார். நீங்க பேசினது எல்லாமே ரெக்கார்ட் ஆகியிருக்கு''

''ரைட், ஸோ வாட்? மேட்டரைச் சொல்லுங்க''

''உங்க மேல ஏன் மான நஷ்டஈடு வழக்கு போடக் கூடாதுன்னு நிர்வாகம் யோசிக்குது. எழுத்துப்பூர்வமா ஒரு நோட்டீஸ் கொண்டாந்திருக்கேன்''

''ஏன் சார் உங்க முதலாளிக்கும், மேனேஜருக்கும் மட்டும்தான் மானம் இருக்கா? எனக்கு இல்லையா? எனக்கு அது நஷ்டமாகலையா? உங்க மேனேஜர் நடந்துகிட்ட விதமும், பேசின விதமும் மட்டும் சரியா? வழக்கு போடறீங்களா? போடுங்க! தாராளமா போடுங்க! இது கூட உங்க நிர்வாகத்தோட திமிரைத்தான் காட்டுது'' என்றாள் பவித்ரா கோபத்துடன்.

நடுவில் புகுந்த அம்மா, '' நீ சும்மா இருடி.'' என்று அடக்கி, வந்தவனிடம்,'' இதோ பாருங்க சார். படிச்சிட்டு சரியான வேலை கிடைக்காம அலைஞ்சிட்டிருக்கா என் பொண்ணு. அந்த விரக்தியில ஏதோ தெரியாத்தனமா ரெண்டு வார்த்தை எடக்கா பேசிட்டா.



இப்பதான் நான் அவளை கண்டிச்சிட்டிருந்தேன். வழக்கு அது இதுன்னு சொல்லி எங்களை பயமுறுத்தாதீங்க. தாங்க இல்லாதவங்க. மலையோட மோதினா மண்டைதான் உடையும்னு எனக்குப் புரியும். இவ வயசு அப்படி! அனுபவம் இல்லை. உங்க முதலாளியை பெரிய மனசு பண்ணி மன்னிச்சி விட்டுடச் சொல்லுங்க சார்! எங்களாலதாங்க முடியாது'' என்று கெஞ்சியவள் கண்களில் கண்ணீரே துளிர்த்து விட்டது.

ஆத்திரத்துடன் அம்மாவைப் பார்த்த பவித்ரா, ''அம்மா, நீ எம்மா இவங்க கிட்ட கெஞ்சிட்டிருக்கே? என்ன ஆய்டும்? நேர்மையா நியாயமா பேசினா அதுக்கு வழக்கு போடுவாங்கன்னா போடட்டுமே..'' என்றாள்.

''இத பாருங்க மேடம்.. நிர்வாகத்துக்குன்னு ஒரு கௌரவம் இருக்கு. உங்க தனிப்பட்ட கோபத்தை எல்லாம் காட்டற இடம் அது இல்லை. ஒரு சின்ன நிபந்தனையையும் சொல்லச் சொன்னாங்க''

''என்ன?''

''ஏதோ ஒரு ஆத்திரத்தில அப்படித் தவறுதலாப் பேசிட்டேன், இதை பெரிசு படுத்தாம மன்னிச்சிக்கச் சொல்லிக் கேட்டுக்கறேன். அப்படின்னு உங்கக் கைப்பட ஒரு லெட்டர் எழுதிக் கொடுத்துட்டீங்கன்னா எந்த நடவடிக்கையும் வேணாம்னு முதலாளி சொல்லச் சொன்னார்'' என்றான் அவன்.

உடனே அம்மா, ''அவ்வளவுதானே சார்? கொடுப்பா. என் பொண்ணு எழுதிக் கொடுத்துடுவா. பவித்ரா, உன் ரோஷத்தை எல்லாம் மூட்டை கட்டி வெச்சிட்டு அவர் சொன்ன மாதிரி எழுதிக் குடுத்திடு. எந்திரி. பேப்பர் எடுத்துட்டு வா, சொல்றேன்'' என்று பரபரத்தாள்.

''அம்மா, ஏன் இப்படிக் கிடந்து குதிக்கிறே? இது என் சம்பந்தப் பட்ட விஷயம். நான் பாத்துக்கறேன். நீ கொஞ்ச நேரம் சும்மா இருக்கியா?'' என்று அதட்டிய பவித்ரா அவன் பக்கம் திரும்பி, ''சார், அதெல்லாம் எதுவும் எழுதித்தர முடியாது. நீங்க கொண்டாந்திருக்கற நோட்டீசையும் வாங்கிக்க மாட்டேன். நீங்க என்ன வேணாலும் நடவடிக்கை எடுத்துக்கலாம். புறப்படுங்க ப்ளீஸ்..''

அவன் எழுந்து கொண்டான்.

''நல்லா யோசிச்சிதான் சொல்றீங்களா மேடம்?''

'' ஆமாம். உங்க முதலாளிகிட்ட வறட்டு கௌரவத்துக்காக செலவு செஞ்சி வழக்கு போடறதுக்கு மூட்டை மூட்டையா பணம் இருக்கலாம். அதே மாதிரி என்னோட நியாயத்தைப் புரிஞ்சி ஆதரவு கொடுக்க இந்த சமுதாயத்துல நல்ல அமைப்புகள் நிறைய இருக்குன்னு சொல்லுங்க. இந்த மாதிரி ஏராளமான பத்திரிகைகள் இருக்குன்னு சொல்லுங்க. இந்த மாதிரி பூச்சாண்டி காட்றவேலை எல்லாம் வெச்சிக்க வேணாம்னு சொல்லுங்க''

அந்த இளைஞன் சற்றேத் தயங்கிவிட்டு தன் செருப்புகளை அணியத் துவங்கினான்.

''பவித்ரா, அவரை இருக்கச் சொல்லுடி. நான் சொல்றதைக் கொஞ்சம்

காது கொடுத்து கேளுடி. ஏழை சொல் அம்பலம் ஏறாதும்மா'' என்று தவித்தாள் அம்மா.

'' நீங்க புறப்படலாம் சார் '' என்றாள் உறுதியாக பவித்ரா.

அவன் வெளியேறி தன் பைக்கை ஸ்டார்ட் செய்ய, கதவை மூடித் தாழிட்டாள் பவித்ரா.

''உனக்கு ஏதாச்சும் கிறுக்குப் பிடிச்சிருக்கா பவித்ரா? அவங்க வம்பு பிடிச்சவங்களாகவேஇருக்கலாம். நீ செஞ்சதெல்லாம் நியாயமாவே இருக்கட்டும். நல்லவங்களுக்கு இது காலமா இருக்கா? பதிலுக்கு வம்பு பிடிக்க நம்மகிட்ட தெம்பு இருக்கா? ஆம்பளை இல்லாத வீடுடி. யாருடி நமக்கு ஆதரவுக்கு வருவா? நமக்கெதுக்கு இந்த வேண்டாத விவகாரமெல்லாம்?''

''இத பாரு. நீ என்ன வேணாலும் புலம்பிக்கோ. இல்லை, என்னை திட்டிக்கோ. என்னால செய்யாத தப்புக்கு மன்னிப்பு கேக்க முடியாது. அகங்காரத்துக்கும், அநியாயத்துக்கும் வளைஞ்சி கொடுத்துப் போக முடியாது'' என்ற பவித்ரா சென்று தண்ணீர் குடித்தாள்.

அம்மா நாற்காலியில் தொப்பென்று உட்கார்ந்தாள். சுவரில் காய்ந்த பூச்சரம் தொங்க படத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கணவரைப் பார்த்தாள்.

''நீங்க நிம்மதியாப் போய்ச் சேர்ந்துட்டீங்க. நான்தானே இங்க அவஸ்தை பட்டுக்கிட்டிருக்கேன். ரெண்டு பெத்தேன். யாராலயும் எனக்கு நிம்மதி இல்லை. இந்த வீட்ல என் பேச்சுக்கு என்ன மரியாதை இருக்கு? பேசாம என்னையும் சீக்கிரம் கூட்டிக்கங்க''

தன் கைப்பையை எடுத்துக் கொண்ட பவித்ரா, '' சொர்க்கத்துல உனக்கு விசா ஏற்பாடு செஞ்சிட்டு அப்புறமா கூட்டிக்குவாரு. புலம்பாம கொஞ்சம் பொறுமையா இரு. நான் லைப்ரரி போய்ட்டு வர்றேன். கதவை மூடிக்கோ'' என்று வெளியேறினாள்.

சாலையில் நடந்த அவளை இடைவெளி விட்டு தொடர்ந்து நடக்கத் துவங்கினான் அந்த ஆசாமி.

...தொடரும்



# இவள்




அனிதா ரேடியோ மிர்ச்சி அலுவலகத்திற்குள் நுழைந்து தன் நாற்காலிக்கு வந்து அமர்ந்தாள்.

''குட் மார்னிங் சொன்னேன் அனிதா'' என்றாள் அடுத்த கேபினிலிருந்து புன்னகையுடன் ஹம்சினி.

''குட் மார்னிங். ஒரு சின்ன டென்ஷன். கவனிக்கலை, ஸாரி''



என்றவள் நேற்றைய தமிழ் தினசரி எடுத்து ஒரு குறிப்பிட்ட செய்தியைத் தேடினாள்.

'செல்போனில் குறும்பு செய்த வாலிபர் கைது' என்ற தலைப்பில் வந்திருந்த செய்தியின் கடைசி பாராவைப் படித்தாள்.

'கமிஷனர் அலுவலகத்தில் இயங்கி வரும் சைபர் கிரைம்ஸ் பிரிவின் உயரதிகாரியான அஸிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன் நமது நிருபரிடம் கூறியதாவது! நகரத்தில் வக்கிரத்தனத்துடன் இதுபோல செல்போன் மூலம் பெண்களிடம் ஆபாசமாக பேசி தொந்தரவு செய்யும் குற்றவாளிகளை தேடிப் பிடித்து கடுமையான நடவடிக்கை எடுத்து வருகிறோம். பாதிப்புக்கு உள்ளாகும் பெண்கள் தைரியமாக தயக்கமின்றி எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டும். அவர்களின் பெயர்கள் பாதுகாக்கப்படும். என்னுடைய செல்போனில் நேரிடையாகவும் தொடர்பு கொள்ளலாம். எனது எண்...'

அந்த செல்போன் எண்ணை தனியாக ஒரு காகிதத்தில் குறித்துக் கொண்டு, செய்தித்தாளை மடக்கிப் போட்ட அனிதா உடனே தன்னுடைய செல்போனில் தொடர்பு கொண்டாள்.

''ஹலோ குட் மார்னிங். திஸ் ஈஸ் அஸிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன்'' என்று எதிர்முனையில் கம்பீரமாக குரல் வந்தது.

''குட் மார்னிங் சார். என் பேரு அனிதா. நேத்து பேப்பர்ல உங்க நம்பர் போட்டிருந்தாங்க.ரெண்டு மூணு நாளா எனக்கும் இதே மாதிரி ஒரு பிரச்சினை இருக்கு. உங்களை மீட் பண்ண டைம் கொடுத்தா நேர்ல விபரமா சொல்றேன் சார்'' என்றாள் பதட்டமான குரலில்.

''ரைட். இப்ப நான் என் ஆபிஸ்லதான் இருக்கேன். ஈவினிங் செவன் வரைக்கும்இங்கதான் இருப்பேன். எப்ப வேணாலும் வாங்க மேடம்''

''தேங்க் யூ சார். இன்னும் அரை மணி நேரத்துல வர்றேன் சார்'' என்று அவள் வைத்து விட்டு எழுந்து கொள்ள, ''என்னாச்சு அனிதா?'' என்றாள் ஹம்சினி.

''ஒன் அவர் பர்மிஷன் போட்டுட்டு அர்ஜெண்ட்டா வெளில போறேன். வந்து விபரமா சொல்றேன், ஓகே?'' என்று விலகி நடந்தாள் அனிதா.

வேல் பாண்டியன் நாற்பதை நெருங்கிக் கொண்டிருந்தாலும் முப்பத்தைந்துக்குள்ளாக மதிக்கிறமாதிரி இருந்தார். கம்பீரமான முறுக்கு மீசை. காது மடல்களில் லேசாக ரோமங்கள்.மேஜையை சுத்தமாக வைத்திருந்தார். கம்ப்யூட்டருக்கு எப்போதோ வைக்கப்பட்ட சந்தனம் நிறம் வெளுத்திருந்தது. மெல்லிசான சத்தத்துடன் ஸ்ப்ளிட் ஏ.சி இயங்கிக் கொண்டிருந்தது.

நான்கடுக்கில் அழகான ஃபைல்ஸ் ராக். அதில் ஒன்று பாதி வெளியே இழுக்கப் பட்ட நிலையில் இருந்தது. உறுத்தாத வெளிர் நீல திரைச்சீலைகள் அசைவின்றித் தொங்கின. மேஜையில்

கண்ணாடிக்கடியில் சத்ருகு ஜக்கிவாகதேவ் மற்றும் பல விசிட்டிங் கார்டுகள்.

ஓசை வராமல் காபி குடித்துக் கொண்டிருந்த அனிதாவைக் கூர்மையாகப் பார்த்தார். அவள் விரல்களில் லேசான நடுக்கமிருப்பதை கவனித்தார்.

அவள் கோப்பையை சாசர் மேல் வைத்து, கர்சீப்பால் உதடுகளை ஒற்றிக் கொண்டு நிமிர்ந்ததும், '' இப்ப பதட்டமில்லாம நிதானமா தெளிவா சொல்லுங்க. முதல்ல உங்களைப் பத்திச் சொல்லுங்க'' என்றார்.

''சார், நான் ரேடியோ மிர்ச்சில ரேடியோ ஜாக்கியா வொர்க் பண்றேன், கோட்டூர்புரம்ஏரியால வொர்க்கிங் விமன்ஸ் ஹாஸ்டல்ல தங்கியிருக்கேன். ரெண்டு மூனு நாளா ஒரு ராஸ்கல்...''

''கொஞ்சம் இருங்க. அந்த அனிதா நீங்கதானா? நான் உங்க ரசிகன் மேடம். உங்க குரல் எனக்கு ரொம்பப் பிடிக்கும். கேட்ட குரலா இருக்கேன்னு நினைச்சேன். ரொம்ப துள்ளலா, கவர்ச்சியாப் பேசுறீங்க. இந்தப் பொண்ணு சினிமால பாடலாமேன்னு நினைச்சிருக்கேன். என்ன பாக்கறீங்க ? எங்களுக்கும் ஓய்வு நேரம் இருக்கு. ரசனைகள் இருக்கு. மெஷினா என்ன? லட்சம் லட்சம் பேரை குரலால மயக்கிப் போடற உங்ககிட்ட போயி தொந்தரவு பண்றானா? என்ன பண்றான்? ''

''இரவும் காலைல ஒம்போதிலேர்ந்து ஒம்போதரைக்குள்ளே என்னை செல்போன்ல கூப்புடறான். என் நம்பர் அவனுக்கு எப்படிக் கிடைச்சதுன்னு தெரியலை. அநாகரிகமா பேசறான். குரலை மட்டும்தான் கேட்டிருக்கானாம். ஒடம்பை விக்க மாட்டியான்றான். பத்தாயிரம் தர்றேன் விப்பியா, உடம்பை விக்க மாட்டியான்றான். பத்தாயிரம் தர்றேன் வர்றியாங்கறான். என்ன திட்டினாலும் அவனுக்கு உறைக்க மாட்டேங்குது. ரொம்பகொச்சையால்லாம் பேசறான்''

''பிடிச்சிடலாம். சில திமிர் பிடிச்சப் பசங்களுக்கு இது ஒரு சுவாரசியமான பொழுதுபோக்காப் போய்டுச்சி. எந்த நம்பர்லேர்ந்து பேசறான்?''

''ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு லேண்ட்லைன் நம்பர்லேர்ந்து பேசறான் சார். தனியா குறிச்சிரிக்கேன்'' என்று மூன்று தொலைபேசி எண்கள் எழுதப்பட்ட காகிதத்தை நீட்டினாள்.

வாங்கிப் பார்த்தார். ''அவன் தன் பேரைச் சொன்னானா?'' என்றார்.

''இல்லை சார். உன் காதலன் அப்படிங்கறான். நான் ஹாஸ்டல்ல தங்கியிருக்கிறது அவனுக்குத் தெரியுது. இன்னிக்கு புளு கலர் சாரில ரொம்ப சூப்பரா இருக்கேன்னெல்லாம் சொல்றான். அதான் பயமா இருக்கு''

''பயப்படாதீங்க. ஆக தினமும் அவன் உங்களை வாட்ச் பண்றான். ஃபாலோ பண்றான். குறிப்பா உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் உண்டா?''

சற்றேத் தயங்கிய அனிதா, '' சார், நான் கல்யாணமானவ. ஆனா அவர் எனக்கு துரோகம் செஞ்சதால, கொடுமைப் படுத்தினதால மனக



வெறுத்து தாலியைத் தூக்கி விட்டு பிரிஞ்சி வந்துட்டேன். அவர் ஒரு சேட்டுப் பொண்ணை ரெண்டாந்தாரமா கல்யாணம் பண்ணிக்கப் போறார். பரஸ்பர விருப்பத்தின் பேர்ல பிரிஞ்சிடலாம்னு விவாகரத்து பேப்பர்ஸ்ல கையெழுத்து போடச் சொல்லி ரெண்டு தடவை அனுப்பி வெச்சார். நான் கிழிச்சிப் போட்டுட்டு பேசாம இருந்துட்டேன். போன்ல ரெண்டு தடவைப் பேசி என்னை மிரட்டினார். நான் வேற வழிகள்ல இறங்குவேன். உன்னால நிம்மதியா இருக்க முடியாதுன்னு கத்தினார். அவர்தான் ஒரு வேளை யார் மூலமோ இப்படியெல்லாம் அசிங்கமாத்தேன் பார்க்கச் குடுக்கறாரோன்னு எனக்கு சந்தேகமா இருக்கு சார்'' என்றாள்.

''அதையும் விசாரிச்சடலாம். அவர் எங்க இருக்கார்?''

''ஹைதராபாத்ல இருக்கார்''

''அட்ரஸ், போன் நம்பர் எழுதிக் கொடுங்க''

''நான் பிரிஞ்சி வந்து ஒரு வருஷம் ஆச்சி. இப்பவும் அதே அட்ரஸ்லதான் இருக்காரான்னு தெரியாது. வீட்ல போன் இல்லை'' என்று சொன்னபடி விலாசம் எழுதி நீட்டினாள். '' இது ஒரு சந்தேகம்தான். இதுக்கும் அவருக்கும் சம்பந்தம் இல்லாமகூட இருக்கலாம்''

''உங்க புருஷனை அப்புறம் விசாரிக்கலாம். முதல்ல இந்த மூணு போன் நம்பர்கள்ல விசாரிக்கறோம். நாளைக்கு அவன் மறுபடி பேசறப்ப நீங்க எப்படிப் பேசணும்னு சொல்றேன். கவனமா கேளுங்க''

''சொல்லுங்க சார்''

''அவன் மேல உள்ள எரிச்சலைக் குறைச்சி கொஞ்சம் குழைவாப் பேசுங்க. உனக்கு என்னதான் வேணும்னு கவர்ச்சியா வலை வீசுங்க. முதல்ல நேர்ல மீட் பண்ணலாம், எனக்கு உன்னைப் பிடிச்சிருந்தா சேர்ந்து ஜாலியா இருக்கலாம்னு தூண்டில் போடுங்க''

வேல் பாண்டியன் சொல்லச் சொல்ல தலையசைத்தபடி அமைதியாகக் கேட்டுக் கொண்டாள் அனிதா.

...தொடரும்



# அவன்




அதிகாலை ஐந்து மணிக்கு விடிவதற்கு சோம்பல் பட்டுக்கொண்டு புரண்டு படுத்துக் கொண்டது சாம்பல் நிற வானம்.

திருச்சி. வயலூர் சாலையில் சோமரசம்பேட்டைக்கு முன்பாக இடது புறம், எதிர்காலத்தில் பிசியாகப் போகிற கனவுடன் தற்போதைக்கு அறுவடை முடித்த வயல்மாதிரி அனாதையாக இருந்த ஜோதி நகரின்

மண் சாலையில் சைக்கிளை மிதித்துக் கொண்டிருந்தான் பாபு.

தன் நண்பன் தரப் போகிற ஐந்தாயிரம் பணம் அவன் முகத்தில் மலர்ச்சியை ஏற்படுத்தியிருந்தது. நான்கு தினங்கள் முன்பாக தங்களுக்குள் நிகழ்ந்த தொலைபேசி உரையாடல் நினைவுக்கு வந்தது.

'' பாபு, திருச்சி வர்றேன். வழக்கம்போல ரெண்டு இல்லை மூணு நாள்தான் தங்குவேன். போன தடவை ஏற்பாடு செஞ்சியே, அதே மாதிரி ஏதாச்சும் ஒரு எக்ஸ்டென்ஷன் ஏரியால வீடு வேணும். அதே வீடு இப்பவும் காலியா இருக்கா?''

''ஹவுஸ் ஓனர் பாம்பேலேர்ந்து வந்து அவனே குடியேறிட்டான்ப்பா. அது உனக்கு கிடைக்காதே.''

''எனக்கு லாட்ஜ் சரியா வராது பாபு''

''அதுதான் கிடைக்காதுன்னு சொன்னேன். ஜோதி நகர்ல வேற ஒரு வீடு இருக்குப்பா. பார்ட்டி குடும்பத்தோட அமெரிக்கால இருக்கிற பையன் வீட்டுக்குப் போயிருக்கு. வர ரெண்டு மூணு மாசமாகும். நான் டூப்ளிகேட் சாவி ரெடி பண்ணி வெச்சிருக்கேன்''

''பக்கத்துல, எதிர்ல?''

''ஒரு வீடுமில்லை. கொலையே செஞ்சாக்கூட உதவிக்கு யாரும் வர மாட்டான். மைக் வெச்சிக் கத்துனாக்கூட எவனுக்கும் கேக்காது''

''நான் கொலை பண்ணப் போறதில்லை பாபு''

''தெரியுமே. பார்ட்டி உயிரோட இருந்தாதானே உனக்கு உபயோகம். வியாபாரம் முடிஞ்சிடுச்சா? எங்க அனுப்பறே?''

''அநேகமா பெங்களூர்''

''எவ்வளவு பேசிருக்கே?''

''டேய்! அதெல்லாம் உனக்கு எதுக்கு?''

''சரி, எனக்கு எதுக்கு? எனக்கு அஞ்சாயிரம் வெட்டிடு''

''என்னடா ரெண்டு நாள் வாடகை அஞ்சாயிரமா?''

''ஆமா, இது சொந்த வீடு பாரு! எவ்வளவு ரிஸ்க் இருக்குன்னு உனக்குத் தெரியாதா? வீட்ல போன்கூட இருக்குப்பா''

''சரி சரி, சிணுங்காதே. நாளன்னைக்கு காலைல வருவோம். அந்த வீட்லயே இரு. அட்ரஸ் சொல்லு. நேரா வந்துடறோம். நான் அழைச்சிக்கிட்டு வர்றவளைப் பொறுத்தவரைக்கும் அது உன் வீடு. நீ என் ஃப்ரெண்டு. ஹாக மாதிரி எதுவும் உளறக் கூடாது. புரிஞ்சுதா?''

''ஓகேப்பா''

சைக்கிளை ஓட்டிக் கொண்டு அந்த தனி வீட்டிற்கு வந்து சேர்ந்து ஸ்டாண்ட் போட்டான் பாபு.

என்ன இது? வீட்டுக்குள் விளக்கு எதுவும் எரியவில்லையே.. 'ஆறு மணிக்கு டாக்ஸியை வரச் சொல்லியிருக்கிறேன். நீ ஐந்து மணிக்கு வந்து விடு. உன் உதவியும் தேவைப்படும்' என்றானே.. புறப்படும் போது வீட்டைப் பூட்டி அந்த டூப்ளிகேட் சாவியை ஒப்படைத்து விடுகிறேன் என்றானே.. இன்னுமா தூங்குகிறான்?



வீட்டின் வாசலுக்கு வந்த பாபு கதவில் பூட்டு தொங்குவதைப் பார்த்து ஆச்சரியப்பட்டான். தீக்குச்சி கொளுத்தி அந்த வெளிச்சத்தில் வாட்சில் மணி பார்த்தான். அதிகாலை 5.15.

அதற்குள்ளாகவாப் புறப்பட்டு விட்டான்? அதெப்படி? மயக்கத்தில் இருக்கும் அந்தப் பெண்ணை டாக்ஸியில் ஏற்ற என் உதவி தேவைப்படும் என்றுதானே முன்கூட்டி என்னை வரச் சொன்னான்?

நான்கூட 'புறப்படும்போது சாவியை வாசலில் உள்ள தொட்டிச் செடிகளில் ஒன்றில் போட்டு மண்ணால் மூடி விட்டுச் சென்றால் போதும், இப்போதே பணத்தைக் கொடேன்' என்றேனே..

புறப்படும் போது சாவியும் ஐந்தாயிரமும் தருவதாகச் சொன்னானே. டாக்ஸியை ஐந்து மணிக்கு வரச் சொல்லிவிட்டு என் பணத்துக்கு பட்டை நாமம் போட்டு விட்டானா?

பொறுக்கி ராஸ்கல்! செய்வதே அயோக்கியத்தனம்! அதற்குள்ளும் ஒரு உள் சதியா? வீட்டு சாவியை என்ன செய்திருப்பான்?

பாபு அவசரமாக அங்கிருந்த நான்கு செடிகளின் மண் தொட்டிகளில் மண்ணைத் தோண்டி விரல்களால் தேடி ஏமாந்து போனான். அதையும் வைத்துவிட்டுச் செல்லவில்லையா? போகிற வழியில் எங்காவது சாக்கடையில் வீசிவிட்டுப் போய் விட்டானா?

இவ்வளவு பெரிய எத்தனா அவன்?

ஆத்திரமாக உலாவிய பாபு ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து அவசர அவசரமாக ஊதினான்.

சென்ற தடவை மூவாயிரம் கரெக்ட்டாகக் கொடுத்தானே.. இந்த முறை நான் ஐந்தாயிரம் கேட்டதுதான் கோபமா? லட்சக் கணக்கில் அவன் கைக்கு பணம் கிடைக்கும் போது இரண்டாயிரம் பெரிய விஷயமா?

அந்தப் பெண்ணைதான் நான் பார்த்தேனே.. என்ன ஒரு நிறம்! என்ன ஒரு வாளிப்பு! நிச்சயம் இரண்டரையிலிருந்து மூன்று லட்சம் பேசியிருப்பான். சென்ற தடவை கூட்டி வந்தவள்கூட சுமார்தான்.

திட்டப்படி பாலில் தூக்க மாத்திரை கலந்து குடிக்க வைத்து, தவிரவும் போதை ஊசி போட்டிருப்பான்தானே? திட்டப்படி என் மனைவிக்கு திடீரென்று உடல் நலமில்லை, வைத்தியத்திற்காகப் போகிறோம் என்றுப் பொருத்தமாக டாக்ஸி டிரைவரிடம் சொல்லியிருப்பான்தானே?

அவன் திட்டப்படி எல்லாம் நடந்திருக்குமா இல்லை அதில் ஏதாவது குளறுபடியாகி விட்டதா? இப்போது நான்தான் ஏமாந்து நிற்கிறேனா? இல்லை ஒருவேளை அவனும் ஏமாந்து விட்டானா? என்னதான் நடந்திருக்கிறது?

எப்படித் தெரிந்து கொள்வது?

ரத்னா டிராவல்ஸ் போன் நம்பர் நான்தானே கொடுத்தேன். அங்கேதானே டாக்ஸி புக் செய்திருப்பான்? அங்கே போன் செய்து கேட்டால் தெரிந்துவிட்டுப் போகிறது.

பாபு மறுபடி சைக்கிளை மிதித்து முக்கிய சாலைக்கு விரைய.. வானமும் சோம்பல் நீங்கி விரைவாக விடியத் துவங்கியது.

முக்கிய சாலையில் இருந்த ஒரு டெலிபோன் பூத்துக்கு வந்த பாபு குட்டி அழுக்கு டைரி எடுத்து எண் பார்த்து டயல் செய்தான்.

"குட் மார்னிங் சார். தொந்தரவு பண்றதுக்கு மன்னிக்கணும். என் ஃப்ரெண்டு இன்னிக்கு காலைல ஆறு மணிக்கு பெங்களூர் போறதுக்கு வண்டி புக் செஞ்சிருந்தான். பிக்கப்புக்கு வண்டி ஜோதி நகருக்கு அனுப்பிச்சிட்டிங்களா?"

"அந்த ட்ரிப்பைதான் கேன்சல் பண்ணிட்டாரே அவரு.."

"அப்படியா?"

"ஆமாம். ஏழு மணிக்குதான் வண்டி அனுப்ப முடியும்னு நேத்து போன் செஞ்சோம். அவர் வைஃப் அப்படின்னா வேணாம், கேன்சல் பண்ணிடுங்க நாங்க வேற பாத்துக்கறோம்.அப்படின்னு சொல்லி கேன்சல் பண்ணிட்டாங்களே"

போனை வைத்த பாபு குழப்பமுற்றான். பெங்களூர் பயணம் பற்றி அந்தப் பெண்ணுக்கு எதுவுமே தெரியாதே.. இவ்வளவு தெளிவாக அவன் பேசி கேன்சல் செய்திருக்கிறான் என்றால்... ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்க வேண்டும். என்ன அது?

...தொடரும்



## அவள் 4

அந்த மாவட்ட நூலகத்தில் கெமிஸ்ட்ரி தொடர்பான தடியான ஒரு புத்தகத்தைப் படித்தபடி நடுநடுவே நோட்டுக்கில் சில வரிகளை குறிப்பெடுத்துக் கொண்டிருந்த பவித்ரா எதேச்சையாக நிமிர்ந்தபோது மேஜைக்கு அந்தப் பக்கம் சற்றுத் தள்ளி ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்த அந்த இளைஞன் தன்னையே உற்றுப் பார்ப்பதை கவனித்தாள்.

இவள் கவனிப்பதைப் பார்த்ததும் அவன் உடனே கையில் வைத்திருந்த புத்தகத்திற்குள் பார்வையைப் புதைப்பதையும் கவனித்தாள்.

வழக்கமாக சைட் அடிக்கும் இளைஞர்களைப் பார்த்தாலே அடி வயிற்றில் அமிலம் சுரந்து முகம் கடுகடுவென்றாகி விடும். பார்வை தாண்டி அபத்தமாக பேச்சு கொடுத்தாலோ,அங்க சேட்டைகள் செய்தாலோ, அவன் தொலைந்தான். குறைந்த பட்சம் அவனை நான்கு முறையாவது ஸாரி சொல்ல வைத்து விட்டுதான் நகர்வாள்.

ஆனால் என்னவோ தெரியவில்லை, இந்த இளைஞனின் முகம் கொஞ்சம் அப்பாவித்தனமாக இருக்கதா, இல்லை நெற்றியில் இருந்த



விபூதியா, இல்லை அவசரமாக பார்வையைத் திருப்பிய தடுமாற்றமா ஏதோ ஒன்று அவளுக்குள் சிரிப்பைத்தான் வரவழைத்தது.

இரண்டு நிமிடம் இடைவெளி விட்டு துப்பட்டாவை சரிசெய்வது போல திரும்பினாள். இப்போதும் அவன் மறுபடி இவளிடமிருந்து பார்வையை மீட்டு திசை திருப்பினான்.

பவித்ரா எழுந்து அந்த ஹாலின் மூலையில் இருந்த எவர்சில்வர் தண்ணீர் டிரம் அருகில் சென்றாள். சங்கிலி போட்டு கட்டி வைத்திருந்த டம்ளரில் தண்ணீர் பிடித்து குடித்தபடி ரகசியமாக அவனைக் கவனித்தாள்.

இப்போது அவன் இவளிடமிருந்து பார்வையை மட்டுமல்ல, முகத்தையே அவசரமாக திருப்பிக் கொள்ள வேண்டியிருந்தது.

என்ன வேண்டும் இவனுக்கு? எதற்காக இப்படி என்னைப் பார்வையால் கொத்துகிறான்?ஏதோ ஒரு முறை என்றால் சரி, அவன் பார்ப்பதை நான் கவனித்து விட்டேன் என்று அவனுக்கு உணர்த்திய பிறகும் இதென்ன அநாகரிகம்?

அன்று பஸ் ஸ்டாப்பில் ஒரு இளைஞன் நடந்து கொண்டது நினைவுக்கு வந்தது.

"எக்ஸ்க்யூஸ் மீ, இது உங்க கர்ச்சீப்பா பாருங்க" என்று புராதன கால டெக்னிக்காக எம்ப்ராய்டரி செய்த புதிய வெல்வெட் கர்சீப்பை என்னிடம் நீட்டி புன்னகைத்தான் அவன்.

"இது என்னோடதில்லை மிஸ்டர்!"

உடனே அவன் அருகில் வந்து குரலைக் குறைத்து, " இது உங்களோடதில்லைதான் மேடம். ஆனா உங்களுக்காக நான் வாங்கினது. உள்ளே ஒரு லெட்டர் இருக்கு. அப்புறமா மெதுவாப் படிச்சிப் பார்த்துட்டு நாளைக்கு பதில் சொன்னாப் போதும்" என்றவன் அவசரமாக என் கையில் கர்சிப்பைத் திணித்துவிட்டு வேகமாக விலகிச் செல்ல..

"ஹலோ! இருங்க! எங்க போறீங்க? நின்னு பேசிட்டுப் போங்க" என்று நான் குரல் கொடுப்பேன் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

தயங்கி நின்று தயங்கி அருகில் வந்தான். நெளிந்தபடி நின்றான்.

"எதையும் நான் உடனே செஞ்சிடுவேன். அதென்ன அப்புறம் படிக்கிறது.. இப்பவே படிச்சிட்டாப் போச்சு" என்று கர்ச்சீப்புக்குள்ளிருந்த மடிக்கப்பட்ட கடிதத்தை எடுக்க..

"இல்லைங்க. நீங்க அப்புறமா.."

"ஷ்! வெயிட் பண்ணுங்க" என்று அதட்டிவிட்டுப் படித்தேன்.

'என் மனதைத் தொட்ட இனிய குயிலே, உன் பெயர் தெரியாது. ஆனால் நீ எனக்காகப் பிறந்தவள் என்று தெரியும். என் வாழ்க்கை உன்னோடுதான் என்று என் இதயம் அடித்துச் சொல்கிறது. மனதில் உள்ளதை எல்லாம் கொட்ட நூறு குயர் நோட்டுக்கூட பத்தாது.

உன்னிடம் நிறைய பேச வேண்டும். நாளை மாலை ஐந்து மணிக்கு

கடற்கரையில் உழைப்பாளர் சிலை அருகில் காத்திருப்பேன். அவசியம் நீ வர வேண்டும். வரவில்லை என்றால் மறுநாள் தினத்தந்தியில் பார். வாலிபர் தற்கொலை என்று நான் அதில் ஒரு செய்தியாகியிருப்பேன். கரையில் பிணமாக ஒதுங்கியிருப்பேன். இது சத்தியம்! சத்தியம்! சத்தியம். இப்படிக்கு, உன் நினைவில் வாடும் பித்தன்.. பிரதாப்'

படித்ததும் எனக்கு கோபம், பரிதாபம் எல்லாம் மேலிட்டது.

"பிரதாப், எதுக்கு கடற்கரை? இப்பவே இங்கயே பேசிடலாமே. இதுக்குப் பேரு காதல் இல்லை! திமிர்! பைத்தியக்காரத்தனம்! முட்டாள் தனம்! வெட்டித்தனம்! உனக்கு என் பேர் கூடத் தெரியாது. ஆனா உன் இதயம் அடிச்சி சொல்லுதா? என்ன தெரியும் உனக்கு என்னைப் பத்தி? எனக்குக் கல்யாணமாகி ஒரு குழந்தை இருக்கு தெரியுமா? என்ன பாக்கறே? கழுத்துல தாலி தொங்கினாதான் அடையாளமா? குழந்தையை எப்பவும் இடுப்புல தூக்கி வெச்சிக்கிட்டுத் திரியணுமா? இப்ப நான் என் புருஷன்கிட்ட இதைக் கொடுக்கட்டுமா? அவர் ஆர்மில இருக்கார். இல்லை, போலீஸ்ல கொடுக்கட்டுமா?"

நான் படபடவென்று பொரியத் துவங்கியதும்..

"ப்ளீஸ்..கத்தாதீங்க மேடம். ஸாரி. எனக்குத் தெரியாது. நீங்க மேரேஜ் ஆனவங்கன்னு எனக்குத் தெரியாது. மன்னிச்சிடுங்க. அதைக் கிழிச்சிப் போட்ருங்க. ப்ளீஸ்.."

"இருப்பா! இப்ப நான் என்ன செய்வேன்? கடற்கரைக்கு வரலைன்னா நீ செத்துப் போயிடுவியே..அந்தப் பாவம் என்னை சும்மா விடாதே.."

"மேடம்.. விட்ருங்க.. அதான் மன்னிச்சுக்கங்கன்னு சொல்லிட்டேன்ல?"

"சொல்லிட்டா? அதெப்படி திடீர்னு உன் அமர காதல் அல்பாயுசுல செத்துப் போகுது? இத்தனை மேடம் இப்பப் போடறே! லெட்டர்ல மட்டும் நீ, வா, போன்னு என்னடா உரிமை வேண்டிக் கெடக்கு? இப்ப மரியாதையா நீ என்னோட பக்கத்து போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்தாகணும். வா!"

அவன் சட்டென்று என் கையிலிருந்த அந்த கர்ச்சீப்பையும் கடிதத்தையும் பிடுங்கிக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் ஓடத் துவங்கினான்.

ஒரு வேளை அதே இளைஞனா இவன்? சேச்சே! இல்லை. இவன் வேறு! ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி சாந்தமாகத்தான் முகம் இருக்கிறது. ஆனால் பார்வை மட்டும் விஷமம் செய்கிறதே..

பவித்ரா தன் கைப்பை மற்றும் நோட்புக்கை எடுத்துக் கொண்டு லைப்ரரியை விட்டு வெளியே வந்து அங்கே இருந்த வேப்ப மரத்தடி நிழலில் சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தாள்.

எதிர்பார்த்ததைப் போலவே அந்த விபூதி இளைஞன் அவசரமாக வெளியேறினான். அவன் கண்கள் அவளைத் தேடின. கண்டதும் அவன் கொஞ்சம் தள்ளியிருந்த சைக்கிள் ஸ்டாண்ட் சென்று அங்கே நின்று கொண்டு இங்கேப் பார்த்தான்.



பவித்ரா பொறுக்க முடியாமல் எழுந்து நேராக அவனிடம் வந்தாள்.

"ஹலோ..என்னை டாப் டு பாட்டம் பாத்து முடிச்சாச்சா? பிடிச்சிருக்கா? இப்ப என்ன, காதலிக்கணுமா இல்ல கல்யாணம் பண்ணிக்கணுமா?" என்றாள்.

"அய்யோ! என்னங்க இப்படியெல்லாம் பேசறீங்க?"

" ஓ! கல்யாணமெல்லாம் கிடையாதா? அப்போ கட்டிப் பிடிச்சி ரோட் உண்டா? இல்ல, அதுவும் இல்லையா? இந்நேரம் மனசுக்குள்ளே ரெண்டு பாட்டு முடிஞ்சிருக்கணுமே.."

"மேடம்! ஸாரி! நான் உங்களை எங்கயோ பாத்திருக்கேன். எங்க பாத்தேன்னு நினைவில்லை. அதான் யோசிச்சேனே தவிர.."

"பொய்! இதுவும் வழக்கமான டெக்னிக்தான்!"

"கொஞ்சம் நிறுத்தறீங்களா? ஞாபகம் வந்துடுச்சி. எங்க பாத்தேன்னு சொல்றேன்" என்றான் அவசரமாக.

...தொடரும்



# இவள் 4

"அப்ப நான் புறப்படட்டுமா சார்?" என்று எழுந்த அனிதாவைக் கையமர்த்திய அசிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன், "ஒரு நிமிஷம்" என்றார்.

மேஜை டிராயரிலிருந்து ஒரு விசிட்டிங் கார்டு எடுத்து, " இதுல என் வீட்டு விலாசம், போன் நம்பர் எல்லாம் இருக்கு. என்னோட இன்னொரு பர்சனல் செல் நம்பரும் தர்றேன்" என்று அட்டையின் பின்புறம் குறித்து நீட்டி , "எனி டைம் எந்த நம்பர்ல வேணாலும் கூப்பிடுங்க. ரொம்ப தெரியலைத் தெரியறீங்க. கவலைப்படாதீங்க. அந்தப் பொறுக்கியைப் பிடிச்சிடுவோம். நான் சொன்ன மாதிரியே பேசுங்க. ஓகே?" என்று புன்னகைத்தார்.

"சரி சார் " என்றவள் பின்னால் இருந்த கப்போர்டில் வைக்கப்பட்டிருந்த சில புகைப்படங்களைப் பார்த்தாள்.

வேல் பாண்டியன் முதல்வரிடம் விருது பெற்றபடி, வேல் பாண்டியன் குதிரையின் மேல், வேல் பாண்டியன் க்ளோஸப்பில் மீசையைத் தடவியபடி.

"சார், உங்க மேல பொது மக்களுக்கு ரொம்ப நல்ல இமேஜ் இருக்கு. நாங்க அடிக்கடி உங்க நடவடிக்கைகள், பேட்டிகள், அறிக்கைகள் பத்திப் பேசுவோம். நிறைய பேருக்கு போலீஸ் மேல ஒரு கோபம் எப்பவும்

இருக்கும். ஆனா நான் ரொம்ப மதிக்கிற போலீஸ் ஆபிசர்ஸ்ல நீங்களும் ஒருத்தர். ஒரு சாதாரண மீட்டிங்கா இருந்தா இதைத்தான் முதல்ல சொல்லியிருப்பேன். என் பிரச்சினையோட வந்ததால பதட்டத்துல என்னால கிப்ரியா எதுவும் பேச முடியலை. ஸாரி'' என்றாள்.

''பரவால்லை. புரியுது. உங்கப் பிரச்சினையை சரி பண்ணிடறேன். நீங்க என்மேல வெச்சிருக்கிற மதிப்புக்கு ரொம்ப தேங்ஸ்''

''இதையும் சொல்லியாகணும் சார். எங்க ஹாஸ்டல்ல ஒரு பொண்ணு உங்க ரசிகை சார். பொதுவா எல்லா ரூம்லயும் நடிகர்கள், பாப் பாடகர்கள் படங்களைத்தான் கத்தரிச்சு ஒட்டி வைப்பாங்க. அவ உங்க போட்டோவைக் கத்தரிச்சி ஒட்டி வெச்சிருக்கா''

'' ஐ ஸி! ஆச்சரியமா இருக்கே.''

'' நான் உங்களைப் பாத்துப் பேசினேன்னு சொன்னா என்னை ஏன் கூட்டிட்டுப் போகலைன்னு சத்தம் போடுவா. இஃப் யூ டோண்ட் மைண்ட்.. ஒரு ஆட்டோகிராஃப் போட்டுத் தர்றீங்களா சார்? அவ ரொம்ப சந்தோஷப் படுவா''

''அந்த அளவுக்கு நான் என்னங்க பண்ணிட்டேன்? யார் மேலயும் ஹீரோ வொர்ஷிப் கூடாதுன்னு அந்தப் பொண்ணுக்கிட்ட சொல்லுங்க. ரொம்ப உண்மையா பேசணும்னா.. சில சமயங்கள்லதான் நூறு சதவிகிதம் நேர்மையா கடமையைச் செய்ய முடியுது. சில சமயங்கள்ல அநியாயத்துக்கு அனுசரிக்கப் போக வேண்டியிருக்கு. ஏகப்பட்ட பாலிடிக்ஸ் இருக்குதுங்க. வெல்..அவங்க சந்தோஷத்தை ஏன் கெடுக்கணும்? இருங்க, கையெழுத்துப் போட்டுத் தர்றேன்''

வேல் பாண்டியன் 'உள்ளம் உயரட்டும்' என்று எழுதி தமிழில் கையெழுத்துப் போட்டு ஒரு காகிதம் தர, நன்றி சொல்லி வாங்கிக் கொண்டு புறப்பட்டாள்.அனிதா.

வேல் பாண்டியன் ராஜா அண்ணாமலைபுரத்தில் இருந்த தன் வீட்டிற்கு வந்த போது, கார் சத்தம் கேட்டு வேலைக்காரன் முத்து கதவு திறந்தான்.

தன் டிரைவரிடம் குறிப்பு சொல்லி அனுப்பிவிட்டு உள்ளே வந்தவரின் கையிலிருந்த பெட்டியையும், பழக் கவரையும் வாங்கிக் கொண்ட முத்து, ''அய்யா, பூரி செஞ்சிருக்கேன். மசாலா போதுமா, சட்னியும் செஞ்சிட்டுங்களா?'' என்றான்.

''போதும், நான் குளிச்சிட்டு வந்துடறேன். போன் எதுவும் வந்திச்சா?''

''உங்க தம்பிதான் பேசினாரு. நீங்க இன்னும் வீட்டுக்கு வரல்லைன்னதும் செல்லுல பேசிக்கறேன்னு சொன்னாரு''

''பேசிட்டான். நாலே நாது பூரி செஞ்சி ஹாட்பேக்ல வெச்சிட்டு நீ வீட்டுக்குப் புறப்படலாம் முத்து''

''சரிங்கய்யா. ஒண்ணும் அவசரமில்லை. நீங்க சாப்பிட்டப்புறம் புறப்படறேன்''



வேல் பாண்டியன் யூனிஃபார்மின் பட்டன்களைக் கழற்றியபடி தன் அறைக்கு வந்தார். ஹேங்கரில் மாட்டி, லுங்கி அணிந்து குளிக்கச் சென்றார். குளித்துவிட்டு ஜாளான ஒரு ஜிப்பா அணிந்து டைனிங் டேபிளுக்கு வந்தார். காத்திருந்த முத்து தட்டு வைத்து பூரியை எடுத்து வைத்து மசால் போட்டான்.

''அய்யா..மார்க்கெட் போனப்போ உங்க மாமாவைப் பாத்தேன். நீங்க பிடி கொடுக்க மாட்டேங்கறீங்கன்னு ரொம்ப வருத்தப்பட்டுப் பேசினாருங்கய்யா''

''அவருக்கு வேற வேலை இல்லை. நான் பல தடவை சொல்லிட்டேன். அவருக்குப் புரிய மாட்டேங்குது. விடு''

''தப்பா எடுத்துக்காதீங்கய்யா. அவரு ஆசைப்படறதுல என்னங்க தப்பு? சொந்தம் விட்டுப் போகக் கூடாதுன்னுதான் முதல்ப் பொண்ணை உங்களுக்குக் கட்டி வெச்சாரு. அந்த மகாலட்சுமிக்குக் கொடுத்து வைக்கலை. வியாதி வந்து சாமிகிட்ட போய்டுச்சி. இப்ப ரெண்டாவது பொண்ணைக் கட்டி வெச்சி மறுபடி மருமகனாக்கிக்கணும்னு நினைக்கிறார். இது பெரிய மனசு இல்லையா?''

''இல்லை முத்து. உனக்கு அந்தாளைப் பத்தித் தெரியாது. முதல்ல நான் வேலை இல்லாம இருந்தப்ப என்னை மதிக்கவேயில்லை. எனக்கு இன்ஸ்பெக்டர் வேலை கிடைச்சதும்தான் உறவு ஞாபகம் வந்திச்சி. கஸ்தூரி செத்தப்ப இந்தாளு சொந்தக்காரங்க கிட்ட எல்லாம் நான்தான் ஏதோ மருந்து கொடுத்து கொன்னுட்டேன். போலீஸ்காரனாப் போய்ட்டதால கேஸ் போட முடியலைன்னு சொல்லிட்டுத் திரிஞ்சாரு. இப்ப பவர்ஃபுல் போஸ்ட்ல இருக்கேன். நிறைய சம்பாரிச்சிட்டேன். தம்பி பேர்ல தொழிற்சாலை எல்லாம் நடத்தறேன். அதனால மறுபடி ஒட்டிக்கப் பாக்கறாரு''

''அவரு என்னமோ நினைச்சிட்டுப் போறாரு..மனசைத் தொட்டுச் சொல்லுங்கய்யா. இந்த வீட்ல மறுபடியும் ஒரு களையோ,கலகலப்போ வேணாமாய்யா?''

''கஸ்தூரி போய் எட்டு வருஷம் ஆச்சி முத்து. தனியாவே வாழப் பழகிட்டேன். பொறுப்பான உத்தியோகம். சவாலான வேலை. இதுவே திருப்தியாதான் இருக்கு''

''அட..போங்கய்யா! என்னமோ அறுபது வயசு கிழவன் மாதிரிப் பேசறீங்களே! உங்களுக்குன்னு ஒரு சந்தோஷம் வேணாமா? ஒரு வாரிசு வேணாமா? உங்க கிட்ட உள்ள சொத்துக்கெல்லாம் பத்து புள்ளைங்க இந்த வீட்ல இருக்கணும்யா. என்னமோ அனாதை மாதிரி வாழ்றீங்க. போங்க''

''முத்து, கஸ்தூரி இருந்த என் மனசுல வேற ஒரு பொண்ணை என்னால நினைச்சிப் பாக்கவே முடியலை'' என்று சொல்லிக் கொண்டிருந்த போது சட்டென்று அவர் மனதில் காலையில் அலுவலகத்தில் சந்தித்த அனிதா வந்தாள்.

எழுந்து கை கழுவி, முத்துவை அனுப்பிவிட்டு கதவை மூடி, தன் அறையில் ஒரு புத்தகம் எடுத்துக் கொண்டு அமர்ந்த போதும்...அனிதா!

என்ன இது? ஒரு புகார் கொடுக்க வந்தவள் ஏன் இப்படி என் மனதில் வந்துபோகிறாள்?

என்ன ஒரு குரல்! மென்மையான முகம்! இவளோடு வாழப் பிடிக்காத அந்தப் புருஷன்! என்ன ஜென்மம் அவன்! சரியான முட்டாள்!

போன் ஒலிக்க...எடுத்து, '' ஹலோ, வேல் பாண்டியன்'' என்றார்,

''சார், அனிதா பேசறேன். பேசலாமா? எதுவும் தொந்தரவில்லையே?''

சட்டென்று சிலிர்த்துப் போனார் வேல் பாண்டியன். அவளைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கிறேன். சரியாக அதே சமயம் அவளே போன் செய்கிறாளே..

''ஒண்ணும் தொந்தரவில்லை. பேசுங்க''

''கொஞ்சம் முன்னாடி அந்த ராஸ்கல் போன் செஞ்சிப் பேசினான் சார்'' என்றாள் பதட்டத்துடன் அனிதா.

...தொடரும்



# அவன் 5

பாபு மண்டையை உடைத்துக் கொண்டு மறுபடி மறுபடி யோசித்துப் பார்த்தும் அவனுக்கு என்ன நடந்திருக்கும் என்று புரியவில்லை.

டிராவல்சிலிருந்து போன் செய்த போது அவன் எடுக்காமல் அவள் ஏன் எடுத்தாள்?

ஏன் அப்படிச் சொன்னாள்?

'என்னது பெங்களூருக்கு கார் புக் பண்ணிருந்தாரா? அப்படி எதுவும் இல்லையே..' என்றுதானே ஆச்சரியப்பட்டிருக்க வேண்டும்? இயல்பாகப் பேசி கேன்சல் செய்திருக்கிறாள் என்றால் என்ன அர்த்தம்? அவனுடைய சாயம் வெளுத்து விட்டதா? அவனுடைய நோக்கம் தெரிந்து விட்டதா? உண்மையான முகம் புரிந்து விட்டதா?

அப்படித் தெரிந்திருந்தால் இவன் வெகுண்டிருப்பானே? உண்மையைத் தெரிந்து கொண்ட அவளால் தனக்கு ஆபத்து என்று பதறியிருப்பானே? வன்முறையைக் கையாண்டு அவளைத் தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்திருப்பானே? வலுக்கட்டாயமாக அவளை மயக்கப்படுத்தியிருக்க மாட்டானா?

ஒலிக்கிற போனை அவள் எடுக்கிறாள் என்றால், அப்போது இவன் எங்கேப் போனான்? அவன் இல்லாத சமயம் இவள் எடுத்தாளா?



அப்படிப் பார்த்தாலும், அவன் சுயரூபம் புரிந்தவள் அவன் இல்லாத சமயம் தப்பி ஓடத்தானேப் பார்ப்பாள்? நடப்பது நடக்கட்டும் என்று அங்கேயேவா உட்கார்ந்திருப்பாள்?

அவளிடம் செல்போன் எதுவும் இல்லை. என்னிடமும் இல்லை. வழக்கமாக என்னுடன் பேச அந்த மணி லேப் டைலர் கடை பி.பி. எண்ணில்தான் பேசுவான். அன்றைக்கும் அதில்தான் பேசினான். ஒரு வேளை ஏதாவது தகவல் சொல்ல அவன் அந்த எண்ணில்தான் அழைத்தாக வேண்டும்.

பாபு ஒரு தீர்மானத்திற்கு வந்து எட்டு மணிக்கு குமரன் நகரில் இருந்த மணி டைலர்ஸ் கடைக்கு வந்தபோது, மணி மிகுந்த பக்தியுடன் ஊதுபத்தி கொளுத்தி சுவரில் தொங்கிய சாமிப் படங்களுக்கு காட்டிக் கொண்டிருந்தான்.

''என்னடா பாபு காலையிலேயே இந்தப் பக்கம்?''

''சும்மாதான். ஆமாம், எப்ப கடை திறந்தே?''

''பத்து நிமிஷம் ஆச்சி''

''எனக்கு எதுவும் போன் வந்திச்சா?''

''இல்லையே''

''வரும். ஒரு போனை எதிர்பார்த்துட்டிருக்கேன்'' என்று ஸ்டூல் எடுத்துப் போட்டுக் கொண்டு, புதிய செய்தித்தாளைப் புரட்டியபடி காத்திருக்கத் துவங்கினான் பாபு.

பெங்களூர் பஸ் ஸ்டாண்டில் இறங்கியதுமே மிக அந்நியமாக உணர்ந்தான் அவன்.

'வேறு வகை முகங்கள். காதுகளில் புரியாத மொழியில் போஸ்டர்கள், விளம்பரங்கள். கத்திருமிருந்த இரைச்சல்களில் தமிழ் இல்லை.

பஸ் ஸ்டாண்ட் உள்ளே இருந்த வெயிட்டிங் ஹாலுக்கு வந்து பொறுப்பாளரிடம் டிக்கெட் காட்டி, அவசரமாகக் குளித்து உடை மாற்றிக் கொண்டான். பொருள்கள் வைக்கும் அறையில் சூட்கேஸ், பேக் இரண்டையும் வைத்து ரசீது பெற்றுக் கொண்டு தோளில் மாட்டிய கைப்பையுடன் வெளிப்பட்டு நடந்தான்.

தூரத்தில் சிகரெட் பிடித்தபடி நடந்து வந்த கர்நாடகா போலீஸ்காரர் அச்சுறுத்தினார்.

ஏதோ தப்பாகி, அங்கே போலீசுக்குத் தெரிந்து, எங்கும் தகவல் அனுப்பி.. இதோ இவர் என்னைக் கைது செய்யப் போகிறாரோ?

அவர் சாதாரணமாகக் கடந்து சென்றதும், பதட்டம் தணிந்து பெருமூச்சு விட்டான்.

என்ன செய்யலாம்? எங்கேப் போகலாம்? யாரைப் பார்க்கலாம்? எனக்கு இங்கே யாரையுமே தெரியாதே...

சட்டென்று ஹரிதாவின் நினைவு வந்தது.

கல்லூரியில் படித்த தோழியான அவள் ஒரு முறை எழுதிய கடிதத்தில்

தற்போது பெங்களூரில் டெலிபோன் எக்ஸ்சேஞ்சில் வேலை பார்ப்பதாக குறிப்பிட்டிருந்தாளே..

அவள் இப்போதும் இதே ஊரில், அதே வேலையில் இருப்பாளா? பெங்களூரில் எந்த எக்ஸ்சேஞ்சில் என்ன வேலை?

ஒரு சின்ன ஆரம்பமாக இந்தத் தேடலைத் துவங்கலாமே..ஹரிதாவைச் சந்தித்துவிட முடிந்தால் தெம்பாக இருக்கும். ஒரு தெரிந்த துணை தைரியம் தரும். அவளால் எனக்கு உதவ முடியலாம்.

அவள் சாலையைக் கடந்து எதிர்புறம் இருந்த ஒரு டெலிபோன் பூத்துக்கு வந்தாள்.

"எக்ஸ்யூஸ் மீ, இங்கே பக்கத்தில் ஏதாவது டெலிபோன் எக்ஸ்சேஞ்ச் இருக்கிறதா?" என்று ஆங்கிலத்தில் கேட்டாள். ஆமாமென்று தலையசைத்த இளைஞன் வெளியே வந்து கை காட்டி வழி சொல்ல, நன்றி சொல்லி நம்பிக்கையுடன் நடந்தாள்.

திருச்சி விமான நிலையம்.

சென்னையிலிருந்து வந்து இறங்கிய விமானத்திலிருந்து கோபிநாத்தும் அவர் மனைவி புஷ்பாவும் இறங்கினார்கள்.

வெளிஞ்சில் காத்திருந்து தங்கள் ஏழெட்டு லக்கேஜ்களை இரண்டு டிராலியில் வைத்துத் தள்ளியபடி வெளியே வர..டாக்ஸிக்காரர்கள் மொய்த்தார்கள்.

"ஜோதி நகர் போகணும். எவ்வளவுப்பா?"

"ஐநூறு ரூபா கொடுங்க சார்"

"நாங்க டூரிஸ்ட் இல்லைப்பா. இந்த ஊர்தான். வழக்கமா முன்னூறு ரூபாதான் தருவோம்.இஷ்டம்னா வாங்க"

பேரம் துவங்கியது. முன்னூற்றி ஐம்பதில் முடிவாகி லக்கேஜ்களை ஏற்றிக் கொண்டு டாக்ஸி புறப்பட்டது.

"என்ன புஷ்பா டல்லா இருக்கே?" என்றார் கோபிநாத்.

"மூணு மாசம் அமெரிக்காவ தங்கப் போறோம்னு நினைச்சிப் போனோம். இப்படி பதினஞ்சி நாள்ல திரும்பற சூழ்நிலை வந்துடுச்சே.."

"என்ன செய்றது? அங்க சூழ்நிலை மாறிடுச்சே..திடீர்னு ஒரு டிரைனிங்னு பையனை லண்டன் அனுப்பிச்சிட்டானே அவன் பாஸ்..பையன் இல்லாம நீயும், நானும் இருந்து என்ன பண்றது? அதனால என்ன? நெக்ஸ்ட் இயர் மறுபடி பிளான் பண்ணிட்டாப் போச்சு"

டாக்ஸி ஜோதி நகர் வந்து சாலையில் திரும்பியது.

"ஏன் சார், இங்கயா இருக்கு உங்க வீடு? இன்னும் யாருமே வீடு கட்டலையே... ராத்திரில எப்படி தனியா இருக்கிங்க? ஒரு ஆபத்துன்னாக்கூட உதவிக்கு பக்கத்துல யாருமே வர மாட்டாங்க போலிருக்கே சார்" என்றான் டிரைவர்.



"மனைமனைன்னு ஏரியா டெவலப் ஆகிடும்னு நம்பி நாலு கிரவுண்ட் வாங்கிப் போட்டு ஒண்ணுல வீடு கட்டினோம். பாத்தா வேற யாருமே கட்டலை. முழுக்க டெவலப் ஆறதுக்கு இன்னும் அஞ்சாறு வருஷமாய்டும் போலிருக்கு. நேரா போப்பா. அதோ தனியா நிக்குதே அந்த வீடுதான்" என்றார் கோபிநாத்.

டாக்ஸியை நிறுத்தி லக்கேஜ்களை இறக்கி வைத்துவிட்டு பணம் பெற்றுக் கொண்டு டிரைவர் புறப்பட்டுப் போனதும் சாவி போட்டு கதவைத் திறந்தார் கோபிநாத்.

இருவருமாக சேர்ந்து எல்லா லக்கேஜ்களையும் உள்ளே வைத்துவிட்டு, " எல்லா ஜன்னலையும் திறந்து விடு புஷ்பா! பூட்டியே இருந்ததால குப்புன்னு வெப்பம் அடிக்குது பாரு!" என்ற கோபிநாத், " வீடு பூரா ஸ்பிரே அடிக்கணும். ஸ்மெல் வேற! என்ன ஸ்மெல் இது?"

" எலி எதாச்சும் உள்ள வந்து செத்துடுச்சோ என்னவோ, ஒரே விச்சமா இருக்குங்க" என்றபடி ஜன்னல்களைத் திறந்தாள் புஷ்பா.

படுக்கையறைக்குள் வந்து ஜன்னல்கள் திறந்து, ஃபேன் போட்டு, சட்டையைக் கழற்றிய கோபிநாத், " புஷ்பா, இந்த பெட் மேல விரிச்சிருந்த பெட்ஷீட்டை சலவைக்குப் போட்டுட்டியா?" என்றார்.

உள்ளே வந்த புஷ்பா, " இல்லையே..பூப்பூவா போட்ட அழகான பெட்ஷீட்டுங்க. எங்கங்க காணோம்?"

" ஆமாம், உன் பெட்ஷீட்டை மட்டும் திருடறதுக்காக ஒரு திருடன் வருவானா?" என்று திரும்பியவர் கண்களில் படுக்கை அருகில் இருந்த குள்ள மேஜை மேலிருந்த செயின், மோதிரம், வாட்ச் கண்ணில் பட, அவசரமாக வந்து எடுத்துப் பார்த்தார், "புஷ்பா, என்ன இதெல்லாம்? என்னோடதில்லையே.."

"அட! என்னங்க அதிசயமா இருக்கு? யாரோடது அது? இங்க ஏன் இருக்கு? நீங்க யார்கிட்டயாவது சாவி குடுத்து வீட்டை யூஸ் பண்ணிக்கச் சொன்னீங்களா என்ன?"

"என்ன உளர்றே? உன்கிட்ட சொல்லாம அப்படில்லாம் செய்வேனா? ஒண்ணும் புரியலையே..வீடு பூட்டிதான் இருக்கு. ஆனா இதெல்லாம் யாரோடது? எப்படி இங்க வந்துச்சி? யாரோ திருடனே வந்திருந்தாக்கூட எடுத்துட்டுப் போவானே தவிர..வெச்சிட்டாபோவான்?"

"பின் பக்கக் கதவு உள் பக்கம் தாழ் போட்டிருக்கா, இல்லை திறந்து கிடக்கான்னு பாக்கலாம் வாங்க.."

இருவரும் வீட்டின் பின்புற கதவருகே வந்து, அது உள்புறம் தாழிடப் பட்டிருப்பதைப் பார்த்து வியந்தார்கள். கதவைத் திறந்ததும் மூக்கைப் பிடித்தார் கோபிநாத்.

"புஷ்பா... எலியோ, பெருச்சாளியோ பின்பக்கம் தோட்டத்துல தான் செத்துக் கிடக்கு போலிருக்கு.."

"இணைத்து பக்கத்திலேர்ந்துதாங்க நாத்தம் வருது"

"அதுதான் மூடிக் கிடக்கே?"

''காத்துல பலகை நகர்ந்து எதார்ச்சம் உள்ளே விழுந்துடுச்சி போலிருக்கு. நாய், ஆடு இப்படி எதாச்சம் இருக்குமா? பாருங்க''

கோபிநாத் கிணற்றின் மேலிருந்த பலகைகளை அகற்றிஉள்ளே எட்டிப் பார்த்த அடுத்த விநாடி அலறினார்.

...தொடரும்



# அவள் 5

லைப்ரரிக்கு வெளியே மரத்தடியில் நின்றிருந்த பவித்ரா முகம் சிவந்து. ''ஹலோ மிஸ்டர்! சும்மா ரீல் சுத்தாதீங்க. இது வரைக்கும் நான் உங்களைப் பார்த்ததேயில்லை'' என்றாள்.

அந்த இளைஞன் கொஞ்சம்கூட ஆத்திரப்படாமல் அமைதி தவழும் முகத்துடன், புன்னகையுடன், '' கொஞ்சம் பொறுமையா நான் சொல்றதைக் கேக்கறீங்களா மேடம்? நீங்களும் நானும் சந்திச்சிப் பேசிருக்கோம், பழகியிருக்கோம்னு நான் சொன்னேனா? நான் உங்களைப் பாத்திருக்கேன்னு மட்டும்தானே சொன்னேன். அதுக்கு ஏன் இவ்வளவு ஆத்திரம்? எங்க பார்த்தேன்னு சொல்லட்டுமா? ஸ்வஸ்திக் கெமிக்கல்ஸ் கம்பெனில ரெண்டுவாரம் முன்னாடி நடந்த இண்டர்வியூவுக்கு நீங்க வந்திருந்தீங்க. ஞாபகம் இருக்கா?'' என்றான்.

''ஆமாம்'' என்றாள் தயங்கி.

''அந்த இன்ட்டெர்வியூவுக்கு நானும் வந்திருந்தேன். அங்க வந்திருந்த எவ்வளவோ பொண்ணுங்க முகம் என் மனசுல பதியலை. இப்ப எங்கயாவது பார்த்தாக்கூட ஞாபகம் இருக்காது. நீங்க மட்டும் என் ஞாபகத்தில தங்கினதுக்குக் காரணம் அன்னிக்கு நீங்க தன்மானத்தோட ரிசப்ஷனிஸ்ட் இட்ட கோபப்பட்டு கேள்வி கேட்டீங்க. அதனால இன்னிக்கு இங்க உங்களைப் பார்த்ததும் அந்தப் பொண்ணுதானாங்கிற யோசனையோட உங்களைப் பாத்தேன்''

''யெஸ்.. இப்பப் புரியுது'' என்றாள் சன்னக் குரலில்.

''மத்தபடி நீங்க நினைக்கிற மாதிரி நான் ஒண்ணும் உங்களை சைட் அடிக்கலை. உங்களை மனசுல நினைச்சி ஏங்கிட்டு பாடலை. எல்லா ஆம்பளைங்களையும் மட்டமா நினைக்கிற மனப்போக்கு ரொம்பத் தப்புங்க''

பவித்ராவை குற்ற உணர்ச்சி ஆக்கிரமித்தது. அவசரப்பட்டு வார்த்தைகளைக் கொட்டி இவனை நோகடித்து விட்டோமே என்று மிகவும் சங்கடமாக உணர்ந்தாள்.

''ஐ ம் வெரி வெரி ஸாரி. தப்பு. நான் பேசினது தப்பு. ரொம்ப அவசரப் பட்டுட்டேன். எனக்கு இந்த மாதிரி நிறைய மோசமான அனுபவங்கள்



கிடைச்சிருக்கிறதால நான் உங்களைதப்பா நினைச்சுட்டேன். மன்னிச்சிடுங்க''

''பரவால்லை, விடுங்க. நல்ல வேளை.. அவசரப்பட்டு ஹீல்ஸ் சுழட்டி அடிச்சிட்டு அப்புறம் திட்டாம, நேரா திட்ட ஆரம்பிச்சிங்களே..''

''ச்சே! ஐ ஃபீல் வெரி பேட். என்னாச்சி? உங்களுக்கு அந்த கம்பெனில வேலை கிடைச்சதா?''

''கிடைச்சிருந்தா இந்நேரம் ஆபிசுக்குப் போயிருப்பேனே.. எதுக்கு இங்க லைப்ரரில உக்காந்திருக்கேன்? உங்களுக்கு என்னாச்சி மேடம்? எக்ஸ்க்யூஸ் மீ.. உங்க பேரு?''

''பவித்ரா.. நீங்க?''

''சத்யகுமார். உக்காந்து பேசலாமே..''

அங்கே நிழலில் இருந்த சிமெண்ட் பெஞ்சில் இருவரும் அமர்ந்தார்கள்.

''எனக்கு அந்தக் கம்பெனிலேர்ந்து வக்கில் நோட்டீஸ்தான் வந்திச்சி'' என்றாள் பவித்ரா.

''வக்கீல் நோட்டீசா? ஏன்?''

''அன்னிக்கு இண்டெர்வியூவுல அந்த மேனேஜர் நக்கலா, ''அன்னிக்கு இண்ட்டெர்வியூவுல அந்த மேனேஜர் நக்கலா, விஷமமா, அநாகரிகமா, சப்ஜெக்ட்டை விட்டுட்டு என்னென்னவோ கேட்டதால நான் கோபமா அவனை, நிர்வாகத்தை எல்லாம் திட்டிட்டு வந்துட்டேன்.. அதனால உங்க மேல மான நஷ்டஈடு வழக்கு ஏன் போடக்கூடாதுன்னு கேட்டு ஒரு ஆளை அனுப்பிட்டாங்க''

''அப்புறம்?''

''நான் பேசினது தப்புன்னு ஒரு மன்னிப்பு லெட்டர் எழுதிக் கொடுக்கா வழக்கு போட மாட்டாங்களாம். அதெல்லாம் எதுவும் தர முடியாது. உங்களால முடிஞ்சதைப் பாருங்க, நானும் கோர்ட்ல பாத்துக்கறேன்னு கூட சொல்லி அனுப்பிச்சேன்''

''வெல் செட்! அப்புறம் என்ன ஆச்சி?''

''இது நடந்து ரெண்டு வாரம் ஆச்சி. அதுக்கப்புறம் எந்த நோட்டீசும் அஃபிஷியலா வரலை. வந்தாலும் நான் கவலைப்படறதா இல்லை.''

''இதென்னங்க புதுசா இருக்கு? இந்த மாதிரி மான நஷ்ட ஈடு வழக்கெல்லாம் அரசியல் தலைவர்கள், மேடைப் பேச்சாளர்கள் இவங்க மேலதானே போடுவாங்க? நாமெல்லாம் கோடீஸ்வரங்களா என்ன? வழக்கு போட்டு நம்மகிட்ட என்ன வசூலிக்க முடியும்? சுத்தப் பைத்தியக்காரத்தனமால்ல இருக்கு'' என்றவன் சற்றுத் தள்ளி சைக்கிளில் ஐஸ்க்ரீம் எவர்சில்வர் கேனுடன் நின்றிருந்தவனைப் பார்த்ததும், ''அவர்கிட்ட மட நல்லா டேஸ்ட்டா இருக்கும். சாப்பிடலாமா? ம சாப்பிடக்கதானே?'' என்றான்.

''சாப்பிடலாம். ஆனா காசு நான்தான் கொடுப்பேன்''

''ஏன்?''

''மான நஷ்ட ஈடுன்னு வெச்சிக்கங்களேன். கொஞ்சம் முன்னாடி

அவசரப்பட்டு உங்களை அவமானப் படுத்திட்டேனே..''

''எங்க, என் மானத்தோட வேல்யூ ஒரு சிங்கிள் டீ தானா? இதுதாங்க இன்னும் அவமானமா இருக்கு'' என்று சிரித்த சத்யகுமார், ''ஹலோ!'' என்று கைதட்டி அழைக்க... சைக்கிளை உருட்டி வந்தார் அவர்.

இருவரும் காகிதக்கோப்பைகளில் அமைதியாக டீ பருகினார்கள்.

''உங்களுக்கு சென்னைதான் நேட்டிவா?'' என்றாள்.

''இல்லைங்க. பொள்ளாச்சி. ஊர்ல அப்பா விவசாயம் பாக்கறார். ஒரேப் பையன் நான். எம்.எஸ்.சி கோவைல படிச்சேன். ஒரு வருஷமா சென்னைல இருக்கேன். வெஸ்ட் மாம்பலத்தில ஒரு மாடி போர்ஷன் வாடகைக்கு எடுத்து தங்கிருக்கேன். வேலை வேட்டை நடக்குது. கொஞ்சம் கம்ப்யூட்டர் நாலெட்ஜ் உண்டு. அதனால பக்கத்தில ஒரு டி.டி.பி சென்டர்ல பார்ட் டைம் வேலை பாக்கறேன். ஏதாக்கம் வொர்க் இருந்தா கூப்புடுவாங்க. பக்கத்துக்கு இவ்வளவுன்னு கொடுப்பாங்க. ரூம் வாடகை, சாப்பாட்டுக்கு அதிலேர்ந்து அட்ஜஸ்ட் பண்ணிக்கறேன். படிப்புக்கு ஏத்த வேலை கிடைச்சிடும்னு நம்பிக்கையோடதான் தொடர்ந்துபோராடறேன். ஆனா வரவர அந்த நம்பிக்கை தேயுதுங்க. உங்களைப் பத்திச் சொல்லுங்களேன்''

''அப்பா இல்லை. அம்மா மட்டும்தான். ஒரு அக்கா கல்யாணமாகிப் போய்ட்டா. அம்மா எஸ்.டி.டி பூத் வெச்சி நடத்தறாங்க. உங்க நிலைமைதான் எனக்கும். வேலை கிடைக்கலைன்னா அம்மா மாதிரி இன்னொரு எஸ்.டி.டி பூத் வெச்சிக்கிட்டு உக்காந்துடலாம்னுதான் யோசனை''

''கொடுமைங்க. எம்.எஸ்.சி படிச்சிட்டு எஸ்.டி.டி பூத் வைக்கிறதா?''

''எம்.எஸ்.சி படிச்சிட்டு ஜாப் டைப்பிங் பண்றதும் கொடுமைதானே?''

ஒரு சின்ன அமைதி விழுந்தது.

சத்யகுமார் அணிந்திருந்த காட்டன் சட்டையில் ஒரு பட்டன் தவறி, அதற்குப் பதிலாக வேறு பட்டன் வைத்து தைக்கப்பட்டிருந்ததை பட்டனின் டிசைன் வித்தியாசம் காட்டிக் கொடுத்தது. பாக்கெட்டில் இரண்டு பேனாக்கள். ரப்பர் செருப்புகள். கையில் வாட்ச் இருக்க வேண்டிய மணிக்கட்டில் ஒரு காசிக் கயிறு. விரல்களில் சற்றே நிறம் மங்கிய மருதாணிச் சிவப்பு.

அவனுடைய எளிமையான தோற்றத்தைப் பார்க்கப் பார்க்க இவனைப் போய்த் தப்பாய் நினைத்துத் திட்டினோமே என்று பவித்ராவை வதைத்தது.

''மறுபடி ஸாரிங்க. நான் அப்படி நடந்துகிட்டிருக்கக் கூடாது'' என்றாள்.

''பரவால்லைங்க. எத்தனை தடவை ஸாரி சொல்விங்க?''

''நீங்க பதிலுக்கு என்னைத் திட்டியிருந்தாக்கூட எனக்கு இவ்வளவு தூரம் வேதனையா இருக்காதுங்க''



''எனக்கு கோபம் வந்தாத்தானே திட்ட முடியும்?ஆமாம், நீங்க இந்த லைப்ரரிக்கு அடிக்கடி வருவீங்களா?''

''தினம் வருவேன். நீங்க?''

''இங்க எப்பயாவதுதான் வருவேன். இனிமே அடிக்கடி வரலாம்னு தோணுது''

''ஏன்?''

''ஒரு பேச்சுத்துணையா நீங்க கிடைச்சிருக்கிங்களே..ரெண்டு பேரும் எம்.எஸ்.சி கெமிஸ்ட்ரி. வேலை வாய்ப்புகள் பத்தி டிஸ்கஸ் பண்ண சௌகரியமா இருக்குமே..இனிமே உங்களை உத்துப் பாத்தா திட்ட மாட்டிங்க இல்லையா?''

''சேச்சே!''

''டைம் என்னங்க ஆச்சி?''

தன் வாட்ச் பார்த்து பவித்ரா சொன்னதும், ''அப்ப நான் புறப்படறேங்க. அப்புறம் மீட் பண்ணலாம், பை''

அவன் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டுப் போனதும் பவித்ராவும் பஸ் ஸ்டாப் நோக்கி நடந்தாள்.

'சத்யகுமார்' என்று அவன் பெயரை ஒருமுறை அவள் மனது சொல்லிப் பார்த்தது.

சொல்லிப் பார்த்தபோது ஒருவித சிலிர்ப்பு ஏற்பட்டதை உணர்ந்து, 'என்ன இது' என்றுக் கேட்டுக் கொண்டாள் பவித்ரா.

...தொடரும்



## இவள் 5

தன் வீட்டின் படுக்கையறையில் அமர்ந்து தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்த அசிஸ்டண்ட் கமிஷனர் வேல் பாண்டியன், ''சொல்லுங்க வனிதா, அவன் என்ன பேசினான்? நீங்க என்ன சொன்னீங்க? விரிவா சொல்லுங்க'' என்றார்.

''வழக்கம்போல கொச்சையா பேச்சை ஆரம்பிச்சான். நீங்க சொன்ன மாதிரி இந்த தடவை நான் ஆத்திரப்படாம அவன் போக்குல இறங்கிப் பதிலேன். எனக்கு பல பாய் ஃப்ரெண்ட்ஸ் இருக்காங்க. ஆனா எனக்குப் பிடிச்ச சில பேரோட மட்டும்தான் டிஸ்கோதேபோவேன், வெளியே போவேன். முன்னே பின்னேத் தெரியாத, அநாகரிகமாப் பேசற உன்னோட எப்படி அன்பாப் பேச முடியும்னு கேட்டேன்''

''வெளிறுட்டு உடனே வழிஞ்சிருப்பானே..?''

''கரெக்ட் சார். என்னோடப் பழகிப் பாரு, என்னை உனக்கு ரொம்பப் பிடிக்கும்னு சொன்னான். அவன்கிட்ட மூணு கார் இருக்காம்.

திறைய சொத்து இருக்காம். நான் சரின்னு சொன்னா என்னை ஸ்விட்சர்லாந்துக்குக்கூட கூட்டிட்டுப் போவானாம். நாளைக்கு ஈவினிங் அஞ்சி மணிக்கு என்னை பார்க் ஷெரட்டன் ஹோட்டலுக்கு வரச் சொல்லிருக்கான். ரிசப்ஷன்ல நான் வெய்ட் செஞ்சா அவனே வந்து பேசறேன்னு சொன்னான்''

''நீங்க சரின்னு சொன்னீங்களா?''

''ஆமாம்''

''அவன் பேர் என்னன்னு கேட்டீங்களா?''

''கேட்டேன். நேர்லதான் பாக்கப் போறோமே. அப்ப என்னைப் பத்தி எல்லாம் தெரிஞ்சிக்கலாம்னு சொன்னான்''

''கொஞ்சம் எச்சரிக்கையான ஆசாமியாத்தான் தெரியறான். ஓக்கே அனிதா...மீன் தூண்டில்ல சிக்கிடுச்சி. எடுத்து அமுக்க வேண்டியதுதான் பாக்கி''

''நாளைக்கு ஒரு இன்ஸ்பெக்டரை மாறு வேஷத்தில அனுப்ப போறீங்களா சார்?''

''ஆமாம்'' என்ற வேல் பாண்டியன் உடனே யோசித்து, ''இல்லை நானே வர்றேன். எனக்குதானே உங்களைத் தெரியும்? நீங்க எந்த பதட்டமும் காட்டாம அவன் சொன்ன நேரத்துக்கு பிரமாதமா டிரெஸ் பண்ணிட்டு ஹோட்டலுக்குப் போயிடுங்க. நான் கொஞ்சம்முன்னாடியே வந்துடறேன். நான் எதாச்சும் ஒரு கெட்டப்புல இருப்பேன். என்னைத் தேடாதீங்க. நான் உங்ககிட்ட வந்துப் பேச மாட்டேன். ஆனா உங்களையே கண்காணிச்சிட்டிருப்பேன். அந்த ராஸ்கல் வந்துப் பேசுவான். நீங்க டென்ஷனாகாம இயல்பாப் பேசுங்க. வெளில போலாம்னு கூப்புடுவான். இயல்பாப் போங்க. ஹோட்டலுக்கு வெளில வந்ததும் நான் அவனை மடக்கிடறேன்.சரியா?'' என்றார்.

''சரி சார். ஒரு விஷயம்...''

''என்ன?''

''இந்த மாதிரி அவனை நான் போலீஸ்ல பிடிச்சிக் கொடுக்கறதால அவன் மனசுல வஞ்சம் வெச்சி பின்னாடி ஜெயில்லருந்து வெளில வந்து என்னைப் பழி வாங்க நினைக்க மாட்டானா? பெரிய இடத்துப் பையன்னு தெரியறதால பயமா இருக்கு சார்''

'' சேச்சே! அந்தக் கவலை எதுவும் வேணாம். உங்களுக்கு எப்பவும் எந்தப் பிரச்சனையும் வராம நான் பாத்துக்கறேன். நிம்மதியா இருங்க. குட் நைட்!''

''குட் நைட் சார்''

போனை வைத்த வேல் பாண்டியன் மனதில் அவள் கேட்ட கேள்வி மறுபடி ஒலித்தது.

பழி வாங்க நினைக்க மாட்டானா? நியாயமான பயம்! நியாயமான கேள்வி! இதற்கு நான் சொன்ன பதில் நியாயமானதுதானா? வழக்கமான ஆறுதல்தானே அது? எப்போதும் எந்தப் பிரச்சனையும் அவளுக்கு



ஏற்படாமல் என்னால் எப்படி பார்த்துக் கொள்ள முடியும்? பழி வாங்குகிற ஆசாமி முன்கூட்டி எனக்கு இடம், நேரம் எல்லாம் தகவல் தந்து விட்டா செயல்படுவான்? அதற்காக அவளுக்கு இருபத்தி நான்கு மணி நேரம் போலீஸ் பாதுகாப்பு தர முடியுமா, இல்லை அவளை என் வீட்டில் என் சொந்த பாதுகாப்பில் வைத்துக் கொள்ள முடியுமா?

இது நன்றாய் இருக்கிறதே....அவளை திருமணம் செய்து மனைவியாக்கி இங்கே என் வீட்டில் வைத்துக் கொண்டால்... நிரந்தர பாதுகாப்புதானே அது?

ச்சே! என்ன இப்படியெல்லாம் எனக்குள் யோசனை ஓடுகிறது? அவளோ பாவம் தன் திருமண வாழ்க்கையில் பிரச்சனையாகிப் பிரிந்து வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஏன் அவளைப் போய் இப்படியெல்லாம் நினைத்துப் பார்க்கிறேன்? எனக்கு என்ன ஆயிற்று?

பார்க் ஷெரட்டன் ஹோட்டல். பல வர்ணங்களில் கொடிகள் பறந்தன. அத்தனை வகைக் கார்களும் முன்புறம் அணிவகுப்பில் வீரர்கள் போல் நின்றன.

கார்களை ஒழுங்கு படுத்தி வழி நடத்தும் ஹோட்டலின் சீருடை அணிந்த பணியாளர்களில் ஒருவராய் ஹோட்டல் நிர்வாகத்திடம் பேசி செய்து கொண்ட ஏற்பாட்டின்படி நின்றிருந்தார் வேல் பாண்டியன்.

மணி ஐந்தாகப் பத்து நிமிடங்கள் என்று அவரின் கைக்கெடிகாரம் சொல்ல, வரப் போகிற அனிதாவுக்காகவும், அவளைத் தேடிக்கொண்டு வரப் போகிற அந்த முகம் தெரியாத பணக்காரப் பொறுக்கிக்காகவும் காத்திருந்தார். சில நிமிடங்களில் தன் ஸ்கூட்டியில் வந்த அனிதா வண்டியை அதற்கான இடத்தில் நிறுத்திவிட்டு பிரதான வாசல் நோக்கி நடந்து வர... வேல் பாண்டியன் சிந்தை தடுமாறினார்.

ஷாம்பூ போட்டு முதுகில் விரித்து விடப்பட்ட வெல்வெட் கூந்தலுடன், லேசாக மின்னும் உயர்தர வய்லெட் நிற ஷிஃபான் புடவையில், அழகான மேக்கப்பில் இருந்த அனிதா அவரை லேசாக கலங்கடித்தாள்.

இந்தத் தேவதையுடன் சண்டை போட்டு பிரிந்து வாழ, விவாகரத்து செய்ய ஒருவனுக்கு எப்படி மனது வரும்? அவன் என்ன பைத்தியமா? இவளை விட்டுவிட்டு வேறு யாரோ ஒருத்தியை அவன் நாடுகிறான் என்றால் அவள் இன்னும் அழகோ?

அனிதா ஹோட்டலின் உள்ளே நுழைந்து வாசலைப் பார்க்கும் விதமாக அங்கே போடப்பட்டிருந்த ஏராளமான சோபாக்களில் தேர்வு செய்து சென்று அமர்ந்தாள்.

போர்டிகோவிலிருந்து அவளைக் கண்ணாடி வழியாக தெளிவாக பார்க்கும் விதமாக பூந்தொட்டிகளுக்கு அருகில் நகர்ந்து நின்று கொண்ட வேல் பாண்டியன் தன் பேண்ட் பாக்கெட்டில் வைத்திருக்கும் சிறிய பிஸ்டலை தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

மணி ஐந்தைத் தொட்டதும் அவர்ட்டாகி ஹோட்டலுக்கு வந்து இறங்குகிற மேல் தட்டு மனிதர்களைக் கவனிக்கத் துவங்கினார்.

குடும்பமாக, தம்பதியாக, நண்பர்களாக, தனியாக என்று பலர் கார்களில் வந்திறங்கி உள்ளேச் சென்று கொண்டிருக்க.. தனியாக வருபவர்களை விடாமல் பார்வையில் தொடர்ந்தார்.

உள்ளே நுழையும் தனி நபர் யாரும் இதுவரை ரிசப்ஷன் சோபாவில் அமர்ந்திருக்கும் அனிதாவை நோக்கிப் போகவில்லை.

அனிதா அங்கு டீப்பாய் மேல் கிடந்த ஆங்கிலப் பத்திரிகைகளை ஒவ்வொன்றாகப் புரட்டுவதும், மணி பார்ப்பதும், வாசலைப் பார்ப்பதுமாக இருந்தாள்.

மணி. 5.30. யாரும் அவளிடம் போகவில்லை.

மணி. 6.00. ம்கூம்.

மணி. 6.30. இல்லை.

மணி. 7.00. காணோம்.

மணி. 7.30. தென்படவில்லை.

அனிதா பொறுமை இழந்து தவிப்பதைக் கவனித்தார் வேல்பாண்டியன்.என்ன ஆயிற்று? ஏன் அவன் வரவில்லை?

அனிதாவின் செல்போனை இங்கிருந்தபடி தன் செல்போனில் அழைத்தார்.எடுத்ததும்,

"அவன் ஏதாச்சும் போன் செஞ்சானா?" என்றார்.

"ஏங்க. அவன் ஏதாச்சும் போன் செஞ்சானா? உங்களையும் காணமே"

"இல்லையே சார். நீங்க எங்க இருக்கிங்க? உங்களையும் காணமே"

"நான் நாலரை மணிலேர்ந்து இங்கதான் ஹோட்டல் சிப்பந்தி

"நான் நாலரை மணிலேர்ந்து இங்கதான் ஹோட்டல் சிப்பந்தி வேஷத்தில் உங்களைக் கண்காணிச்சிட்டு இருக்கேன்"

"ஒரு வேளை நான் போலீஸ்கிட்ட போய்ட்டேன்னு அவன் தெரிஞ்சிக்கிட்டானா?"

"சான்ஸ் இல்லையே. என்னா நேத்து ராத்திரி உங்களுக்கு மறுபடி போன் செஞ்சிருக்கானே.. அதுக்கப்புறம் நம்ம திட்டத்தை போன்லதானே பேசினோம்? அவனுக்கு வேற ஏதாவது அவசர வேலை வந்திருக்கலாம்"

"அப்படின்னா அதை எனக்குச் சொல்லிருப்பானே.. அவனுக்குதான் என் செல்போன் நம்பர் தெரியுமே?"

"அதானே எனக்கும் புரியலை. இன்னும் எவ்வளவு நேரம் நீங்க காத்துட்டிருக்க முடியும்? சரி, போதும். ரெண்டே நிமிஷத்தில நான் உடை மாத்திட்டு வந்துடறேன். இனி அவன் வர்ற மாதிரி தெரியலை"

வேல் பாண்டியன் சில நிமிடங்களில் தன் சொந்த உடையில் அவள் முன்னால் நின்றார்.

"காத்திருந்து காத்திருந்து பசியே எடுத்துடுச்சி சார். சரி, அப்ப நான் புறப்படறேன். மறுபடி அவன் போன் செஞ்சா நாளைக்கு இதே நேரம் வரச் சொல்லட்டுமா?"

"ஓகே. சரி, ரெஸ்ட்டாரெண்ட் போலாம், வாங்க"



"ரெஸ்ட்டாரெண்ட்டா?"

"பசிக்குதுன்னு சொன்னிங்களே.."

"ஒரு பேச்சுக்குச் சொன்னேன் சார்"

"அதனால என்ன, வாங்களேன், ஏதாச்சும் சாப்பிடலாம்"

"இங்கயா? சார், எனக்குக் கட்டுப்படியாகாது"

"எனக்கு ஆகும். நோ பிராப்ளம், வாங்க அனிதா" என்று வேல் பாண்டியன் புன்னகைக்க, தயங்கி விட்டு அவரோடு நடந்தாள் அனிதா.

ரெஸ்ட்டாரண்ட்டில் குறைவான வெளிச்சத்தில் எதிரெதிரே அமர்ந்து அயிட்டம்ஸ் ஆர்டர் செய்த பிறகு..

"அனிதா, தப்பா எடுத்துக்காதிங்க. உங்களை டைவோர்ஸ் செய்யத் துடிக்கிற உங்க புருஷன் ஒரு இடியட்!" என்றார் வேல் பாண்டியன்.

"ஏன் அப்படி சொல்றீங்க?"

"யு.. ஆர்.. யு.. ஆர்.. ஸோ பியூட்டிஃபுல்!"

சிரித்த அனிதா, "சார், ஜாக்கிரதையாப் பேசுங்க. உங்க வீட்டு நம்பர் கொடுத்திருக்கிங்க. போன் பண்ணி உங்க மிஸஸ்கிட்ட சார் என்னைப் பார்த்து இப்படிச் சொன்னார்ன்னு சொன்னா உங்களுக்கு டோஸ் விழும்" என்றாள்.

"விழாது.. அவ இறந்து எட்டு வருஷமாச்சி"

"ஓ.. ஐ ம் ஸாரி"

"இந்த எட்டு வருஷத்துல எத்தனையோ அழகான பெண்களை நான் சந்திச்சிருக்கேன். ஆனா ' நீங்க அழகா இருக்கிங்க' ன்னு உங்ககிட்டதான் சொல்லத் தோணிச்சி. என்னோட கமெண்ட் உங்களைப் புண்படுத்தியிருந்தா ஸாரி"

"உங்க மனசில தோணினதை வெளிப்படையாச் சொன்னிங்க. அதனால என்ன? ஆனா எனக்கு ஆச்சரியமா இருக்கு"

"என்ன ஆச்சரியம்?"

"பொதுவா போலீஸ் அதிகாரின்னாலே முரட்டு முகம், முரட்டுக் குரல், முரட்டுத்தனமான நடவடிக்கைகள்னே ஒரு அடையாளம் மனசில பதிஞ்சிருக்கு. ஆனா நீங்கரொம்ப பண்பா, அமைதியா, மென்மையா பேசறீங்க சார். இந்த நிமிஷம் என் மனசில தோன்றதை நானும் சொல்லலாமா?"

" ஷ்யூர்"

" நேத்து யூனிஃபார்ம்ல பாத்ததுக்கும், இன்னிக்கு சாதாரண உடையில பாக்கறதுக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கு. இன்னும் யங்காத் தெரியறீங்க. யு ஆர் ஸ்மார்ட்"

விழுந்த இடைவெளியில், மௌனம் அவர்களுக்கு நடுவே சொல்லாத வார்த்தைகளைப் போட்டு நிரப்பத் துவங்க..நேருக்கு நேர் பார்வைகள் மோதி, தயங்கி, உடனே விலகி, உடனே பார்த்துக் கொண்டன.

...தொடரும்



# அவன்

6

கொஞ்சம் வெந்து, கொஞ்சம் அழுகி பழு கோரமாக இருந்த பிணத்தை மூக்கில் கிருமி எதிர்ப்புத் திரை கட்டிக் கொண்டு கிணற்றடியிலேயே பிரேதப் பரிசோதனை செய்து கொண்டிருந்த அரசாங்க டாக்டரை சற்றுத் தள்ளி நின்று பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் குருபிரசாத் கூலிங் கிளாஸ் அணிந்திருந்தார். மூக்கில் கர்ச்சீப்பைக் கட்டியிருந்தார்.

மருத்துவமனை ஊழியர்களும், கான்ஸ்டபிள்களும் எட்டி தூரமாக நின்றார்கள். இன்னும் தள்ளி கூட்டமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த ஏரியா மக்களை ஒரு கான்ஸ்டபிள் விலகிப் போகச் சொல்லிக் கொண்டிருந்தார். தங்கள் வீட்டின் பின்புற வாசலருகில் வெளிறின முகத்துடன் கோபிநாத்தும், புஷ்பாவும் நின்றிருந்தார்கள்.

குருபிரசாத்தின் செல்போன் ஒலிக்க, எடுத்து காதில் வைத்து எதிர்முனைக் குரலைக் கேட்டதும், மூடிய இருந்த சிகரெட்டைக் கீழே போட்டு மிதித்தபடி, "சார், குட் மார்னிங்" என்றார்.

"என்னாச்சுங்க? யாரு?"

"முப்பது வயசிருக்கலாம். அவன் அடையாளம் எதுவும் இன்னும் கிடைக்கலை. கத்தியால குத்தப்பட்டு அப்புறம் கிணத்துல தூக்கிப் போட்டு கெரசின் ஊத்தி பாடியை எரிக்க முயற்சி நடந்திருக்கு. ஸ்பாட்லயே போஸ்ட் மார்ட்டம் நடந்திட்டிருக்கு. டாக் ஸ்க்வாடுக்கு சொல்லிருக்கேன்"

"ஏதாச்சும் பிக்சர் கிடைச்சிருக்கா?"

"குழப்பமா இருக்கு சார். ஹவுஸ் ஓனர் கோபிநாத் ஒய்ஃபோட அமெரிக்கா போயிட்டு இன்னிக்குத்தான் திரும்பிருக்கார். 15 நாளா வீடு பூட்டிதான் இருந்திருக்கு. வீட்ல பூட்டு எதுவும் உடைக்கப்படலை. எந்தக் கதவும் ஜன்னலும் சேதமாகலை. ஆனா வீடு உபயோகப்படுத்தப் பட்டிருக்கு. எந்தப் பொருளும் திருட்டுப் போகலை. ஸ்ட்ரேஞ்சா மோதிரம், செயின் இதெல்லாம் பெட்ரூம்ல இருக்கு"

"பூட்டு உடைக்கப் படலைன்றீங்களே..."

"ஆமாம் சார்"

"சாவியை யார்கிட்டயாவது ஒப்படைச்சிட்டுப் போனாங்களா என்ன?"

"விசாரிச்சிட்டேன் சார். இல்லைன்றாங்க. கையோட எடுத்துட்டுப் போயிருக்காங்க. எத்தனைப் பேரு வந்தாங்க, எதுக்குத் தங்கினாங்க, கொலை செஞ்சது யாரு, கொலை செய்யப்பட்டவன் யாரு..எதுவும் இன்னும் தெளிவாகலை சார்"



"பெரிய தலைவலியா இருக்கும் போலிருக்கே இது. சரி, தரோவா விசாரிச்சி வைங்க. ஒன் அவர்ல நான் அங்க வர்றேன்"

"ஓகே சார்" என்று வைத்ததும் எதிரே வந்து நின்றிருந்த இளைஞன் விஷ் செய்து, "சார், தினகரன் ரிப்போர்ட்டர்" என்றான்.

"இப்பதான் இன்வெஸ்டிகேஷன் ஆரம்பிச்சிருக்கோம். சொல்றதுக்கு எந்தத் தகவலும் இல்லை. ரெண்டு மணி நேரம் கழிச்சி வாங்க. பேசலாம். ப்ளீஸ்"

"ஓகே சார்" என்று அவன் விலக...

க்ளவுஸ்களை கழற்றிப் போட்டபடி டாக்டர் அவரிடம் வந்தார். "நைன்ட்டி பர்சென்ட் ப்ளீஸ்! மரணம் கத்திக் குத்தாலதான். டிகம்போஸிஷன் ஸ்டேஜ் வெச்சிப் பார்க்கறப்ப நாலு இல்லை அஞ்சி நாளைக்கு முன்னாடி செத்திருக்கான். நான் ரிப்போர்ட் அனுப்பி வைக்கிறேன். புறப்படறேன்"

"டாக்டர், இவ்வளவுதான் முடியுமா? இன்னும் கொஞ்சம் விபரங்கள்..."

"பாடி கண்டிஷன் பாத்தீங்க இல்ல. இதுக்கு மேல எதுவும் பாக்க முடியாது சார்"

"சரி, நீங்க புறப்படுங்க" என்ற குருபிரசாத் அவர் உத்தரவுக்குக் காத்திருந்த சப்இன்ஸ்பெக்டர் நாகேஸ்வரனிடம், "போட்டோகிராஃபர் இன்னும் வரல்லையே சார்?" என்றார்.

"வந்துக்கிட்டே இருக்கிறதா மெசேஜ் அனுப்பியிருக்கார் சார்"

"வந்ததும் எடுத்துட்டு பாடியை அனுப்பிச்சிருங்க. பாடி மேல இருக்கிற துண்டு துக்கடா துணி எல்லாத்தையும் தனியா எடுத்துடுங்க. கிணத்துக்குள்ளே இறங்கிப் பாத்துடச் சொல்லுங்க"

கோபிநாத் அருகில் வந்து, " வாங்க சார், உள்ளேப் போலாம்" என்றார்.

வீட்டின் ஹாலில் அமர்ந்தவர் அவர்கள் இருவரையும் எதிரே உட்காரச் சொன்னார். ஹெட் கான்ஸ்டபிள் பேப்பர், பேட், பேனாவுடன் தயாராக வந்து நின்று கொண்டார்.

"நீங்க ரெண்டு மாசத் திட்டத்துல அமெரிக்கா போனதா சொன்னீங்க. இந்தப் பயணத் தகவலை யார்கிட்டேல்லாம் சொன்னீங்க?"

"என் ரிலேடிவ்ஸ், முக்கியமான ஃப்ரெண்ட்ஸ், அப்புறம் பால்காரன், பேப்பர்காரன், வேலைக்காரி இவங்ககிட்டே எல்லாம் சொன்னோம்"

"கொஞ்சம் பொறுமையா அவங்க எல்லாரோட பேரு, விலாசம் சொல்லுங்க. இந்த மாதிரி முந்தி ஒரு கேஸ்ல ரொம்ப நாளா பூட்டிருக்கிற வீடு எதுன்னு தெரிஞ்சி டூப்ளிகேட் சாவி தயாரிச்சி மூணு தீவிரவாதிங்க தங்கி சதி வேலைகள் செஞ்சிருக்காங்க. உங்க வீடு புறநகர்ல தனியா இருக்கா. இந்த மாதிரி ஆசாமிங்களுக்கு வசதி!"

"கொலை செய்யப் பட்டவன் தீவிரவாதின்றீங்களா சார்?"

"இருக்கலாம். நிச்சயம் திருடன் இல்லை. ஏதோ ஒரு குரூப் ஏதோ

ஒரு நோக்கத்தோட ரகசியமா தங்கியிருந்தப்போ அவங்களுக்குள்ளே ஒரு பிரச்சினை வந்து கொலை வரைக்கும் போயிருக்கலாம். இல்லை யாராவது ஒருத்தனை இங்க கடத்திட்டு வந்து வெச்சி பணம் கேட்டு மிரட்டியிருக்கலாம். பணம் கிடைக்காத ஆத்திரத்துல கொன்னு போட்டுட்டுப் போயிருக்கலாம். இந்த ஊர்ல மிஸ்ஸிங் பர்சன்ஸ் லிஸ்ட் எடுத்துப் பார்க்கணும். கொலை செய்யப்பட்டவன் யாருன்னு கண்டுபிடிக்கிறதுதான் இப்ப எங்களுக்கு முதல் வேலை'' என்று பெருமூச்சு விட்டார் குருபிரசாத்.

மேலும் பல விதமாக கேள்விகள் கேட்டுவிட்டு வீட்டை நிதானமா அலசத் துவங்கினார். படுக்கையறை கப்போர்டுகளைத் திறந்து பார்த்தார். கட்டிலுக்குக் கீழேப் பார்த்தார். குளியலறையில் ஆராய்ந்தார். அங்கிருந்த ஒரு கண்ணாடியில் இருந்த வட்டமான ஸ்டிக்கர் பொட்டைப் பார்த்து புருவம் உயர்த்தினார்.

''மேடம், இங்க வாங்க. நீங்க குங்குமப் பொட்டு வெச்சிருக்கீங்க. இந்த ஸ்டிக்கர் பொட்டு நீங்க உபயோகிச்சதான்னு பாருங்க''

புஷ்பா வந்துப் பார்த்து, ''இல்லை சார். நான் ஸ்டிக்கர் பொட்டு பயன்படுத்தறதில்லை. இது என்னோட இல்லை'' என்றாள்.

''ஸோ..தங்கியிருந்ததுல ஒரு பெண்ணும் இருந்திருக்கணும். இல்லைன்னா அவங்க யாரோ ஒரு பொண்ணைக் கூட்டிட்டு வந்து கூத்தடிச்சிருக்கலாம்.''

சப் இன்ஸ்பெக்டர் நாகேந்திரன் வந்தார்.

''இந்த ஏரியாவுல தூரதூரமா இருக்கிற ஆறு வீட்லயும் விசாரிச்சேன். இந்த வீட்ல யாரோட நடமாட்டத்தையும் யாரும் பாத்ததா சொல்லலை. ஆனா ஒரு பேப்பர் போடற பையன் நாலஞ்சு நாள் முன்னாடி ஒரு சின்ன வயசுப் பொண்ணு வாசல்ல பெருக்கித் தள்ளிட்டிருந்ததைப் பாத்தேன்னு சொல்றான்'' என்றார்.

''வெரிகுட். ஒரு சின்ன ஆரம்பம் கிடைச்சிருக்கு. எங்க அந்தப் பையன்? அவனை நான் விசாரிக்கணும்'' என்று ஆர்வமாக வெளியே வந்தார் குருபிரசாத்.

...தொடரும்



அவள்

6

அடுத்தடுத்து லைப்ரரியில் பவித்ராவின் கண்கள் சத்யகுமார் தென்படுகிறானா என்று தேடத் தொடங்கின. ஒரு முறை அவனைப் பார்த்ததும் உள்ளம் துள்ளியது அவளுக்கே விசித்திரமாக இருந்தது. புன்னகை செய்து 'ஹலோ' சொன்ன அவன் மேற்கொண்டு ஏதும் பேச மாட்டானா என்று மனம் ஏங்கியது.



மற்றொரு நாள் அவன் ஒரு பகுதியில் அமர்ந்து சீரியஸாகப் படித்துக் கொண்டிருக்க, நாமே சென்று பேசினால் என்ன என்று பவித்ராவுக்கு துணிப்பு மேலிட்டது.

மெதுவாக தன் இடத்திலிருந்து எழுந்து அவனிடம் சென்றாள். அவன் கவனத்தைக் கலைக்காமல் அருகில் இருந்த நாற்காலியை ஓசை செய்யாமல் நகர்த்தி அமர்ந்தாள்.

லேசாக செருமினாள்.

திரும்பிப் பார்த்த சத்யகுமார், '' ஹலோ '' என்றான் லைப்ரரியின் நிசப்தத்தைக் கலைத்துவிடக் கூடாதென்கிற கவனத்துடன் ரகசியக் குரலில்.

''ஹலோ, சீரியஸா படிக்கிறீங்களா?''

''எம்ஃபில் பண்றேன். நிறைய படிச்சாகணுமே''

''என்ன உங்க சப்ஜெக்ட்?''

''பத்து நிமிஷமாகும் விளக்கமாச் சொல்ல. பரவால்லையா?''

''பரவால்லை'' என்றாள் ரகசியக் குரலில்.

சத்யகுமார் அங்கே இருந்த 'அமைதி காக்கவும்' என்கிற போர்டைச் சுட்டிக் காட்டி, ''வெளில போய்ப் பேசலாமா?'' என்றான்.

''சரி'' என்றாள்.

இருவரும் லைப்ரரிக்கு வெளியே வேப்ப மரத்தடியில் இருந்த சிமெண்ட் பெஞ்சுக்கு வந்து அமர்ந்தார்கள்.

சத்யகுமார் தான் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டிருக்கும் தலைப்பைப் பற்றி விரிவாக விளக்க.. அவன் முகத்தையே ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தாள் பவித்ரா.

அவனுடைய சப்ஜெக்ட் அறிவு ஒரு பக்கம் அவளை அசத்திக் கொண்டிருக்க..அவனுடைய முக பாவங்களும், குரலும் வேறு விதத்தில் வசீகரித்துக் கொண்டிருந்தன.

''பிரமாதம் சத்யகுமார். நீங்க பி.ஹெச்.டி., பி.எட் பண்ணி புரொபஸர் ஆனீங்கன்னா.. உங்க கிட்ட படிக்கிற அத்தனை ஸ்டூடண்ட்சும் நூறு பர்சென்ட் மார்க் வாங்குவாங்கசே! எவ்வளவு தெளிவா அழகா விளக்கிச் சொல்றீங்க! இதே மேட்டரை இப்ப என்னை திருப்பி சொல்லச் சொன்னீங்கன்னா, நான் அம்பேல்''

''ரொம்பத்தான் புகழாதீங்க. பின்னே எப்படி நீங்க எம்.எஸ்.சில தைண்டி ட்டூ பர்சென்ட் எடுத்தீங்களாம்?''

''எழுதறது வேற சொல்றது வேற''

இப்போது சைக்கிளில் வந்த டீ ஆசாமி இவர்களிடம் நிறுத்தி, ''டீ சாப்டுறீங்களா?'' என்றான்.

''இந்த தடவை இது என் ட்ரீட். என் கான்செப்ட்டை பொறுமையா நீங்க கேட்டதுக்கு'' என்றான் சத்யகுமார்.

இருவரும் காகிதக் கோப்பைகளில் டீ பருகத் துவங்கியதும், '' இந்த முத்துக் கம்மல் உங்களுக்கு அழகா இருக்குங்க பவித்ரா'' என்றவன்

அவசரமாக, " ஸாரி" என்றான்.

"எதுக்கு ஸாரி?" என்றாள்.

"ஸைட் அடிக்கிறேன்னு திட்டிடப் போறீங்களோ.."

பதில் எதுவும் சொல்லாமல் புன்னகைத்தாள் பவித்ரா.

பவித்ரா தன் மனது திடீரென்று இறக்கைகள் கட்டிக் கொண்டதைப் போல உணரத் துவங்கினாள். வேலை இல்லாதப் பிரச்சினை தந்த வெறுப்பில் எல்லோரிடமும் எரிந்து சிடுசிடுவென்று பேசும் என் முகத்தில் இப்போதென்ன திடீர் இனிமை? 'பவித்ரா,இப்ப கொஞ்ச நாளா உன் முகமே பிரைட்டா இருக்கு. என்ன மாயம் செஞ்சே? இப்படியே எப்பவும் இரேன்' என்று அம்மா சொன்னாள்.

குளிக்கும் போது பாட்டு ஹம் செய்கிறேன். திடீரென்று சத்யகுமார் கதவைத் திறந்து எட்டிப் பார்ப்பது போல ஒரு கற்பனை தோன்றி உடல் சிலிர்க்கிறேன். சிரத்தையாக அதிக நேரம் எடுத்துக் கொண்டு அலங்கரித்துக் கொள்கிறேன். விரல்களுக்கு லைட் கலரில் பாலிஷ்போடுகிறேன். 'வேண்டாம் போ' என்று கழற்றி வைத்த கொலுசை அணிந்து கொள்கிறேன். என் ஹேண்ட் பேகில் ஒரு சின்ன கண்ணாடி புதிதாக வந்திருக்கிறது. கட்டிலில் நீண்ட நேரம் உறங்காமல் புரள்கிறேன். ஏதேதோக் கற்பனைகள்.

சத்யகுமார் என் விரல்களோடு தன்விரல்களைக் கோர்த்துக் கொள்கிறான். நாங்கள் நடந்து கொண்டே இருக்கிறோம். அந்த நீளமானப் பாதையில் நாங்கள் மட்டும்.

இரு புறமும் வண்ண மலர்ச் செடிகள். வானத்தில் ஒரு தேய்ந்த வானவில். குளிர் காற்று. சிலுசிலுவென்று மழை. ஒரு குடையின் கீழ் இருவரும் நெருக்கமாக. அப்படியும் காற்று எங்களை நனைக்கிறது. தோள்கள் உரசுகின்றன. சட்டென்று நடப்பதை நிறுத்துகிறோம்.

கண்களைக் கண்களால் கவ்வுகிறோம். உதடுகள் நான்கும் துடிக்கின்றன. சட்டென்று இறுகத்தழுவிக்கொள்கிறோம். மழை சில்லிப்பையும் மீறி உஷ்ண மூச்சுகள். அவன் உதடுகள் என் மேடிட்ட கன்னத்தில் கோலமிடுகின்றன. என் உதடுகளைத் தேடுகின்றன. அவன் கைகள் என் முதுகில் அலைகின்றன.என் கைகளும்.

இதேப் போன்ற கற்பனைகள் அடிக்கடி. குறிப்பாய் இரவுகளில். இடம் மட்டும் மாறுகிறது. ஒரு முறை கடற்கரையில். இன்னொரு முறை பாலைவனத்தில். பிறகு அருவிக்குள். அப்புறம் தண்ணீருக்கடியில்கூட.

அடுத்த முறை சத்யகுமாரை சந்திக்கும் போது, " டேய்! நான் உன்னை தீவிரமா லவ் பண்றேன்டா! மர மண்டை! உனக்கு அது புரியலையா?" என்று கேட்டுவிட வேண்டும் என்கிற உந்துதல் அதிகரித்துக் கொண்டே இருக்க.. அதை செயல்படுத்தியே விடுவது என்று தீர்மானித்தாள் பவித்ரா.

அந்தத் தீர்மானத்துடன் அவள் காத்திருந்த அன்று அவன் மிகவும் தாமதமாக நூலகத்திற்கு வந்தான்.



வழக்கமாக யார் உள்ளே வந்தாலும் அடுத்தவரைத் தேடி கை உயர்த்தி ஓசை வராமல் ஒரு ஹலோ சொல்லிக் கொள்வதுண்டு. பிறகு கொஞ்ச நேரம் கழித்து அவனோ இல்லை அவளோ எழுந்து ஜாடையில் 'டீ சாப்பிட்டுவிட்டு வரலாமா?' என்று கேட்டுக் கொண்டு வெளியில் வந்து டீ பருகியபடி ஏதாவது பொது விஷயங்களை, அவரவர் வேலை முயற்சிகளைப் பகிர்ந்து கொள்வதுண்டு.

ஆனால் அன்று உள்ளே வந்த சத்யகுமார் பவித்ரா வந்திருக்கிறாளா என்று தேடாமல் சென்று அமர்ந்து புத்தகம் படிக்கத் துவங்கியது அவளுக்குள் கேள்விகளை விதைத்தது.

ஒரு மணி நேரம் காத்திருந்து பொறுமை தீர்ந்து போன பிறகு பவித்ரா நேராக அவனிடம் வந்து நின்றாள். நிமிர்ந்து பார்த்து வறட்சியாகப் புன்னகை செய்தான். வெளியே போய்ப் பேசலாமா என்று ஜாடையில் கேட்டதும், தயக்கத்திற்குப் பிறகுதான் எழுந்தான்.

இருவரும் வெளியே வந்து சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்ததும் அவன் அவள் முகத்தைப் பார்ப்பதைத் தவிர்த்து மௌனமாகவே இருந்தான்.

"என்னாச்சு சத்யகுமார்? ஏன் ஒரு மாதிரியா இருக்கிங்க?"

"ஒண்ணும் இல்லையே" என்றான். ஆனால் அது பொய் என்றேப் பட்டது அவளுக்கு.

"உடம்பு சரியில்லையா?"

"இல்லை பவித்ரா. நல்லாத்தான் இருக்கேன்"

"அப்போ, மனசு சரியில்லையா?"

"அது என்னிக்கு சரியா இருந்திச்சி?"

"என்ன திடீர் விரக்தி?"

"ஒண்ணுமில்லை. விடுங்க"

"எதையோ மறைக்கறீங்க. என்கிட்ட சொல்லக் கூடாதா?"

"எதையும் மறைக்கலைங்க"

"முகம் பாத்தா மனசு தெரியாதா? ஆக்சுவலா இன்னிக்கு நான் ஒரு முக்கியமான விஷயம் உங்ககிட்ட பேசணும்னு நினைச்சி வந்தேன்"

"என்ன சொல்லுங்க?"

"கேக்கற மூட்ல நீங்க இல்லை. எனக்கும் சொல்ற மூடு போயிடுச்சி"

"பரவாயில்லை சொல்லுங்க பவித்ரா"

"ஒண்ணும் இல்லை. விடுங்க"

"என்னவோ சொல்லணும்னு சொல்லிட்டு ஒண்ணுமில்லைன்னா எப்படி?"

"நீங்க மட்டும் எதையோ மறைக்கலையா? நீங்க ஏன் டல்லா இருக்கீங்கன்னு முதல்ல சொல்லுங்க. அப்புறம் நான் சொல்றேன்"

"அது.. வந்து.. " என்று இழுத்தவன் அவள் முகத்தை நேராகப் பார்த்துவிட்டு சட்டென்று பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

"கமான் சத்யகுமார். என்கிட்ட சொல்லக் கூடாத விஷயமா?"

"விஷயமே உங்களைப் பத்திதாங்க "

''என்னைப்பத்தியா? என்ன? ''

''ஒரு வாரமா என் மனகலயே போட்டு உருட்டிக்கிட்டிருக்கிற தவிப்பான விஷயத்தை வெளிப்படையா சொல்லிடட்டுமா? இப் பாருங்க பவித்ரா, நாளையிலேர்ந்து நான் வேற ஏதாச்சும் லைப்ரரிக்குப் போயிடலாம்னு முடிவு பண்ணிருக்கேன்''

முகம் வாடிய பவித்ரா, '' ஏன்? '' என்றாள்.

''நாம சந்திக்காம இருக்க முடியுமே. அதுக்காக''

''ஏன் நாம சந்திக்கக் கூடாது?''

''வர வர நான் ஒழுங்கா எம்ஃபில் பண்ணி முடிப்பேனாங்கிற சந்தேகம் வந்துடுச்சிங்க பவித்ரா. உடைச்சி சொல்றேன். நீங்க திட்றதுன்னா தாராளமா திட்டிக்கலாம். என்னால சப்ஜெக்ட்ல கவனம் செலுத்த முடியலை பவித்ரா. உங்களைப் பாத்துக்கிட்டே இருக்கணும்போலத் தோணுது. உங்ககூட பேசிக்கிட்டே இருக்கணும்னு தோணுது. ரூமுக்குப் போய் புக்கைத் திறந்து வெச்சா ஒரு வார்த்தைகூட மனசுல பதிய மாட்டேங்குது. ஒரு மாதிரி தவிச்சிப் போறேன். எப்பவும் எதுலயும் உங்க நினைப்பு வந்து தொந்தரவு பண்ணுது''

அவனையே இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவுக்கு உற்சாகம் பொங்கி வழிந்து வெடித்துக் கொண்டு சிரிப்பு வந்தது.

''எவ்வளவு சீரியஸா சொல்றேன். சிரிக்கிறீங்களே..''

''நானும் இதேப் பிரச்சினையைப் பத்திதான் உங்ககிட்ட பேச நினைச்சேன்''

''என்ன சொல்றீங்க?''

''நீங்க சொன்ன அத்தனைப் பிரச்சினையையும் நானும் சந்திச்சிக்கிட்டு இருக்கேன் சத்யகுமார். நம்ம சந்திப்பை முறிச்சிக்கிட்டா இந்தத் தவிப்பு அடங்கிடாது. அது ரெண்டு மடங்காயிடும். இதுக்கு ஒரே ஒரு வழிதான் இருக்கு''

''என்ன அது?''

''காதலிக்கிறதுதான் வழி'' என்று வெட்கத்துடன் தலை குனிந்தாள் பவித்ரா.

இப்போது அவன் அருகில் வந்து அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு கிசுகிசுப்பாக, ''ஐ லவ் யூ பவித்ரா'' என்று சொல்லப் போகிறானென்று பவித்ரா காத்திருக்க, அவனோ கைகளைக் கட்டிக் கொண்டு எதிர்திசையில் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவன் அருகில் வந்து, '' என்னங்க சத்யா, உங்களுக்கு என்னைப் பிடிக்கலையா?'' என்றாள்.

''ரொம்பப் பிடிச்சிருக்கு. அதானே பிரச்சனை?''

''என்ன பிரச்சனை?''

''பவித்ரா, நான் என்ன முட்டாளா? என் மனசு உங்களை நோக்கி நகர்றதை உணர்ந்த மாதிரி, உங்க நடவடிக்கைகள்லேர்ந்து உங்க மனசும் என்னை நோக்கி நகர்றதை என்னால உணர முடியாதா? சும்மா உணர்ச்சிகளுக்கு கொம்பு சீவிக்கிறதைவிட, யதார்த்தத்தை யோசிக்கணுமில்லையா? எனக்கு என்ன தகுதி இருக்கு? ஒரு உருப்படியான வேலை இல்லை.ஒரு அழகான தேவதையை சும்மா நேசிச்சாப் போதுமா? அந்த தேவதையை தாங்கு தாங்குன்னு தாங்க வேணாமா? தேவதைக்கு மூணு வேளை சோறு போட வேணாமா? ஒரு வீடு வேணாமா? கொஞ்சம் பொருள்கள் வேணாமா? கற்பனை மட்டும்தான் தற்சமயம் என் சொத்து. பெரும்பாலான நேரம் காலி மணிபர்சோட திரியறேன். இதெல்லாம் சேர்த்துதான்யோசிக்கணும் பவித்ரா. அதனாலதான்..''

''வெய்ட்! வெய்ட்! ஆமாம்.. இது வேணும், அது வேணும்னு உங்க தேவதை எப்பவாச்சும் உங்ககிட்ட பட்டியல் எதுவும் கொடுத்தாளா என்ன? உங்க தேவதையை விசாரிச்சேன். அவளுக்கு உங்க மனசு மட்டும் போதுமாம். உங்களோட எந்த சூழ்நிலையிலயும் அனுசரிச்சி அவளால வாழ முடியுமாம்''

''பவித்ரா.. நான் சொல்ல வர்றதை..''

''நான் கேக்கப் போறதில்லை. கணக்கு போட்டு நடக்கறது கல்யாணம். எந்தக் கணக்குக்கும் கட்டுப்படாதது காதல். நம்ம மனசுக்குள்ள நுழைஞ்சுட்ட இந்த அற்புதமான காதலை தயவுசெஞ்சி அவமானப் படுத்தாதீங்க. ஐ லவ் யூ'' என்றாள்.

அவளை அதிசயமாகப் பார்த்த அவன் கண்களில் ஈரம் மின்ன, '' ஐ லவ் யூ'' என்றான்.

...தொடரும்



# இவள்

6

ரேடியோ மிர்ச்சியின் அலுவலகத்தில் பல அறைகளில் ஒன்றில் அனிதாவும் நிகழ்ச்சி தயாரிப்பாளர்களில் ஒருவனான புவனும் அவரவர் டப்பாக்களிலிருந்து மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

'' அனிதா, என் லாயர் ஃப்ரெண்டை விசாரிக்கச் சொன்னீங்களே, விசாரிச்சிட்டேன். இனி சேர்ந்து வாழப் போறதில்லைன்னு உறுதியா முடிவெடுத்தாச்சின்னா பேசாம உங்க புருஷன் சொன்ன மாதிரி பரஸ்பர விருப்பத்தின் அடிப்படையில சட்டப்படி பிரிஞ்சிடறது நல்லதுன்னு சொல்றான்''

தண்ணீர் குடித்து வைத்து, '' இல்லைன்னா அந்தாளால என்ன செய்ய முடியுமாம்?'' என்றாள்.

''கட்டாயமா டைவோர்ஸ் கேஸ் போட முடியுமாம். காரணம் என் பொண்டாட்டி நடத்தை சரியில்லாதவன்னு சொல்லி கோர்ட்ல

அவமானப் படுத்த முடியுமாம்''

"யார் வேணாலும் யார் மேல வேணும்னாலும் சேத்ததை வாரி வீசலாம் புவன். நிரூபிக்க வேணாமா? மோசமா நடந்துகிட்டது அந்த ஆள்தான். நியாயமா அந்தக் காரணத்தோட நான்தான் அவன் மேல கேஸ் போட முடியும். என்னால நிரூபிக்கவும் முடியும்''

"எமோஷனலா யோசிக்கிறீங்க அனிதா. கொஞ்சம் யதார்த்தமா யோசிங்க. கோர்ட்டோட புனிதம் கெட்டு ரொம்ப நாளாச்சு. யாரையும் பொருத்தமா ஆதாரங்கள் ஜோடிச்சி அசிங்கப்படுத்த முடியும். நான் வெளிப்படையாக் கேக்கறேன். உங்க ஐடியாதான் என்ன? சட்டப்படிப் பிரியறதில உங்களுக்கு ஏன் சம்மதமில்லை?''

"இப்போ செட்டப்பா வெச்சிருக்கிறவளை ஜாம் ஜாம்னு ரெண்டாம் தாரமா கல்யாணம் செய்துக்குவான்''

"எப்படியோ போய்ட்டுப் போறான். இப்பவும் அந்தப் பொண்ணோடதானே வாழ்ந்துட்டிருக்கான் அவன்?''

"இந்த நிமிஷம் அவ செத்தா சொத்துக்கு இவன் வாரிசாக முடியாது. ஆனா கல்யாணம் செஞ்சுக்கிட்டா இவன் அவளோட சொத்துக்கு வாரிசாயிடுவானே..''

"ஓகே. சட்டப்படி பிரியாம இருந்தா உங்களுக்கு இன்னொரு பிரச்சினையும் இருக்குன்னு என் ஃப்ரெண்டு சொல்லச் சொன்னான்''

"என்ன?''

"இந்த நிமிஷம் நீங்க பிரிஞ்சி வாழ்ந்தாலும் சட்டப்படி அவன் மனைவிதானே?''

"ஆமாம்''

"சப்போஸ் இப்போ அவன் அஞ்சி லட்சமோ பத்து லட்சமோ பேங்க்ல கடன் வாங்கிட்டு தலைமறைவாயிடறான்னு வெச்சிக்கங்க. பேங்க் உங்களைத் தேடி வரும்''

"ஓ...இப்படி ஒண்ணு இருக்கோ? இந்தக் கோணத்தில நான் இதுவரைக்கும் யோசிச்சதே இல்லை''

"பேசாம உங்க புருஷன் அனுப்பின டைவோர்ஸ் பேப்பர்ஸ்ல கையெழுத்துப் போட்டு அனுப்பிடுங்க. ஒரே மாசத்துல சட்டப்படி பிரிஞ்சிடுங்க. அதுக்கப்புறம் உங்க வாழ்க்கையைசுதந்திரமா முடிவு செய்யலாம்'' என்ற புவன் எழுந்து வாஷ்பேசினில் கை கழுவினான்.

யோசனையில் இருந்த அனிதாவின் செல்போன் ஒலித்தது. எண் பார்த்தாள். அசிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன்.

"ஹலோ சார், எப்படி இருக்கீங்க?''

"நல்லா இருக்கேன். இந்த ஒரு வாரத்துல மறுபடி அவன்கிட்டேர்ந்து போன் தொல்லை எதுவும் இல்லையே?''

"இல்லை சார். நான் உங்ககிட்ட புகார் செஞ்சது எப்படியோ தெரிஞ்சிருக்கணும்னு நினைக்கிறேன். பயந்துட்டான். இல்லை ஒரு வேளை பதுங்கிட்டான். எப்ப எப்படி பாயப் போறானோ?''



"தைரியமா இருங்க அனிதா. எனி டைம் எனி ஹெல்ப்..நான் இருக்கேன். நாளைக்கு ஸண்டே உங்களுக்கு ட்யூட்டி இருக்கா?''

"என்ன விஷயம்?''

"நான் கொஞ்சம் நல்லாவே சமைப்பேன். புதுசா ரெண்டு அயிட்டம்ஸ் நாளைக்கு முயற்சி பண்ணப் போறேன். மதியம் லஞ்சுக்கு என் வீட்டுக்கு வந்தா டேஸ்ட் பாக்கலாம். வர்றீங்களா?''

"ஆராய்ச்சிக்கு எலியை பயன்படுத்தற மாதிரியா சார்?''

"சேச்சே நல்லாவே இருக்கும். ப்ளீஸ் கம்''

"அசிஸ்டெண்ட் கமிஷனர் கூப்புட்டு வரலைன்னா எப்படி? வர்றேன்''

"அசிஸ்டெண்ட் கமிஷனராக் கூப்புடலை. சாதாரண நண்பனா மட்டுல கூப்புடறேன். அட்ரஸ் சொல்லட்டுமா. இல்லை வண்டி அனுப்பட்டுமா?''

"பரவாயில்லை, நானே வந்துடறேன். சொல்லுங்க சார்'' என்று பேப்பர், பேனாவை இடது கையால் எடுத்துக் கொண்டு, செல்போனை கழுத்தில் இடுக்கிக் கொண்டாள் அனிதா.

அனிதா, வேல் பாண்டியனின் பெரிய வீட்டை சுற்றிப் பார்க்கும்போது வியந்து போனாள்.

"உங்க வீடு இவ்வளவு ரிச்சா, ரசனையா இருக்கும்னு நான் நினைக்கவேயில்லை. சூப்பர் சார். உங்க மனைவியை நினைச்சா பாவமா இருக்கு. கொடுத்து வைக்கலையே..''

டைனிங் டேபிளுக்கு வந்த அவளை சில வினாடிகள் அப்படியே பார்த்தார் வேல் பாண்டியன். ஒரு வேளை இந்த வீட்டில் என்னோடு நீ வாழ கொடுத்து வைத்திருக்கிறதோ?

உனக்கு வழி விட்டுதான் அவள் சென்று விட்டாளோ?

"என்ன சார் பாக்கறீங்க?''

"நத்திங். உக்காருங்க அனிதா. உங்ககிட்ட பொய் சொல்லப் பிடிக்கலை. இந்த பங்களா என் பரம்பரைச் சொத்துன்னு சொன்னா கேள்வி கேக்காம நம்பிடுவீங்க. ஆனா உண்மையில நானே சம்பாரிச்சி வாங்கினதுதான். என் பதவிக்குக் கிடைக்கிற பண மரியாதையே வேற. சர்வீஸ்ல சேர்ந்த கொஞ்ச நாள் ரொம்ப சுத்தமாதான் இருந்தேன். தொடர்ந்து சுத்தமா இருக்க முடியலை. இருக்க விட மாட்டாங்க. மக்களுக்கு அதிகாரிகள் தப்பு செய்றவங்களா இருக்க வேண்டியது அவசியமா இருக்கு. நீங்க வாங்கலைன்னாலும் திணிச்சிடுவாங்க. வேற வழியில்லை. இந்த பங்களா என் சொத்துல ஒரு பகுதிதான். என் தம்பி பேர்ல அவனோட நிர்வாகத்தில ஒரு தொழிற்சாலையே நடத்திட்டிருக்கேன் அனிதா''

"சார், இதெல்லாம் எதுக்கு என்கிட்ட நீங்க..''

"என்னவோ உங்ககிட்ட வெளிப்படையா என்னைப் பத்திப் பேசணும்னு தோணிச்சி. தட்ஸ் ஆல். சாப்பிடுங்க''

சாப்பிட்டு முடித்ததும் வீட்டின் பின்புறம் இருந்த சிறிய நீச்சல் குளத்தின் அருகில் அமைக்கப் பட்டிருந்த பிளாஸ்டிக் நிழல் குடையின் கீழே அமர்ந்தார்கள்.

நீச்சல் குளத்தில் மிதந்து கொண்டிருந்த ரப்பர் டியூப்களைப் பார்த்தபடி இருந்தாள் அனிதா. சற்று நேரம் கைகளைப் பிசைந்தபடி இருந்த வேல் பாண்டியன், "அனிதா, இப்ப நான் ஒண்ணு சொல்றேன். தயவு செஞ்சி உடனே உங்க பதிலைச் சொல்லிடாதிங்க. நாலு நாள் இல்லை ஒரு வாரம்கூட நல்லா யோசிச்சி பதில் சொன்னாப் போதும்" என்றார்.

'என்ன' என்பது போல் அவரை ஏறிட்டுப் பார்த்தாள்.

"நேராச் சொல்லிடறேன். இத்தனை வருஷம் மனைவி இருந்த இடத்தில வேற யாரையும் யோசிக்காம தனிமையிலேயே இருந்துட்டேன். திடீர்னு என் வாழ்க்கையில மறுபடி வசந்தம் இருக்கறதா ஒரு ஃபீலிங் உங்களைப் பாத்ததிலேர்ந்து. ஒரு வகையில பார்த்தா நாம இரண்டு பேரும் ஒரேப் படகுலதான் போய்க்கிட்டிருக்கோம். என் மனைவி வாழ்க்கை முடிஞ்சி தனிமை. உங்க மண வாழ்க்கை முறிஞ்சி தனிமை. ரெண்டு பேரும் இந்த அர்த்தமில்லாத தனிமையை உடைச்சிட்டா என்ன? உங்க கணவர் கேக்கற விவாகரத்தை நீங்க சம்மதிச்சி கொடுத்துட்டிங்கன்னா உங்க வாழ்க்கை பத்தி ஒரு முடிவுக்கு நீங்க வர முடியும். உங்களுக்கு என்னைப் பிடிச்சிருந்தா நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க விரும்பறேன் அனிதா"

ஆச்சரியமாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்த அனிதா, "சார்" என்று ஏதோ சொல்ல முற்பட... கையமர்த்திச் சிரித்த வேல் பாண்டியன், "நோ! இப்ப உடனே பதில் சொல்ல வேணாம்னு சொன்னேன்" என்றார்.

...தொடரும்



# அவன்




இன்ஸ்பெக்டர் குருபிரசாத் பைக்கில் வந்து ஸ்டேஷன் வாசலில் இறங்கியதும், சென்ட்ரி கான்ஸ்டபிள் ஓட்டமாக வந்து வண்டியை வாங்கி ஸ்டாண்ட் போட்டார்.

உள்ளே நுழையும் முன்பாக ஒலித்த செல்போனில் எண் பார்த்து அங்கேயே நின்று மரியாதையாக குட் மார்னிங் சொன்னார்.

"ஜோதி நகர் விவகாரம் என்னாச்சுங்க குரு?"

"இப்ப தீவிரமா அந்த கேஸ்தான் பாத்துட்டிருக்கேன் சார்"

"நாலு நாளாச்சே. இன்னுமா ஒரு பிரேக் கிடைக்கலை?"



"இல்லையே.. எந்தப் பக்கம் போனாலும் ஒரு ஸ்டேஜ்ல நிக்குது"

"கொலை செய்யப் பட்ட ஆசாமி பத்தி ரஃபா ஒரு ஐடியாவும் இல்லையா குருபிரசாத்?"

"திருச்சில காணாமப் போனவங்க பட்டியல்ல வயசு, உயரம் எல்லாம் வெச்சிப் பாத்துட்டேன். பொருந்தலை. வெளியூர்காரன்தான் சார். கூட ஒரு பொண்ணும் அவனோட இருந்திருக்கா. வாடகைக்கு வந்த கால் கேர்ள் இல்லை. ஏதோ ஒரு உரிமை உள்ளவ. ஏன்னா வாடகைக்கு வர்றவ வாசல் தெளிச்சி கோலம் போட மாட்டா"

"அந்தப் பாயிண்ட்தான் எனக்குப் புரியலை. ரெண்டே கோணம்தான். அது ஒரு தீவிரவாதக் கும்பல் அல்லது ஆளைக் கடத்தி வெச்சி பிணைத் தொகையில் பணம் காசு பார்க்கற கும்பல். ரொம்ப நாளா பூட்டிக் கிடக்கிற வீடு இந்த மாதிரி கும்பல்களுக்கு ரொம்ப வசதி. டூப்ளிகேட் சாவி போட்டு உள்ளேப் போய் தங்கியிருக்காங்க. ஏதோ ஒரு பிரச்சனை. ஒருத்தனை தீர்த்துட்டு மத்தவங்க தலை மறைவாகிட்டாங்க. இதானே நம்ம யூகம்?"

"ஆமாம் சார்"

"இந்தக் கும்பல்ல வாசல் தெளிச்சி கோலம் போடற ஒரு பொண்ணு எப்படி பொருந்துறா?"

"புரியலை சார். அதான் குழப்புது. மூணாவதா ஏதோ ஒரு கோணம் இருக்கலாம். வீட்டு ஓனர் அமெரிக்கா போற விஷயத்தை யார்கிட்டல்லாம் சொல்லிருந்தாரோ... அத்தனைப் பேரையும் தரோவா விசாரிச்சேன் சார். அவங்க யாரும் இதுல சம்பந்தப் படலை."

"அந்த வாட்ச், செயின், மோதிரம் இதை வெச்சி.."

"மூவ் பண்ணிட்டிருக்கேன் சார். செயின், மோதிரத்தில கடை சீல், இன்வாய்ஸ் எதுவும் இல்லை. அது டைட்டான் வாட்ச். அதோட சீரியல் நம்பரை வெச்சி டைட்டான் கம்பெனிக்கு ஃபேக்ஸ் பண்ணி அது எந்த ஷோ ரூமுக்கு சேல்ஸ்க்கு போச்சின்னு தகவல் கேட்டிருக்கேன் சார். அந்தத் தகவல் வந்தா அந்த டீலர் கிட்ட எப்ப வித்தேே, யாருக்கு வித்தேன்னு கேக்கலாம். ஜெனரலா டைட்டான் ஷோ ரூம்ல பேர், அட்ரஸ் வாங்கிதான் பில் போடறாங்க"

"இந்த ரூட்ல கொஞ்சம் ஸ்பீட் அப் பண்ணுங்க"

"ஓகே சார்"

செல்போனை அணைத்துவிட்டு ஸ்டேஷன் உள்ளே வந்த போது வரிசையாக பயந்தபடி நின்றிருந்த நான்கு பேர் முன்னால் நின்றிருந்த சப்-இன்ஸ்பெக்டர் நாகேந்திரன் மிரட்டலாக பேசிக் கொண்டிருந்தார்.

"இத பாருங்கடா! இதமாப் பதமா கேக்கறப்பவேக் கக்கிடுங்க! இல்லை, தோலை உரிச்சி எடுத்துடுவேன். ஆமா!"

தன் நாற்காலிக்கு வந்து அமர்ந்த குருபிரசாத், "நாகேந்திரன், யாரு இவங்க?" என்றார்.

அப்போதுதான் அவரைப் பார்த்த நாகேந்திரன், "குட் மார்னிங் சார்! ஜோதி நகர் கத்தி டூப்ளிகேட் சாவி தயாரிக்கிற பூட்டு ரிப்பேர்க்காரங்களை எல்லாம் கூட்டிட்டு வரச் சொல்லிருந்தேன் சார், அரை மணி நேரமாக் கத்தறேன். தெரியலே தெரியாதுன்னு சாதிக்கிறானுங்க சார்!" என்றார் எரிச்சலுடன்.

குருபிரசாத் எழுந்து அவர்களிடம் வந்தார்.

"ஜோதி நகர்ல நடந்திருக்கிற கொலையைப் பத்தி தெரியுமா? பேப்பர்ல படிச்சீங்களா?" என்றார் அவர்களிடம் பொதுவாக, அமைதியாக.

ஆமோதித்துத் தலையசைத்தார்கள்.

"குற்றம்! நடந்தது என்னன்னு விஜய் டி.வில கூட காட்டினாங்க சார்" என்றான் நால்வரில் ஒருவன்.

"காட்டினாங்க இல்லே? அதாவதுப்பா.. கொலை செஞ்சவன், செய்யப்பட்டவன் எல்லாரும் அந்த வீட்டுக்குள்ளே சகஜமா ரெண்டு மூணு நாள் வாழ்ந்திருக்காங்க. அதில ஒரு பொண்ணும் உண்டு. பூட்டை உடைக்கலை. அப்போ ஒரு டூப்ளிகேட் சாவி தயாரிச்சிதானேபயன் படுத்திருக்கணும். என்ன சொல்றீங்க?"

"ஆமாம் சார்" என்றனர் கோரஸாக.

"யாராச்சும் சொந்தமா டூப்ளிகேட் சாவி தயாரிச்சுக்க முடியுமா? உங்களை மாதிரி ஆளுங்ககிட்டதானே வந்தாகணும்? அதனாலதான் உங்களைக் கூப்புட்டு விசாரிக்கிறோம். உங்க மேல எந்த நடவடிக்கையும் எடுக்கப் போறதில்லை. பாவம்.. நீங்க என்ன செய்வீங்க? இது உங்கத் தொழில்! இப்ப ஒருத்தர் வந்து என் வீட்டுக் கதவு சாவி தொலைஞ்சிப் போச்சின்னு உங்களைக் கூட்டிட்டுப் போனா நீங்க போய்ப் போட்டுத்தானே தருவீங்க? அவன் நல்லவனா,கெட்டவனா, சொல்றது நிஜமா, இது இவன் வீடுதானான்னு யோசனை பண்ணிட்டு இருந்தா, உங்கப் பொழைப்பு எப்படி நடக்கும்? என்ன, சரிதானே நான் சொல்றது?"

"சரிதாங்க சார்.."

"அதனால.. பட்டுன்னு சொல்லுங்க பாக்கலாம். ஜோதி நகர்ல கொலை நடந்த வீட்டு வாசல் கதவுக்கு உங்க நாலு பேர்ல யாராவது போய் டூப்ளிகேட் சாவி போட்டுக் கொடுத்தீங்களா? இந்தக் கேஸ்ல உங்களைச் சேர்க்க மாட்டேன். கோர்ட்டுக்கும் வர வேணாம். தகவல் சொன்னாப் போதும். உங்களுக்கு இந்த ஆர்டர் கொடுத்தவன் யாரு, எப்படி இருந்தான்? சுமாரா தெரியுமா.. சொல்லுங்க. உங்க மேல கை வெச்சி விசாரிக்க எனக்கு இஷ்டமில்லை. சொல்லுங்க!"

நால்வரில் ஒருவன் தயங்கிச் சொன்னான்.

"சார்.. அந்த வீட்டுக்கு டூப்ளிகேட் சாவி போட்டுக் கொடுத்தது நான்தான் சார். ஆனா நீங்க சொன்ன மாதிரி.. இதைத் தொழிலாதான் செஞ்சேன். இப்படி ஒரு வில்லங்கம் வந்து சேரும்னு தெரியலை."

"வெரிகுட். டுப்ளிகேட் சாவி போடச் சொன்னது யாரு?"

"அவன் பேரு பாபு சார்" என்றான் அவன்.

...தொடரும்



# அவள் 7

கடல் அலைகள் நகர சாலையில் வாகனங்கள் போல அடுத்தடுத்து வந்து கொண்டேயிருந்தன. அதைப் பார்த்தபடி அவர்கள் அமர்ந்திருந்தார்கள்.

"என்ன சத்யா இது.. என்ன இப்படி ஒரு பிரச்சினை?" என்றாள் பவித்ரா.

"பொண்ணையும் கொடுத்து மர மில்லையும் கொடுக்கறேன்னு எங்க மாமன் சொன்னதும் எங்கப்பாவும், எங்கம்மாவும் சுன்னு இளிச்சி தட்டு மாத்திருக்காங்க" என்றான் சத்யகுமார்.

"அதெப்படி? உங்க சம்மதம் கேக்க வேணாமா?"

"நான் மறுக்க மாட்டேன்னு ஒரு நம்பிக்கைதான். உடனே புறப்பட்டு வான்னு தந்தி மாதிரி ஒரு லெட்டர். இப்ப என்ன பண்றதுன்னே எனக்குப் புரியலை பவித்ரா."

"என்ன புரியலை? போன் பண்ணி நான் இங்க ஒருத்தியை லவ் பண்றேன், எனக்கு இந்த கல்யாணத்துல சம்மதமில்லைன்னு சொல்ல வேண்டியதுதானே?"

"எங்க வீட்ல போன் இல்லை. போஸ்ட் ஆபீசுக்குக் கூப்பிட்டு விட்டுப் பேசலாம். ஆனா போன்ல பேசற விஷயமா இது?"

"அப்ப நேர்ல போய்ச் சொல்லிட்டு வந்துடுங்க"

"அதான் பிரச்சினை. என் மாமா அரசியல்ல இருக்கார். ஜாதி வெறி வேற. கௌரவம் பாப்பார். எதாச்சும் சொல்லி என்னை மடக்கப் பாப்பார். வீட்ல தங்கச்சிக்கு வாழ்க்கை, வரப் போற தொழில் அது இதுன்னு செண்டிமெண்ட் பேசி கவுக்கப் பார்ப்பாங்க பவித்ரா"

"அப்படின்னா மர மில்லை சீரா வாங்கிட்டு ஜோரா தாலி கட்டிடலாம்னு மாப்பிள்ளை முடிவு பண்ணிட்டீங்களா?" என்றாள் கோபமாக.

"அறைஞ்சிடுவேன் பவித்ரா. என் காதலை விளையாட்டுக்கு சந்தேகப் பட்டுப் பேசினாலும் டென்ஷனாய்டுவேன். எல்லா பிரச்சினைகளையும் கடைசி வரைக்கும் சமாளிக்க முடியலைன்னா லவ் பண்ணவேக் கூடாது. அவங்களோட இந்தத் திட்டத்தை எப்படி நோகாம சரி செய்றதுன்னுதான் யோசிக்கிறேன். ஒண்ணு பண்ணலாமா?"

''என்ன?''

''அர்ஜெண்ட்டா நாம கல்யாணம் பண்ணிக்கலாமா?''

''அர்ஜெண்ட்டாவா? இங்க சோளம், சுண்டல், முறுக்கு இதானே இப்ப கிடைக்கும், தாலி கிடைக்காதே சத்யா''

''ஏய்! நான் சீரியஸாப் பேசறேன். ரெண்டே நாள்ல நமக்குக் கல்யாணம். விழுப்புரத்தில்ஒரு ஃப்ரெண்டு இருக்கான். அங்க ஒரு கோயில்ல நமக்குக் கல்யாணம்.போன் பண்ணிச் சொல்லிட்டா மாலை, தாலி, அய்யர் எல்லாம் ஏற்பாடு பண்ணிடுவான். போறோம். கல்யாணம் பண்ணிக்கிறோம். அந்தப் புதுத் தாலியோட நேரா உன்னை எங்க ஊருக்குக் கூட்டிட்டுப் போய் என் பொண்டாட்டின்னு சொல்றேன். அப்ப என்ன செய்வாங்க? திட்டலாம். அழலாம். சபிக்கலாம். அதுக்கு மேல எதுவும் செய்ய முடியாது. நீ என்ன சொல்றே பவி?''

''என்னப்பா இது திடீர்னு?''

''வேற நல்ல வழி தெரியலை பவி. உங்கம்மா நம்ம காதலுக்கு சம்மதிப்பாங்களா சொல்லு!''

''எங்கக்கா லவ் மேரேஜ் செஞ்சிப் போன பாதிப்பு இன்னும் அடங்கலை. நீயாவது நான் பாக்கற மாப்பிள்ளையை கட்டிக்கோன்னு அடிக்கடிச் சொல்றாங்க. கண்டிப்பா ஒத்துக்க மாட்டாங்க சத்யா''

'' அப்ப இதான் வழி. ஒரு நாள் டைம் போதும். நாளன்னைக்குக் கல்யாணம். ஓகேயா? சொல்லு. இப்ப சொல்லு''

''எனக்குப் புரியலை சத்யா. சந்தோஷமா இருக்கு. ஆனா சரியா, தப்பான்னு தெரியலை. இப்படி ரகசியமா ஓடிப் போயி..''

''எனக்கும் பிடிக்கலைதான் பவித்ரா. என்னைக் கேக்காம எனக்கு கல்யாணம் நிச்சயம் பண்ணித் தொலைச்சிருக்காங்களே.. அவங்களைப் பேசி சமாளிக்க முடியும்னு எனக்குத் தோணலை''

ரொம்ப நேரம் பேசி, பேசி, பேசி, பேசி...

''ஓகே. எனக்கு நீ முக்கியம். உனக்கு நான் முக்கியம். நமக்கு நம்ம காதல் முக்கியம். சரி. நீ சொன்ன மாதிரி உடனே நாம கல்யாணம் பண்ணிக்கலாம். ஏற்பாடு செஞ்சிடு'' என்றாள் பவித்ரா.

அவர்களை நிலா பார்த்துக் கொண்டிருந்தது.

தோளில் மாட்டிய சிறிய பேகோடு அம்மா முன்பு வந்து நின்றாள் பவித்ரா.

''அம்மா, என்னை ஆசிர்வாதம் பண்ணு''

கால்களில் விழுந்தவளை ஆச்சரியமாகப் பார்த்த அம்மா, ''என்னடி இது புதுசா இருக்கு? எப்பவும் இண்ட்டெர்வியூவுக்கு போறப்ப என்கிட்ட ஆசிர்வாதம் கேட்டதில்லை. சரி சரி, நல்லா இரு. இந்த வேலை கிடைச்சி செட்டிலாய்ட்டா ஆறு மாசத்துல கல்யாணம் பண்ணி வைக்கிறேன். எந்திரி'' என்றாள்.

பவித்ரா எழுந்து அம்மாவை குற்ற உணர்ச்சியை வெளிக் காட்டாமல் பார்த்தாள்.



'அம்மா, என்னை மன்னிச்சிடு. பொய் சொல்றேன். நான் இண்ட்டெர்வியுக்காக கோவைபோகலை. திருட்டுத் தாலி கட்டிக்கிறதுக்காக விழுப்புரம் போறேன்' என்றாள் மானசீகமாக.

''ஆமாம், நீ வர்றதை உன் கோயமுத்தூர் ஃப்ரெண்டுக்கு போன் பண்ணி சொல்லிட்டியா?''

''ம்''

''நாளைக்கு நைட்டு புறப்பட்டுடுவேதானே?''

''ம், லேட்டானா போன் பண்றேன்''

''நானும் கூட வர்றேன்னு சொன்னாக் கேக்க மாட்டேன்னுட்டே''

''இங்க கடையை யார் பாத்துக்குவாங்க? எதுக்கு அநாவசியமா கடையைப் பூட்டிட்டுப்போய் வருமானத்தைக் கெடுத்துக்கணும்? நான் என்ன சின்னப்பொண்ணா? டைமாச்சி, வரட்டுமாமா?''

''சரி, போய்ட்டு வா. இண்ட்டெர்வியூ முடிஞ்சதும் ஒரு தடவை எனக்கு போன் பண்ணிடு''

''சரிம்மா''

வீட்டை விட்டு வெளியே வந்ததும் தாவுல் ஓனர் இளைஞன், ''வெளியூருக்கா?'' என்றான்.

''இல்ல''

''பேகு எடுத்துட்டுப் போறீங்க?''

''லாண்ட்ரில துணி போடப் போறேன். இல்லை, பேகுல ஜிப் தைக்கப் போறேன். இல்லை,பேகை விக்கப் போறேன். போதுமா?'' என்றுவிட்டு நடந்தவளை தலையைச் சொறிந்துகொண்டு பார்த்தான் அவன்.

தெருமுனையில் காத்திருந்தான் சத்யகுமார். இவள் வருவதைப் பார்த்ததும் கைதட்டி ஆட்டோ அழைத்தான். இருவரும் ஏறிக் கொண்டதும் '' கிண்டி சத்திப்பாரா கிட்ட போகணும்'' என்றான் டிரைவரிடம்.

அரை மணிக்குப் பிறகு இருவரும் விழுப்புரம் செல்லும் பேருந்தில் அருகருகில் அமர்ந்திருந்தார்கள். அவள் கையோடு தன் கையை இயல்பாக கோர்த்துக் கொண்டான் அவன். புன்னகைத்தாள். அவன் தோளில் இதமாக தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

''நாளைக்குக் காலைல அஞ்சி மணிக்குக் கல்யாணம். அதுக்கப்புறம் நீயும், நானும் புருஷன்பொண்டாட்டி. ரொம்ப த்ரில்லிங்கா இருக்குல்ல?''

''ஆமாம். தெர்லலாவும் இருக்கு. கரெக்ட்டுதானா நாம பண்றது?''

''உன் கழுத்துல தாலி கட்டினப்புறமும் கேப்பேப் போலிருக்கே?''

விழுப்புரம் பஸ் ஸ்டாண்டில் காத்திருந்த இளைஞனை, '' என் ஃப்ரெண்டு கதிர். ஒரு ட்ரான்ஸ்போர்ட் கம்பெனில கிளார்க்கா இருக்கான்'' என்று அறிமுகப் படுத்தினான் சத்யகுமார்.

''கிருஷ்ணா லாட்ஜ்ல ரூம் போட்டுருக்கேன். லவ்வர்ஸ்னு சொல்ல முடியாதுல்ல, என் ஃப்ரெண்டும், அவன் மிஸஸும்னு சொல்லிப்

போட்டுருக்கேன். எல்லா ஏற்பாடும் ரெடி'' என்றான் கதிர்.

இருஷ்ணா லாட்ஜில் இவர்களோடு சேர்ந்து சாப்பாடு சாப்பிட்டுவிட்டு.''காலைல நாலு மணிக்கு எந்திரிச்சி குளிச்சி ரெடியாகிடுங்க. இதோ புதுத் துணி இருக்கு. நாலரை மணிக்கு நான் வந்து கூட்டிட்டுப் போறேன். பக்கத்துலதான் கோயில். ஆட்டோல போயிடலாம்'' என்று சொல்லிவிட்டு கதிர் போனதும், கதவைச் சாத்தினதும் அவளைப் பார்த்து கண்ணடித்த சத்யகுமார், ''ஏய் கல்யாணப் பொண்ணு, நீ இன்னும் அழகா தெரியறே'' என்று அவள் தோள்களில் கைகளைப் போட்டான்.

''மாப்பிள்ளை எதுக்கு வழியறீங்க சார்?''

'' நாளைக்குக் காலைல பத்து மணிக்கு ரூமைக் காலி பண்ணிட்டு எங்க ஊருக்குப் புறப்படறதாப் பேசினமில்ல..?''

''ஆமாம்...''

''அப்போ ஃபர்ஸ்ட் நைட் எப்போ கொண்டாடறதாம்? சில கல்யாணங்கள்ல முகூர்த்தத்துக்கு முதல் நாளே வரவேற்பு வைக்கிற மாதிரி இன்னிக்குக் கிடைச்சிருக்கிற இந்த ராத்திரியையே முதல் ராத்திரியா அட்லான்ஸா கொண்டாடலாம்னு மாப்பிள்ளை யோசிக்கிறார்''

அவள் முகத்தை தாபத்துடன் நெருங்கிய அவன் மீசையைப் பிடித்து இழுத்து, '' அவசரத்தைப் பாரு..! கொஞ்சம் பொறுமையா இருக்க முடியாதாக்கும்? முதல் ராத்திரிதான் கொண்டாடணும்னு சட்டமா? முதல் பகல் கொண்டாடக் கூடாதா?'' என்றாள் பவித்ரா சிணுங்கலாக.

''அப்ப ஓகே. அப்ப மரியாதையா தள்ளிப் படுக்க வேண்டியதுதான்'' என்று சிரித்தான் சத்யகுமார்.

அந்தக் கோயில் மிகச் சின்னதாக, சிதிலமாக இருந்தது. இன்னும் இருட்டு விலகாத ஐந்து மணிக் காலையில் ஒரே ஒரு நாப்பது வாட்ஸ் பல்ப் வெளிச்சத்தில் சத்யகுமார், பவித்ரா, கதிர் நின்றிருக்க.. உள்ளே சந்நிதியில் அர்ச்சகர் சர விளக்கொளியில் டல்லடித்த அம்மனுக்கு அர்ச்சனை செய்து கற்பூரம் காட்ட.. கன்னத்தில் போட்டுக் கொண்டார்கள்.

தட்டில் வைத்த மாலைகள், தாலியோடு வெளிப்பட்டு, ''மணி அஞ்சி தாண்டிடுத்தோல்லியோ, கட்டுங்கோ. அம்மனை மனசில நினைச்சுண்டு, ஆயுசுக்கும் பிரியாம இருக்கணும்னு வேண்டிண்டு கட்டுங்கோ''

சத்யகுமார் தாலி எடுத்து பவித்ராவுக்குக் கட்ட, கதிர் கை தட்டினான்.

''குங்குமம் எடுத்து தாலில வைங்கோ. நெத்திலயும் வைங்கோ'' என்றவர், வைத்ததும், ''இப்ப மாலை மாத்திக்கங்கோ'' என்றார். மாற்றிக் கொண்டார்கள்.

''என்ன கதிர், கேமிரா ஏற்பாடு பண்ணச் சொல்லிருந்தேனே?''



''ஸாரி சத்யா. ஒரு ஃப்ரெண்டுகிட்ட சொல்லி வைச்சிருந்தேன். கடைசி நிமிஷத்துல சொதப்பிட்டான்''

''என்னை கவனிச்சிடுங்கோ. முறையா நிர்வாகத்துக்கு மனு கொடுத்து பணம் கட்டிதான் செய்யணும்.. ரகசியமா நடத்தி வைச்சுட்டேன். பாத்துப் போட்டுக் கொடுங்கோ''

சத்யகுமார் ஐநூறு ரூபாய் கொடுத்ததும் நாவல்பழமாகச் சிரித்து, ''நன்னா இருப்பேள்! போயிட்டு வாங்கோ'' என்றார்.

மாலைகளை கதிரிடம் கொடுத்து நன்றி சொல்லிவிட்டு, காத்திருந்த ஆட்டோவில் ஏறிக் கொண்டார்கள். 5.45க்கு மீண்டும் அவர்கள் லாட்ஜ் அறையில் இருந்தார்கள்.

''பவித்ரா, இன்னும் விடியலை'' என்றான் சத்யகுமார்.

''ஆமாம்''

''அதனால இன்னும் ராத்திரி மிச்சம் இருக்கு.'' என்று அவனை அணைத்துக் கொண்ட போது சிலிர்ப்போடு அவன் மேல் சாய்ந்தாள் பவித்ரா.

''பவி, இப்ப ஒரு முக்கியமான விஷயம் முடிவு செய்துடலாம். உனக்கும், எனக்கும் சரியான வேலை கிடைச்சி செட்டில் ஆனப்புறம்தான் நாம குழந்தை பத்தி யோசிக்கணும். என்ன சொல்றே?''

''கரெக்ட்தான். இப்ப குழந்தைக்கு என்ன அவசரம்?''

''நீயும் இப்படித்தான் சொல்வேன்னு எனக்குத் தெரியும். அதனால நான் ரெடியா வாங்கி வெச்சிட்டேன்'' என்று மேஜை டிராயரிலிருந்து எடுத்துக் காட்ட.. '' ச்சீ! பயங்கரமான ஆளுப்பா! எவ்வளவு முன் ஏற்பாடுகள்!'' என்றாள்.

அவளைப் படுக்கையில் சாய்த்து.. அவள் மேல் சரிந்து, உஷ்ண மூச்சோடு அவள் உதடுகளை உதடுகளால் நெருங்கினான். இப்போது அவன் கைகளின் எந்தச் செயலையும் அவள் கட்டுப்படுத்தவில்லை. சற்று நேரத்தில் இருவரும் கட்டுப்பாட்டில் இல்லை.

. மின் விசிறி சுழன்று கொண்டிருந்தது.

...தொடரும்



# இவள்




அனிதா முகத்தில் பவுடர் ஒற்றிக் கொண்ட பின் ஸ்டிக்கர் பொட்டு ஒட்டிக் கொண்டாள். மேஜை மீதிருந்த தன் கைப்பையை எடுக்கப் போனபோது அவசரமாக அதை எடுத்த ஜான்சி, '' இரு. போலாம். எனக்கு பதில் சொல்லிட்டுப் போ'' என்றாள்.

''விளையாடாதே ஜான்சி, நேரமாச்சி. குடு.. புறப்படணும். நான் போய் லைவ் ப்ராக்ராம்ல ஜாய்ன் பண்ணணும்''

''ம்கூம். அசிஸ்டெண்ட் கமிஷனர் தன் மனசை உன்கிட்ட வெளிச்சம் போட்டுக் காட்டி பத்து நாளாச்சு. அவருக்கு என்ன பதில் சொல்லப் போறே?''

''அது.. வந்து.. நைட்டு பேசலாம்''

''எப்பப் பேசினாலும் நழுவறே அனிதா. இந்த மாதிரி ஒரு வாய்ப்பு யாருக்கும் எப்பவும் கிடைக்காதுன்னு உனக்குப் புரியலையா?''

''புரியுது''

''பின்னே ஏன் ஒரு முடிவுக்கு வர மாட்டேங்கறே?''

''வந்தாச்சு''

''என்ன முடிவு?''

சற்றேத் தயங்கிய அனிதா பிறகு சின்னப் புன்னகையுடன், ''பரஸ்பர விவகாரத்துக்கு சம்மதம்னு டைவோர்ஸ் பேப்பர்ல கையெழுத்துட்டுப் போட்டு நேத்துதான் அனுப்பி வெச்சேன்'' என்றாள்.

''வெரிகுட்! விவேகமான நல்ல முடிவு'' என்று அவளைக் கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்ட ஜான்சி,'' இதை ஏ.சி சார்கிட்ட சொல்லிட்டியா?''

மறுத்துத் தலையசைத்தாள்.

''ஏன்?''

''கூச்சமா இருக்கு ஜான்சி''

''அடச் சீ! கூச்சமாம்! அந்தாளு பாவம் ஒவ்வொரு நாளும் எவ்வளவு படபடப்பா காத்துக்கிட்டிருப்பார்! நாளாக நாளாக உன் மௌனம் அவரை வதைச்சிருக்கும். இப்படிப் ப்ரப்போஸ் செஞ்சதே தப்போன்னுகூடத் தவிச்சிருப்பார். கமான் அனிதா. எடுத்த முடிவை சொல்றதுக்கு என்னத் தயக்கம்? எடு உன் செல்போனை. இப்பவே என் முன்னாடியே சொல்றே!''

''நோ! நோ! நான் அப்புறம் சொல்லிக்கிறேனே..''

''முடியாது. இப்ப என் முன்னாடி சொல்லணும். ம்.. செய்யி..''

''விட மாட்டியே..''

அனிதா செல்போனில் எண்கள் தொட்டாள்.

''ஹலோ, அசிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன்''

''நான்..நான்..அனிதா பேசறேன்''

''ஹாய் அனிதா. குட் மார்னிங்''

''குட் மார்னிங்''

''அப்புறம்..யோசிச்சாச்சா? டைம் போதுமா?''

''ம்''

''என்ன பதில்?''

''வந்து..'' சட்டென்று அனிதா போனை ஜான்சியிடம் நீட்டி, '' நீ சொல்லிடேன்'' என்று கிசுக்க..ஜான்சி வாங்கி, ''சார், நான் அவ ஃப்ரெண்டு ஜான்சி பேசறேன். ரூம் மேட். அவ தன் சம்மதத்தைச் சொல்றதுக்கு வெக்கப் படறா. அப்புறமா உங்களை நேர்ல சந்திப்பா'' என்றாள்.



''ரொம்ப சந்தோஷம். இந்தத் தயக்கம் நியாயமானதுதான். எனக்கு ரொம்ப ரொம்ப சந்தோஷம்னு சொல்லிடுங்க. அனிதாவை என் வீட்ல மீட் பண்றதுக்கு ஆர்வத்தோட காத்துக்கிட்டிருக்கேன்னும் சொல்லிடுங்க. வச்சிடறேன்.''

ஜான்சி அவளைக் குறும்பாகப் பார்த்து, ''அவர் என்ன சொன்னார்னு நான் சொல்ல மாட்டேனே..'' என்றாள்.

''ஏய்! ஏய்! சொல்லுப்பா. என்ன சொன்னார்?'' என்று கெஞ்சத் துவங்கினாள் அனிதா.

அம்பத்தூரில் அந்தத் தொழிற்சாலையின் அலுவலகக் கட்டிடம் முன்பாக வந்து நின்ற காரிலிருந்து அசிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன் ஸஃபாரி உடையில் இறங்கினார். வாட்ச்மேன் ஓடி வந்து வணக்கம் சொன்னான்.

''அய்யா இந்தப் பக்கம் வந்தே நாளாச்சுங்க''

''தம்பிதான் பொறுப்பா நிர்வாகம் பண்ணிட்டிருக்காரே, அப்புறம் இங்க எனக்கென்ன வேலை?'' என்று அவன் தோளில் தட்டிவிட்டு லிஃப்ட்டில் நுழைந்தார். அலுவலகத்திற்குள் நுழைந்ததும் அத்தனைப் பேரும் அவசரமாக எழுந்து வணக்கம் சொன்னார்கள்.

தனியறையிலிருந்து வெளியே வந்து, '' அட, வாங்கண்ணே..'' என்று புன்னகையுடன் வரவேற்றான் கோட், டை அணிந்த ராஜாராமன். தனியறைக்குள் வந்ததும் எம்.டி நாற்காலியைக் காட்டி,''உக்காருங்கண்ணே'' என்றான் பவ்யமாக, ''என்ன திடீர்னு?''

''சொல்றேன்'' என்று அமர்ந்தவர் சைகையால் அவனையும் அமரச் செய்து,''உனக்கு முக்கியமான வேலை எதுவும் இல்லையே.. கொஞ்ச நேரம் பேசலாமா?'' என்றார்.

''உங்ககிட்ட பேசறதைவிட முக்கியமான வேலை வேற என்ன இருக்கு? ஏதாச்சும் குடிக்கிறீங்களா?''

''வேணாம் ராஜா. எப்படிப் போயிட்டிருக்கு கம்பெனி?''

''நேத்துதான் ஆடிட்டர் ரிப்போர்ட் வந்திச்சி. போன வருஷத்தைவிட பதினாறு பர்செண்ட் அதிக லாபம். ரிப்போர்ட் பாக்கறீங்களா?''

''டேய்! என்னிக்குடா நான் கணக்கு பாத்தேன்? உன் திறமை தெரிஞ்சிதானே உன்னை இதுல உக்கார வெச்சேன்? நான் வேற ஒரு பர்சனல் மேட்டர் பேசணும். தயக்கமா இருக்கு'' நகங்களைப் பார்த்தார் வேல் பாண்டியன்.

''எங்கிட்ட என்னண்ணே தயக்கம்?''

''வந்து.. தனிமை ரொம்ப கஷ்டமா இருக்குப்பா. வேலை தீவிரத்தில் அதை மறந்தாலும், வீட்டுக்கு வந்தா உறுத்துது''

''புரியுதுண்ணே. முழு கவனமும் செலுத்தணும்னுதான் நான் இங்க தனியா நம்ம இண்டஸ்ட்ரிக்குப் பக்கத்திலயே வீடு எடுத்துத் தங்கினேன். வேணும்னா காலி பண்ணிட்டு நானும் உங்ககூட வந்து தங்கிடட்டுமா?''

''அதுக்குச் சொல்லலை. என் வாழ்க்கைக்கும் ஒரு அர்த்தம் வேணாமா? எதிர்காலத்துக்கு ஒரு பிடிப்பு வேணாமா? சரியோ, தப்போ ஏகப்பட்டது சம்பாரிச்சுட்டேன். அதைத் தொலைச்சிடாம ஒரு தொழிற்சாலையா உருவாக்கிட்டேன். ஆனா இந்தச் சொத்தை எல்லாம் அனுபவிக்க ஆள் இல்லையேப்பா..''

''என்னண்ணே பண்றது? அண்ணிக்குக் கொடுத்து வைக்கலையே..''

''ராஜா, நான்..''

''சொல்லுங்க..''

''இன்னொரு கல்யாணம் பண்ணிக்கலாமான்னு யோசிக்கிறேன்''

''நல்ல யோசனைதானே? இதுக்கு ஏன் மென்னு முழுங்கறீங்க?''

''இல்ல.. உனக்கு பொண்ணு பாத்து கட்டி வைக்கிற கடமை இருக்கறப்போ நான் மறுபடி கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா..''

''நான்தான் கல்யாணமே பண்ணிக்கப் போறதில்லைன்னு சொல்லியிருக்கேனே.. என் பாலிசி வேற.. வாழ்க்கைல கமிட்மெண்ட்ஸ் இல்லன்னாதான் சுதந்திரமா இருக்க முடியும்னு நம்பறவன். என்னை விடுங்க. சரி, பொண்ணு பார்த்தாச்சா? யாரு?''

''அனிதான்னு ஒரு பொண்ணு. நீ கூட கேள்விப் பட்டிருப்பே. ரோடியோ மிர்ச்சில ஜாக்கி. ஒரு அறிமுகம் கிடைச்சது. பழக்கத்துல மனசு பிடிச்சது. கிட்டத்தட்ட காதல் மாதிரின்னு வெச்சுக்கயேன். அவளுக்கும் முதல் மேரேஜ் ஃபெய்லியர். டிவோர்ஸ் வாங்கப் போறா. சிம்பிளா மேரேஜ் பண்ணிக்கலாம்னு ப்ளான்''

''ரொம்ப சந்தோஷம் . நல்ல முடிவுதான்''

''இன்னொரு விஷயம். போலீஸ் வேலையை ரிசைன் பண்ணிடலாம்னு இருக்கேன். அவளும் படிச்சிருக்கா. மேரேஜுக்கு அப்புறம் நானும் அவளும் இந்தக் கம்பெனியை சேர்ந்தே நிர்வாகம் பண்ணலாம்னு முடிவு. இத்தனை நாள் இந்தக் கம்பெனியை பொறுப்பாபார்த்துக்கிட்ட உன்னையும் ஒரு பார்ட்னரா சேர்த்து அக்ரிமெண்ட் ரெடி பண்ணச் சொல்லியிருக்கேன். வக்கீலும், ஆடிட்டரும் கன்சல்ட் பண்ணி டாகுமெண்ட்ஸ் ரெடி பண்ணுவாங்க. உனக்கு இதுல ஆட்சேபனை எதுவும் இல்லையே..''

''நல்லா இருக்கே... இதுல ஒரு பைசா முதல் நான் போடலை. எல்லாம் உங்க சொத்து. நீங்க கவர்மெண்ட் உத்தியோகத்துல இருக்கிறதால லைசென்ஸ்லேர்ந்து எல்லாம் என் பேர்ல ஆரம்பிச்சீங்க. இப்ப நீங்களே எடுத்து நடத்த நினைக்கறீங்க. இதுல ஆட்சேபனை சொல்ல என்ன இருக்கு? எப்ப எங்க கையெழுத்துப் போடணும்னு சொல்லுங்க. போடறேண்ணே''

''வெரிகுட். என் தம்பியைப் பத்தி எனக்குத் தெரியாதா? அவசரமில்லை. முதல்ல எங்க மேரேஜ்'' என்ற வேல் பாண்டியன் மணிபர்ஸிலிருந்து அனிதாவின் புகைப்படம் எடுத்துக் காட்டி, ''இதான் அனிதா'' என்றார்.



''அண்ணி ரொம்ப ஹோம்லியா இருக்காங்க'' என்றான் ராஜாராம்.

''அந்த ஹோம்லினெஸ்தான் எனக்கு ரொம்பப் பிடிச்சது'' என்ற வேல் பாண்டியன் எழுந்துகொண்டு, ''நான் புறப்படறேன்'' என்றார்.

அவர் போனதும் ராஜாராமின் புன்னகை முகம் மாறியது. சிவந்தது. கறுத்தது.

நாற்காலியில் உட்கார்ந்த அவன் தீவிரமாக யோசிக்கத் துவங்கினான்.

...தொடரும்



# அவன் 8

இன்ஸ்பெக்டர் குருபிரசாத்தின் முகம் பிரகாசமானது.

மற்றவர்களைப் போகச் சொன்னார். தகவல் சொன்ன அந்தப் புட்டு கிப்பேர் ஆசாமிக்கு முதலில் காபி வரவழைத்துக் கொடுத்து, அவன் குடித்த பிறகு... ''நிதானமா சொல்லு. பதட்டமில்லாம சொல்லு. உன் பேர் என்ன?''

''சுப்புராயன் சார்''

''மறுபடியும் சொல்றேன். இதுல உனக்கு எந்தப் பிரச்சினையும் வராது. எந்தத் தொந்தரவும் இல்லாம நான் பார்த்துக்கறேன். உனக்குத் தெரிஞ்ச எந்தச் சின்னத் தகவலையும் மறைக்காமச் சொல்லணும். என்ன?''

''சரிங்க சார்''

''யாரோ ஒரு பாபு அந்த ஜோதி நகர் வீட்டுக்கு டூப்ளிகேட் சாவி போடச் சொன்னதா சொன்னியே. அவனைப் பத்திச் சொல்லு. அவன் யாரு? எங்க இருக்கான்?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது சார். அவனை அதுக்கு முன்னாடி பாத்ததில்லை. நான் உறையூர் பஸ் ஸ்டாப் பக்கத்துல சின்னதா கடை வெச்சிருக்கேன். அங்க வந்தான். ஜோதி நகர்ல எங்க முதலாளி வீட்டு சாவி தொலைஞ்சி போச்சி. டூப்ளிகேட் சாவி ஒண்ணு போடணும்னு சொல்லிக் கூட்டிட்டுப் போனான். வாசல் கதவைக் காட்டினான். அங்கயே உக்காந்து ஒரு மணி நேரத்துல டூப்ளிகேட் சாவி தயாரிச்சிக் கொடுத்தேன். இருநூறு ரூபாய் கொடுத்தான். வாங்கிட்டு வந்துட்டேன்.''

''வீட்டு முதலாளியோ, வேற யாருமோ அங்க இல்லையா அப்போ?''

''இல்லை சார்''

''உனக்கு அவன் மேல சந்தேகம் எதுவும் வரலையா?''

''லேசா சந்தேகம் வந்திச்சி. கேள்வி கேட்டா என்னை விட்டுட்டு வேற எவனையாவது கூட்டிட்டுப் போவான். நமக்கென்னன்னு

போட்டுக் கொடுத்துட்டேன்''

''அதுக்கப்புறம் அவனை நீ பாக்கவே இல்லையா?''

''இல்.. ஒரு தடவை பாத்தேன் சார்''

''எங்க பாத்தே?''

''நான் சைக்கிள்ல போயிட்டிருந்தேன். அவன் குமரன் நகர்ல ஒரு டைலர் கடையில உக்காந்து பேப்பர் படிச்சிட்டிருந்தான். அவன் என்னைப் பாக்கலை''

''வெரிகுட். என்ன கடை அது? பேர் தெரியுமா?''

''பேர் தெரியாது. ஆனா டைலர் கடையோட இடம் தெரியும்''

''அந்த பாபு முகம் உனக்கு ஞாபகம் இருக்கா?''

''இருக்கு சார்''

''சரி, என்னோட வா''

சுப்புராயனை ஜீப்பில் ஏற்றிக் கொண்டு புறப்பட்ட குருபிரசாத் சில நிமிடங்களில் குமரன் நகர் வந்தார்.

''ஜீப்பை மெதுவா ஓட்டுப்பா. சுப்புராயன், அந்த டைலர் கடை எதுன்னு காமி''

''அதோ... அந்தக் கடைதான் சார்''

இறங்கி மணி டைலர்ஸ் கடைக்கு அவர்கள் வந்த போது துணி வெட்டிக் கொண்டிருந்த மணி அதிர்ச்சியுடன் பார்த்தான்.

''உன் ஃப்ரெண்டு பாபு எங்கடா?'' என்றார் குருபிரசாத் அதிகாரமாக.

''எந்த பாபு சார்?''

''பிச்சிடுவேன் படவா. எப்பவும் உன் கடைக்கு வந்து, பேப்பர் படிப்பானே..பாபுவைத் தெரியாது? நடிக்காதே!''

''அவனா சார்? அவன் என் ஃப்ரெண்டு இல்ல சார். துணி தைக்க வர்றப்ப பழக்கம். அடிக்கடி வருவான்''

''சரி அவன் எங்க?''

''இப்ப கொஞ்ச நாளா வர்றதில்லை சார்''

''அப்படியா, அவன் வீடு எங்க இருக்கு?''

''தேவகி காலனில ஒரு மெடிக்கல் ஸ்டோர்ஸ் இருக்கு. அது மாடில ஒரு ரூம் எடுத்துத் தங்கியிருக்கிறதா சொன்னான். ரியல் எஸ்டேட் பண்றேன்னு சொல்லுவான். ஆட்டோ ஓட்டறேம்பான். எதுவும் நிலைக்கிறதில்லை. கைல காசு மட்டும் தாராளமாப் புரளும். கொஞ்சம் வில்லங்கமான பார்ட்டி சார். என்ன சார் பண்ணான்?''

'' நீ சொன்ன இடத்துல அவன் கிடைக்கலைன்னா உன்னை மறுபடி விசாரிக்கிறேன்''

உடனே புறப்பட்ட குருபிரசாத் விசாரித்துக் கொண்டு தேவகி காலனியில் அந்த மெடிக்கல்ஸ் மாடிக்கு வந்த போது, அறை பூட்டியிருந்தது. மெடிக்கல்ஸில் விசாரித்தார்.



''அவன் எப்ப வர்றான், எப்ப போறான்னேத் தெரியாது சார். கொஞ்ச நாளா ஆளைக் காணோம் சார். ஒரு வேளை காலி பண்ணிட்டானோ என்னவோத் தெரியலை'' என்றார்கள்.

கான்ஸ்டபிளை விட்டு அறையின் பூட்டை உடைக்கச் சொன்னார். உள்ளே வந்தார். ஒரு பழைய பக்கெட்டும், ஒரு பிரஷ்ஷும் சுவரில் காலண்டரும் தவிர எதுவுமில்லை.

''காலி பண்ணிட்டான். இந்த பில்டிங் ஓனர் யாருன்னு கேளுப்பா'' என்றார் குருபிரசாத்.

குருபிரசாத் ஸ்டேஷனுக்குத் திரும்பியபோது சப்இன்ஸ்பெக்டர் நாகேந்திரன் ஆர்வம் கண்களில் மின்ன சொன்னார், ''சார், அந்த வாட்ச் பத்தி தகவல் கிடைச்சிருக்கு''

''சொல்லுங்க''

''சென்னையில பாண்டிபஜார்ல அஜந்தா வாட்ச் கம்பெனி அப்படிங்கற டீலருக்கு அனுப்பப்பட்ட வாட்ச்னு கம்பெனில சொல்லியிருக்காங்க''

''வெரிகுட். அந்த டீலர்கிட்ட பேசினீங்களா?''

''பேசிட்டேன் சார். அவங்க கம்ப்யூட்டர் மூலமா பில் போடறாங்க. அதனால அந்த வாட்சை யாருக்கு வித்தோம்னு பில் பாத்து போன்லயே அட்ரஸ் சொல்லிட்டாங்க. குறிச்சி வெச்சிருக்கேன் சார்''

''என்ன அட்ரஸ் அது? படிங்க''

''கே.ரவிசந்திரன், 18, காசிவிஸ்வநாதர் கோயில் தெரு, சைதாப்பேட்டை, சென்னை15.''

''வெரிகுட். கொலை செய்யப்பட்டவன் அந்த வாட்சை விலைக்கு வாங்கியிருந்தா அவன் பேரு ரவிச்சந்திரன். ஆனா அது செகண்ட் ஹாண்ட்ல வாங்கினதா இருந்தா சிக்கல்''

''ஒரு வேளை ரவிச்சந்திரன் இந்தக் கொலை செய்யப்பட்டவனுக்கு இந்த வாட்சை பரிசாக்கூட கொடுத்திருக்கலாம் சார்''

''மே பி. இன்னொரு சாத்தியம்கூட இருக்கு. கொலை செய்யப்பட்டவன் இந்த வாட்சை ரவிச்சந்திரன் கிட்டேர்ந்து திருடியும் இருக்கலாம். ஆனா நமக்கு ஆராய ஒரு முனை கிடைச்சிருக்கு. நீங்க முதல்ல சைதாப்பேட்டை ஸ்டேஷனை காண்டாக்ட் பண்ணி விபரம் சொல்லுங்க. அந்த அட்ரஸ்ல இருக்கிற ரவிச்சந்திரன் பத்தி கம்ப்ளீட்டா தகவல்கள் சேகரிக்கச் சொல்லுங்க''

''யெஸ் சார்'' என்றார் சப்இன்ஸ்பெக்டர் நாகேந்திரன்.

''ஒண்ணு நிச்சயம். ரெண்டு கோணத்தில இந்தக் கேசை நெருங்க ஆரம்பிச்சிட்டோம். சீக்கிரத்திலேயே குற்றவாளியைப் பிடிச்சிட முடியும்னு எனக்கு நம்பிக்கை வந்துடுச்சி'' என்றார் குருபிரசாத்.

...தொடரும்



# அவள்

## 8

பவித்ரா அந்த ஹோட்டல் அறையில் குளித்தபோது மகிழ்ச்சி, வெட்கம் எல்லாம் கலந்து கட்டி அவளை ஆக்கிரமித்திருந்தது. அவள் உடலில் இன்னும் அந்த இன்பச் சிலிர்ப்பு மிச்சமிருந்தது. உடுத்திக் கொண்டு அறைக்குள் வந்தபோது சத்யகுமாரின் முகம் வாடியும் ஏமாற்றத்திலும் இருப்பதைக் கவனித்தாள்.

''என்னாச்சு சத்யா?''

''இப்போ நேரா புறப்பட்டு எங்க ஊருக்குப் போறதா பிளான் பண்ணியிருந்தோமே, அதுல ஒரு சிக்கல் பவி''

''என்ன சிக்கல்?''

''என் தங்கைகிட்ட பேசி சூடு தெரிஞ்சிக்கலாம்னு எங்க வீட்டுக்கு பக்கத்து வீட்டுக்கு போன் செஞ்சேன். அப்பா, அம்மா, தங்கச்சிங்க எல்லாம் குடும்பத்தோட பழநிக்கு போயிருக்காங்களாம். வர ரெண்டு நாளாகும்னு சொல்லிட்டு சாவி குடுத்துட்டுப் போயிருக்காங்களாம்''

''அடடா! இப்ப என்ன செய்றது?''

''சென்னை திரும்பிட வேண்டியதுதான். ரெண்டு நாள் கழிச்சி அவங்க ஊருக்கு திரும்பி வந்துட்டாங்களான்னு தெரிஞ்சிக்கிட்டு அதுக்கப்புறம் போலாம்''

''அப்போ எங்க அம்மாவுக்கு எப்போ சொல்றது?''

''முதல்ல எங்க குடும்பத்துல கல்யாணம் ஆன தகவல் சொல்லி ஆசிர்வாதம் வாங்கிட்டு எங்கப்பா, அம்மா ரெண்டு பேரையும் கையோட கூட்டிக்கிட்டு சென்னை வந்து அவங்களோட உங்கம்மாவைப் பாக்கலாம்னு நினைக்கிறேன்''

''நல்ல யோசனைதான். ஆனா அது வரைக்கும் எங்கம்மாகிட்ட மறைக்கணுமே..இந்தத் தாலி..''

''அலை பாயுதே டெக்னிக்தான். ஜாக்கெட்டுக்குள்ளே மறைச்சி வெச்சுக்கோ. தூங்கறப்போ எச்சரிக்கையா இரு. ரெண்டு, மூணு நாள்தானே?''

''சரி ''

''அப்போ பேக் பண்ணலாமா?'' என்று சத்யகுமார் தன் துணிகளை எடுத்து மடிக்கத் துவங்கினான். பவித்ராவும் எடுத்து மடிக்கத் துவங்க... அவள் அருகில் வந்து சட்டென்று அவளை அணைத்தான்.

''ஏய்! இப்பதான் குளிச்சேன்''

''மறுபடி குளிச்சா யாரு கேக்கப் போறாங்க?'' என்றவன் கையைத் தட்டிவிட்டு விலகி நின்று, '' நோ சத்யா! ப்ளீஸ்..சொன்னாக் கேளுடா



மை டியர் முரட்டுப் பையா'' என்று சிணுங்கலாகக் கெஞ்சினாள் பவித்ரா.

இரவு பவித்ரா வீடு திரும்பியபோது அம்மா புரியாமல் ஆச்சரியப்பட்டு கேட்டாள், '' நாளைக்குதான் வருவேன்னு சொன்னே?''

''இண்டர்வியூ முடிஞ்சது. டே டிரைவன் கிடைச்சது. புறப்பட்டு வந்துட்டேன்'' என்றாள் பவித்ரா.

மறுநாள், பவித்ரா புடவை கட்டிக் கொண்டிருந்தபோது அறைக் கதவைத் தட்டினாள் அம்மா.

''பவித்ரா, அந்த கெமிக்கல் கம்பெனிலேர்ந்து அன்னிக்கு வந்து கேஸ் போடுவேன்னு சொன்னானே, அதேப் பையன் வந்திருக்கான்''

''இருக்கச் சொல்லு. வர்றேன்''

தாலியை ஜாக்கெட்டுக்குள் நேர்த்தியாக மறைத்து, புடவைத் தலைப்பை மடிப்பு அமைத்து தோளில் போட்டு பின் செய்து கொண்டு வெளியே வந்தாள்.

''என்ன சார், அந்த விவகாரத்தை உங்க கம்பெனி விடறதா இல்லையா? என்ன, வக்கீல் நோட்டீஸ் கொண்டாந்திருக் கிங்களா?'' என்றாள் அலட்சியமாக.

''இல்லைங்க. உங்ககிட்ட முக்கியமான விஷயம் பேசணுமாம். எங்க கம்பெனி எம்.டி. உங்களை உங்களுக்கு சௌகரியமான நேரத்துல வந்து பார்க்கச் சொன்னார்'' என்றான் அந்த இளைஞன்.

''எதுக்கு? எதுக்கு நான் அவரைப் பாக்கணும்?''

''தெரியாது. தகவல் சொல்லச் சொன்னார். சொல்லிட்டேன். நீங்க வர்றேன்னு சொன்னா அதைப் போய்ச் சொல்லிடறேன். வரலைன்னு சொன்னாலும் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை''

''இத பாருங்க! அது முடிஞ்ச போன மேட்டர். வேணும்னா கேஸ் போட்டுக்கங்கன்னு சொல்லிட்டேன். இத்தனை நாள் கழிச்சி நேர்ல கூப்புட்டா என்ன அர்த்தம்? அதெல்லாம் வர முடியாதுன்னு...''

குறுக்கேப் புகுந்தாள் அம்மா, '' கொஞ்சம் சும்மா இருடி. எப்பப் பாரு, துக்கிரித்தனமாப் பேச வேண்டியது. ஒரு கம்பெனி முதலாளி கூப்புடறார்ன்னா அது நல்ல விஷயமாக்கூட இருக்கலாம். போய்ப் பாத்தா கிரீடம் எறங்கிடுமோ மகாராணிக்கு? இத பாருங்க தம்பி, அவ வந்து பாப்பான்னு சொல்லுங்க. நீங்க புறப்படுங்க''

அவன் தயங்கி, ''சரி, நீங்க வருவீங்கன்னு சார்கிட்ட சொல்லிடறேன்'' என்றுவிட்டுப் போனான்.

''என்னம்மா நீ.. ரொம்பதான் பயந்தாங்குளியா இருக்கியே..''

''நீதான் ரொம்பத் திமிரோட இருக்கேன்னு எனக்குப் படுது''

''சரி சரி. திட்ட ஆரம்பிக்காதே. அதான் நீயே பதில் சொல்லி விட்டுட்டியே. அந்த முதலாளி என்னதான் சொல்றாருன்னு இப்பவேப் போய்த் தெரிஞ்சிக்கிட்டு வந்துடறேன்''

கைப்பை எடுத்துக் கொண்டு புறப்பட்டாள் பவித்ரா.

நேர்முகத் தேர்வுக்குச் சென்ற அதே ஸ்வஸ்திக் கெமிக்கல் கம்பெனியின் வரவேற்பறை. காத்திருக்கும் போது பவித்ராவுக்கு 'எதற்காக நேரில் வரச் சொல்லியிருப்பார்?' என்கிற கேள்வி அரித்துக் கொண்டேயிருந்தது. பியூன் வந்து, "சார் கூப்பிடறார். போங்க மேடம்" என்றான். கைப்பையைத் தோளில் மாட்டிக் கொண்டு எழுந்தாள்.

"உள்ளே வரலாமா சார்?" என்று கதவைத் தட்டினாள்.

"யெஸ். வாங்க" என்ற குரல் கேட்ட குரலாக இருந்தது.

கதவு தள்ளி உள்ளே வந்தாள் பவித்ரா.

சுழல் நாற்காலியில் இவளுக்கு முதுகு காட்டியபடி அந்தப் பக்கம் திரும்பி ஃபேக்ஸ் இயந்திரத்தில் மும்முரமாய் இருந்த கோட், சூட் போட்ட எம்.டி. "உக்காருங்க" என்றதும் எதிர் நாற்காலியில் தயங்கி அமர்ந்தாள்.

மேஜை மேல் மூன்று தொலைபேசிகள். இண்டர்காம்கள். ஒல்லியான அழகான மானிட்டருடன் கம்ப்யூட்டர் மற்றும் அலங்காரப் பொருட்கள்.

" அப்புறம்? நல்லா இருக்கிங்களா பவித்ரா?" என்றபடி சுழல் நாற்காலியில் திரும்பிய சத்யகுமாரைப் பார்த்து அதிர்ந்தாள் பவித்ரா.

"சத்யா.. நீ.. நீங்க என்ன இங்கே?" என்றாள் புரியாமல்.

புன்னகைத்த அவன், " சத்யாவா ? யார் அது? என்னைக்க? ஏதாக்கம் குடும்பத்தில் இருக்கிங்களா? நான் இந்த கம்பெனியோட மேனேஜிங் டைரக்டர்" என்றான்.

"சத்யா, விளையாடாதிங்க. எனக்கு எதுவும் புரியலை. என்ன விளையாட்டு இது? நீங்க எம்.டி.யா? பின்னே ஏன் என்கிட்ட வேலை கிடைக்காத சாதாரண ஆளா அறிமுகப்படுத்திக்கிட்டிங்க" என்றாள் பதட்டமாக.

"வெயிட்! வெயிட்! என்னங்க பவித்ரா அடுக்கிக்கிட்டேப் போறீங்க? நான் அன்னிக்கு இண்டர்வியூ நடந்தப்போ உங்களை கேமிரா வழியா இங்கிருந்தபடி ஒரு தடவை பார்த்திருக்கேன். அப்புறம் இப்பதான் பாக்கறேன். யார் அது சத்யா? ஒரு வேளை நீங்க சொல்ற சத்யா என் முகச் சாயல்ல இருப்பானா? எனக்கு ட்வின் பிரதர்கூட யாரும் இல்லையே.."

"நோ! நடிக்காதிங்க. உங்க ஹேர்ஸ்டைல் மாறியிருக்கு. அப்ப இந்த கோல்டு ஃபிரேம் கண்ணாடி இல்லை. ஆனா நீங்க என் சத்யாதான். என்ன சத்யா, உங்க மனைவிகிட்டயே எதுக்கு இந்த விளையாட்டு?"

"மனைவியா? கிழ்ப்பாக்கத்துக்குபோன் செய்யணும் போலிருக்கு? விட்டா நீங்களும் நானும் விழுப்புரத்துக்குப் போயி ரகசியமா கல்யாணம் செய்துக்கிட்டோம். அப்புறம் ஒரு லாட்ஜ்ல சாந்தி முகூர்த்தம்கூட நடந்து முடிஞ்சிடுச்சின்னு சொன்னாலும் சொல்லிங்க போலிருக்கே.." என்று சிரித்தான் அவன்.

பவித்ராவுக்கு தலை சுற்றியது. கண்கள் செருகின.

''நீங்க மயக்கம் போட்டு விழறதுக்கு முன்னாடி உண்மையைத் தெரிஞ்சுக்கங்க. எல்லாமே என் செட்டப்! எவ்வளவு திமிர் இருந்தா என் ஆபிஸ்ல உக்காந்துட்டு என் மேனேஜரையும், என்னையும் மட்டம் தட்டிப் பேசிட்டுப் போவே! நான் கொஞ்சம் டென்ஷன் பார்ட்டி! என்னை தப்பு சொன்னா தாங்க மாட்டேன். சரி,மன்னிச்சிடுவோம்னு மனசு இறங்கி மன்னிப்பு லெட்டர் கேட்டுவிட்டா என் ஆளை அவமானப் படுத்தி கோர்ட்டுல பாத்துக்கலாம்னு சொல்லி விட்டே. சோத்துக்கு வழி இல்லை. வேலைக்கு வழி இல்லை. உனக்கு அவ்வளவு திமிர் இருந்தா கோடிக் கணக்குல நிர்வாகம் பண்ணிட்டிருக்கிறனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்! உன் மேல மான நஷ்ட ஈடு வழக்கு போடறதை விட உனக்கு மான நஷ்டம் ஏற்படுத்தலாம்னு முடிவு செஞ்சேன். வாழ்க்கை பூரா உனக்கு பாடமா இருக்கணும்னு தீர்மானிச்சேன். நானே இறங்கினேன். உன்னைப் பத்தி முழு தகவல்கள் சேகரிச்சேன். என் கெட்டப்பை மாத்திக்கிட்டு நீ போற அதே லைப்ரரிக்கு நானும் வர ஆரம்பிச்சேன். இயல்பா அறிமுகமாகி சத்யகுமார்னு புதுப் பேரு. புதுப் பின்னணி கற்பனைபண்ணி சொன்னேன். நல்லா நம்பினே. ஐ மீன்.. நம்ப வெச்சேன். நாலு அடியாளை வெச்சி தூக்கிட்டு வரச் சொல்லி உன்னை சேதப்படுத்தறதுல என்ன சுவாரசியம் இருக்கு? நீயோ கல்யாணம். அதுக்கப்புறம்தான் கட்டில்னு சம்பிரதாயமான பொண்ணு. அதனாலதான் திடீர் கல்யாணம். அந்த கோயில்ல மந்திரம் சொல்லி தாலியெடுத்துக் கொடுத்த அய்யரை தேடிப் பாரு. கிடைக்க மாட்டாரு. அவரு ஒரு டிராமா ஆர்ட்டிஸ்ட். ரெண்டாயிரத்துக்கு பிரமாதமா நடிச்சார். ஹோட்டல்ல எச்சரிக்கையா பாதுகாப்பு உறையோட நம்ம சாந்தி முகூர்த்தம் நடந்துச்சி. அதனால பாரு.. நீ கர்ப்பமாக மாட்டே. என் வயத்துல வளர்ற சிசு இவரோடதுதான்னு டி.என்.ஏ டெஸ்ட் பண்ணச் சொல்லி கேஸ் போட மாட்டே! நமக்கு நடந்த கல்யாணத்துக்கு ஒரு போட்டோ ஆதாரம்கூட பாவம் உன்கிட்ட இல்லை. அது கல்யாணமே இல்லை. உன்னைக் கட்டில்ல இயல்பா நான் சந்திக்க பிரமாதமா தயாரிக்கப்பட்ட ஒரு நாடகம்! இப்போ உன் திமிர் அடங்கியிருக்கணுமே.. என்ன, கொஞ்சமாவது அடங்கியிருக்கா பவித்ரா?''

அவன் பேசப் பேச வியர்த்துப் போய் உறைந்து நின்றாள் பவித்ரா.

''என்னை உன்னால எதுவும் பண்ண முடியாது. எந்தக் கோர்ட்டுக்கு வேணாலும் இப்ப நீ தாராளமா போலாம். உன்னைத் தெரியவே தெரியாதுன்னு அடிச்சி சொல்லுவேன்''

அவளுக்கு வெடித்துக் கொண்டு அழுகை வந்தது.

''அடப்பாவி! உன்னை நல்லவன்னு நம்பி மனப்பூர்வமா காதலிச்சேனேடா! எவ்வளவு நம்பிக்கை வெச்சிருந்தா நீ சொன்னதுக்கெல்லாம் சம்மதிச்சிருப்பேன்! என்னைப் பழி வாங்கறதுக்கு

இப்படியெல்லாமா செய்வாங்க?''

''இதான் என் ஸ்டைல்! கம்மா கண்ணைக் கசக்கிட்டு நிக்காதே. ரகசியமா கட்டின அந்தத் தாலியை நீயே ரகசியமாக் கழட்டி குப்பைத் தொட்டில போட்டுடு. நல்ல ஒரு இளிச்சவாயனைப் பாத்து கல்யாணம் பண்ணிக்கோ. தட்ஸ் ஆல்''

''ச்சீ! நீ ஒரு மனுஷனாடா?''

''மனுஷன்தான். கொஞ்சம் மோசமான மனுஷன். புரிஞ்சிக்கிட்டேல்ல? புறப்படு. இதுக்கு பதிலுக்குப் பதில் பழி வாங்கறேன்னு சபதமெல்லாம் எடுக்காதே. வேஸ்ட்! உனக்கு மான நஷ்டம் ஏற்படுத்தின மாதிரி உயிர் நஷ்டமும் ஏற்படுத்திடுவேன். புரிஞ்சுதா?''என்றான்தன் வாட்ச்சைப் பார்த்து. '' டைம் ஆச்சு. இடத்தைக் காலி பண்றியா மை டியர் ஒரு நாள் பொண்டாட்டி?'' என்றான்.

''ஏய்!'' என்று ஆத்திரமாக கத்திய பவித்ரா மேஜை மீதிருந்த பொருள்களை வெறியோடு ஆக்ரோஷமாக தூக்கி வீசினாள். அவளைப் புன்னகையுடன் பார்த்தபடி இருந்தான் அவன். தன் கோட் பாக்கெட்டிலிருந்து ரிவால்வர் எடுத்து நீட்டி, '' இப்ப வெளில போறியா?'' என்றான் அமைதியாக.

...தொடரும்



## இவள் 8

தின் பங்களா ஹாலில், சோபாவில் அமர்ந்திருந்தார் வேல் பாண்டியன். சற்றுத் தள்ளி பிரிவு உபசார விழாவில் போடப்பட்ட மாலைகள் ஒரு நாற்காலி முழுக்க அடைத்திருக்க... சின்ன ,பெரிய பார்சல்களை அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான் வேலைக்காரன் முத்து.

''முத்து, இந்தக் கல்யாணத்துக்கு அனிதா போட்ட ஒரே நிபந்தனை நான் போலீஸ் வேலையை விடணுங்கறதுதான். முதல்ல எனக்கு அதிர்ச்சியா இருந்திச்சி. 'உங்க உத்தியோகத்துல ரிஸ்க் இருக்கு. ஒவ்வொரு நாளும் உங்களை வெளியே அனுப்பிட்டு நீங்க வர்ற வரைக்கும் திக்திக்குன்னு நான் டென்ஷனோட இருக்கணும். நிறைய சர்வீஸ் பண்ணிட்டீங்க. நிறைய சம்பாரிச்சுட்டீங்க. தொழிலை நேரடியா கவனிச்சாப் போதாதா?' அப்படின்னு அவ கேட்டது யோசிக்க வெச்சது. சரின்னுட்டேன். ரிசைன் பண்ணிட்டு வெளிலயும் வந்துட்டேன். அவ சொன்னது அவ கோணத்தில சரி. என் கோணத்துல சரிதானா முத்து?''

''எல்லாக் கோணத்துலயும் சரிதான்யா. உங்க மனசாட்சியைத் தொட்டுச் சொல்லுங்க. உங்க போலீஸ் உத்தியோகத்துல முழுக்க நேர்மையா இருந்திங்களா?''



''சத்தியமா இல்லை முத்து. இருக்க முடியலை. இருக்க முடியாது. நிறைய தடவை தப்பு செஞ்சிருக்கேன். முதல்ல மனசாட்சி குத்திச்சி. அப்புறம் பழகிடுச்சி. பணம் ஒரு போதை முத்து''

''இனிமே தப்பு செய்ய வேண்டிய அவசியமில்லையே. இப்போ உங்க மனசுக்கும் ஒரு நிம்மதி கிடைச்சிருக்கில்லே?''

''உண்மைதான். ராஜினாமா செஞ்சது சரிதான். தம்பிகிட்டயும் பேசிட்டேன். அவனும் எல்லா ஏற்பாட்டுக்கும் ஒத்துக்கிட்டான். வர்ற வெள்ளிக்கிழமை ரெஜிஸ்ட்ரார் ஆபீஸ்ல சிம்பிளா கல்யாணம். அதுக்கப்புறம் என் வாழ்க்கையே புதுவிதமா மாறப் போகுது முத்து''

முத்து அவர் அருகில் வந்தான். ஏதோ சொல்லத் தயங்கினான்.

''என்ன முத்து?''

''நேத்து உங்க தம்பி இங்க வந்திருந்தாருங்கய்யா. குடிச்சிருந்தாரு''

''அவன் தண்ணி போடுவான்றது தெரிஞ்ச விஷயம்தானே முத்து?''

''அதில்லைங்கய்யா. இந்த வயசுல அண்ணனுக்கு ஏன் புத்தி இப்படிப் போகுதுன்னு பேசினாருங்க''

அதிர்ச்சியுடன் அவனைப் பார்த்தார்.

''என்ன முத்து சொல்றே? நான் தகவல் சொன்னப்போ சந்தோஷப் பட்டானே..''

''எல்லாம் வேஷங்க. உங்க தம்பி மனசு பழையமாதிரி இல்லைங்கய்யா. ஒரு வேலையும் இல்லாம கம்மாத் திரிஞ்சிட்டிருந்த அவரை கம்பெனி ஆரம்பிச்சி உக்கார வெச்சி அழகு பாத்திங்க. அது உங்க பெருந்தன்மை. அது அவர்கிட்ட இல்லய்யா''

''என்கிட்ட மரியாதையாதானே நடந்துக்கறான்?''

''முகத்துக்குப் பின்னாடியும் அதே மாதிரி பேசணுமில்ல? அதானே நேஜமான குணமா இருக்கும்? வேலையை விட்டுட்டு நீங்களே கம்பெனி பாத்துக்கப் போறதும், கல்யாணம் பண்ணிக்கப் போறதும் அவருக்குப் பிடிக்கலைய்யா''

வேல் பாண்டியன் முகம் கடுமையானது.

''இவனுக்குப் பிடிக்கலைன்னா நான் அதைச் செய்யக்கூடாதா? கையில நிறைய காசு புரள்றதால பொம்பளை விஷயத்துலக்கூட அவன் அப்படி, இப்படி இருக்கான். எனக்குத் தெரியும். அது அவன் சொந்த விஷயம். அதுல நான் தலையிட்டேனா? ஒரு வயசுக்கு அப்புறம் அட்வைஸ் பண்ணக் கூடாது. எடுபடாது. அந்த நாகரிகத்தோட நான் சரியா நடந்துக்கறேனே..''

''அதெல்லாம் சரிங்கய்யா. ஒரே ஒரு தப்பு பண்ணிட்டீங்க''

''என்ன தப்பு?''

''கம்பெனியை அவர் பேர்லயே ஆரம்பிச்சிட்டீங்க. அதான்'தப்பு''

''நான் கவர்ன்மெண்ட் சர்வீஸ்ல இருந்துக்கிட்டு என் பேர்ல தொழில் ஆரம்பிக்க முடியாதே முத்து. இப்பதான் அவனையும் ஒரு பார்ட்னரா சேத்துக்கப் போறதாச் சொல்லிட்டேனே.. எப்ப வேணாலும் எதில

வேணாலும் கையெழுத்துப் போடறதா அவன் சொல்லிட்டான் முத்து. அதில எல்லாம் எந்தப் பிரச்சனையும் இல்லை''

''அதில பிரச்சினை இல்லைன்னா நீங்க ரெண்டாம் கல்யாணம் பண்ணிக்கிறதில இவருக்கு என்னங்கய்யா வருத்தம்? நான்தான் அடிக்கடி சொல்லிச் சொல்லி உங்களைத் தூண்டி விட்டேன்னு என் மேல வேறா கோபப்பட்டாருங்க''

''என்ன இதெல்லாம்? நல்லால்லையே.. இன்னொரு கல்யாணம் செய்துக்கச் சொல்லி நீ பல வருஷமாச் சொன்னே.. நான் சம்மதிக்கலையே.. இப்ப அந்தப் பொண்ணைப் பாத்துப்பேசி, பழகி, மனசுக்குப் பிடிச்சதாலதானே முடிவுக்கு வந்தேன். எதுவா இருந்தாலும் இவன்எங்கிட்ட நேரடியாப் பேச வேண்டியதுதானே? அவன் கிடக்கிறான். நான் எடுத்த முடிவு எடுத்ததுதான்'' என்றார் வேல் பாண்டியன் உறுதியாக.

ரேடியோ மிர்ச்சி அலுவலகத்தில் தன் நாற்காலியில் அமர்ந்து ஒரு நிகழ்ச்சியின் ஸ்கிரிப்ட்டைப் படித்து பார்த்துக் கொண்டிருந்த அனிதா ஒலித்த இண்டர்காமை எடுத்தாள்.

''அனிதா, உங்களைப் பார்க்க மிஸ்டர் ராஜாராம்னு ஒருத்தர் வந்திருக்கார். ரிசப்ஷன்ல வெயிட் பண்ணச் சொல்லிருக்கேன்'' என்றாள் ரிசப்ஷனிஸ்ட்.

'' ராஜாராம்?'' என்றாள்.

''அஸிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியனோட தம்பின்னு சொன்னாத் தெரியும்னு சொன்னார்''

''சரி, நான் வந்து பார்க்கறேன்''

இண்டெர்காமை வைத்த அனிதா சில விநாடிகள் அமைதியாக யோசித்தாள். பிறகு தன் மேஜை டிராயரை இழுத்து உள்ளிருந்து ஒரு மினி டேப் ரெக்கார்டரை எடுத்து அதில் கேசட், பேட்டரி இருக்கிறதா என்று செக் செய்துவிட்டு அணிந்திருந்த ஜீன்ஸ் பேண்ட்டின் பாக்கெட்டுக்குள் வைத்துக் கொண்டு சென்றாள்.

ரிசப்ஷன் பகுதியில் காத்திருந்த ராஜாராம் இவளைப் பார்த்ததும் சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் அழுத்தி அணைத்தான்.

''ஹலோ! நீங்கதான் என் வருங்கால அண்ணியா? பரவால்லை. எங்கண்ணன் மயங்கினதில ஒரு நியாயம் இருக்கு. உங்ககிட்ட கொஞ்சம் பேசணும். இங்கயேப் பேசலாமா?'' என்றான்.

''ம். பேசலாம்'' என்றவள் இயல்பாக கையை பேண்ட் பாக்கெட்டில் செலுத்தி டேப்பின் ரெக்கார்ட் பட்டனை அழுத்திவிட்டு எதிர் நாற்காலியில் அமர்ந்தாள்.

''உங்களைப் பத்தி அண்ணன் சொன்னாரு. ஏற்கனவே கல்யாணமாகி ப்ராப்ளமாமே. பசையான பார்ட்டின்னு எங்கண்ணனை மடக்கிப் போட்டுட்டிங்க. ரைட்! தப்பா நினைக்காதிங்க. எனக்கு எதையும் நேராப் பேசித்தான் பழக்கம். உங்க ரெண்டு பேருக்கும் லவ்வா? இதை நான் நம்பணுமா?''



''இத பாருங்க. நான் உங்களுக்கு அண்ணியாகப் போறல. முறையா உங்கண்ணன் அறிமுகப்படுத்தி நாம சந்திச்சிருக்கணும். இப்ப உங்களுக்கு என்ன வேணும்?''

''உங்களுக்கு என்ன வேணும்னு கேக்கத்தான் வந்தேன்''

''புரியலை''

''நேரா வர்றேன். எங்கண்ணன் புகழோட இருக்காரு. கார், பங்களா, தொழிற்சாலைன்னுலமா இருக்காருன்னுதானே மயக்குனிங்க. உங்களுக்கு ஒரு உண்மை தெரியணும். வீடு மட்டும்தான் அண்ணன் பேர்ல இருக்கு. கம்பெனி என் பேர்ல இருக்கு. ஏழு கோடி சொத்து அது. இந்த நிமிஷம் நான்தான் அதுக்கு சட்டப்படி உரிமையாளன்''

''என்ன இப்படியெல்லாம் பேசறீங்க? அது உங்க அண்ணன் உங்க பேர்ல ஆரம்பிச்சதுன்னு சொன்னாரே..''

''உண்மைதான். தர்மப்படி உண்மை. சட்டப்படி உண்மையா? ''உண்மைதான். தர்மப்படி உண்மை. பேங்க் அக்கவுண்ட்ஸ் எல்லாம் என் கட்டிடம். லைசன்ஸ், மெஷின்ஸ், பேங்க் அக்கவுண்ட்ஸ் எல்லாம் என் பேர்ல. அப்ப அது என்னோடதுதானே? திடுதிப்புன்னு நான் கல்யாணம் பண்ணிக்கப் போறேன், நானும், என் புதுப் பொண்டாட்டியும் நேரடியா கம்பெனி நிர்வாகத்தை எடுத்துக்கறோம்னு சொன்னா எப்படி? இத்தனை வருஷம் கட்டி வளர்த்த நான் கட்டை விரலைச் சப்பிக்கிட்டு ரோட்ல நிக்கணுமா?''

''உங்களையும் ஒரு பார்ட்னரா சேர்க்கறதா சொன்னாரே..''

''வக்கீலைக் கேட்டேன். இருபத்தஞ்சி சதவிகித பார்ட்னர்னு டாகுமெண்ட் எழுதச் சொல்லியிருக்கார். யானைப் பசிக்குச் சோளப் பொரியா?''

''சரி, இது நீங்க உங்கண்ணன்கிட்ட பேசிச் சரி செஞ்சுக்க வேண்டிய விஷயம். எதுக்கு என்கிட்ட வந்துப் பேசறீங்க?''

''இப்போ அவர் மூளையே நீங்கதானாமே? எதையும் நீங்க சொல்லித்தான் அவர் செய்றாராமே? அதான் இங்க வந்தேன். அவர் சொந்த வேலையை விடறதும், கல்யாணம் பண்ணிக்கறதும் அவர் சொந்த விஷயம். ஆனா கம்பெனியை முழுசா எனக்கு விட்டுடச் சொல்லுங்க. வீடு, கார், நிலம், எல்லாம் வெச்சிக்காரு. உங்க ரெண்டு பேருக்கும் அது போதும். அண்ணன் தம்பி உறவு சுமுகமா இருக்கணும்னா இதான் வழி. எடுத்துச் சொல்லுங்க. புரிஞ்சுதா? நான்வர்றேன்''

ராஜாராம் விருட்டென்று எழுந்து நடந்து போனதும், டேப் ரெக்கார்டரை அணைத்தாள் அனிதா.

அந்த டேப்ரெக்கார்டர் இப்போது வேல்பாண்டியனின் அறையில் மெதுவாக இயங்கிக் கொண்டிருக்க, எதிரில் அனிதா. அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தார் வேல் பாண்டியன்.

''...அண்ணன், தம்பி உறவு சுமுகமா இருக்கணும்னா இதான் வழி. எடுத்துச் சொல்லுங்க. புரிஞ்சுதா? நான் வர்றேன்''

அனிதா டேப்பை நிறுத்தி விட்டு, "யதேச்சையா பாக்கெட்டுல டேப் ரெக்கார்டர் இருந்துச்சி. உங்கத் தம்பி கோபமாப் பேச ஆரம்பிச்சதால டேப் செஞ்சேன்" என்றாள்.

"ஏழு கோடி சொத்தை அப்படியே முழுங்கணும்னு பாக்கறான். என்ன கொழுப்பு பாரு! இத பாரு அனிதா, இதைப் பத்தி நீ எதுவும் கவலைப் படாதே. அந்தக் கம்பெனியை என் கைக்கு கொண்டு வர்றது எப்படின்னு எனக்குத் தெரியும். நான் போலீஸ்காரன்" என்ற வேல் பாண்டியன் அருகில் வந்தான்.

"நான் ஒன்னு சொன்னாக் கோவிச்சுக்காதிங்க. இந்தக் கல்யாணத்துல உங்கத் தம்பிக்கு இஷ்டமில்லை. எதுக்கு உங்களுக்குள்ளேப் பிரச்சினை? நான் விலகிட்டுமா?"

"அனிதா, உளறாதே! பணத்தாசை அவனை ஆட்டி வைக்குது. அவனை வழிக்குக் கொண்டு வந்துடுவேன். இதுக்காக நீ ஏன் என்னை விட்டு விலகணும்? நினைக்சாலும் முடியாது அனிதா. என் மனசோட ஆழத்தில புதைஞ்சிட்டே.. வெள்ளிக் கிழமை முதல்ல நம்ம கல்யாணம் நடக்கட்டும். நீ நிம்மதியா போய்ட்டு வா" என்றார்.

அவள் போனதும், "முத்து" என்று அழைத்து, அவன் வந்ததும், "முத்து, நீ சொன்னது சரி. ராஜா மாறிட்டான். போலீஸ்காரன் கிட்டயே கிரிமினல் புத்தியைக் காட்டறான். கல்யாணம் முடிஞ்சதும் நான் என் புத்தியை அவனுக்குக் காட்டப் போறேன்" என்றார் ஆத்திரமாக.

...தொடரும்



# அவன்




திருச்சி பஸ் ஸ்டாண்டில் வந்து நின்ற சேலம் பஸ்ஸிலிருந்து கீழே இறங்கினான் பாபு. முதல் காரியமாக செய்தித்தாள் வாங்கிப் புரட்டினான். ஒரு டீ குடித்தான். சிகரெட் பற்ற வைத்தான். பக்கத்தில் வெற்றிலை பாக்கு போட்டுக் கொண்டிருந்தவரிடம் இயல்பாக, "பேப்பரைப் புரட்டினா ஒரே கொலை நியூசாத்தான் இருக்கு. இந்த போலீஸ்காரங்க என்னதான் செய்றாங்கன்னு புரியலை" என்றான்.

"ஏதாச்சும் மந்திரி, எம்.எல்.ஏ இல்லை வி.ஐ.பி சம்மந்தப்பட்ட கொலைன்னாதான் அவசரஅவசரமா இறங்கி துப்பறியறாங்க. பத்து நாள்ல ஆளைப் பிடிக்கிறாங்க. மத்தபடி கண்டுக்கிறதில்லை" என்றார் அவர்.

"கரெக்ட்டுதான். நம்ம ஜோதி நகர்ல ஒரு கொலை நடந்திச்சே, இன்னிவரைக்கும் கொலைகாரனையும் பிடிக்கலை. கொலை செய்யப்பட்டது யாருன்னும் கண்டுபிடிக்கலை" என்றான் இவன்.



"உண்மைதான்"

"நான் ஒரு வாரம் ஊர்ல இல்லை. ஒரு வேளை கண்டுபிடிச்சிட்டாங்களோ?"

"எங்க? கண்டுபிடிச்சிருந்தாதான் பேப்பர்ல போடுவாங்களே... ஒரு மாசமாச்சே.. அதை விட முக்கியமான ஆயிரம் வேலை அவங்களுக்கு இருக்குங்க"

பாபு பெருமூச்சுவிட்டான். நான் நினைத்தது சரிதான். அந்தக் கேசில் போலீஸ் இன்னும் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. எதற்கும் எச்சரிக்கையாக நான் சேலத்திற்குப் போனது சரிதான். அந்த விஷயம் அமுங்கி விட்டது. இனி வழக்கம்போல நான் நடமாடலாம்.

இனிமேல் இந்தத் தப்பான விவகாரங்களில் இறங்காமல் வீடு, மனை வாங்கித் தர, விற்றுத் தரத்தீவிரமாக இறங்கி ஒழுங்காக இருக்க வேண்டியதுதான்.

முதலில் டைலர் கடைக்குப் போய் மணியைப் பார்க்க வேண்டும். என்னைப் பலர் தேடியிருக்கலாம். பலர் போன் செய்திருக்கலாம்.

பாபு டவுன் பஸ் பிடித்து மணி டைலர் கடைக்கு வந்தபோது, அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்ட மணி, "என்ன பாபு, எங்க போயிருந்தே இத்தனை நாளா? உன்னைத் தேடி போலீஸ் வந்துச்சிப்பா" என்றதும் பகீரென்றது.

"இப்பவும் வந்திருக்குப்பா" என்று குரல் கேட்டு இருவரும் திரும்பிப் பார்க்க... மஃப்டியில் இருந்த கான்ஸ்டபிள் அருகில் வந்தார்.

"வாங்க மாப்பிள்ளை, உங்களுக்காகதான் தினம் இங்க தேவுடு காத்துட்டு இருந்தேன்" என்று பாபுவின் தோளில் கை வைத்தார் அவர்.

பாபுவின் உதடு கிழிந்து ரத்தம் கொட்டியது. முகம் வீங்கியிருந்தது. எதிரில் கையில் தொங்கும் கழற்றிய பெல்ட்டுடன் நின்று கொண்டிருந்தார் இன்ஸ்பெக்டர் குருபிரசாத்.

பெல்ட்டை மீண்டும் அவர் ஓங்கியபோது கையெடுத்துக் கும்பிட்ட பாபு, "சார்! போதும்சார். செத்துடுவேன். சொல்லிடறேன் சார். எல்லாம் சொல்லிடறேன் சார்" என்று கும்பிட்டுகெஞ்சினான்.

குருபிரசாத் சைகை காட்டியதும் கான்ஸ்டபிள் அவனுக்கு தண்ணீர் கொடுத்தார். கழுத்தெல்லாம் வழிய அவசரமாகக் குடித்தான் பாபு.

"ம். சொல்லு. எதுக்காக அந்த ஆளை கொலை செஞ்சே? அவன் யாரு?"

"அய்யோ! நான் கொலை செய்யலை சார். அந்தப் பொண்ணுதான் கொலை செஞ்சிருக்கணும்"

"எந்தப் பொண்ணு?" என்று முகம் சுருக்கினார்.

"சார்.. விபரமா சொல்றேன். கொலை செய்யப்பட்டு கிணத்துல போட்டு எரிக்கப்பட்டிருந்தானே, அவன் பேரு ரவிச்சந்திரன். சென்னைக்காரன். எனக்கு பழைய தோஸ்து. ஒரு தடவை வேலூர்

ஜெயில்ல ஆறு மாசம் ஒண்ணா இருந்திருக்கோம். அப்பதான் பழக்கம்.நான் சின்னச் சின்ன திருட்டு மூட்டு, ஃப்ராடு பண்றது இதான் செய்வேன்.அவன் வேற டைப்ஆளு சார்''

''வேற டைப்புன்னா?''

''கொஞ்சம் செகப்பா அழகா இருப்பான் சார்.. பொண்ணுங்களை எப்படித்தான் மடக்குவானோ, வித்தைக்காரன் சார். லவ் பண்றேன்னு நம்ப வெச்சி, நகை, பணம் எடுத்துட்டு வா ஓடிப் போலாம்னு சொல்வான். நம்பி வருது பாருங்க, அதை நல்லா அனுபவிச்சிட்டு நகை, பணத்தை எடுத்துக்கிட்டு அதுங்களை அம்போன்னு விட்டுட்டு ஓடிடுவான். ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு ஊர்ல இருப்பான். அப்புறம் என்னாச்சு? பொண்ணுங்களை பிராத்தல் ஹவுசுக்கு நல்ல விலை பேசி விக்க ஆரம்பிச்சான். திருச்சில மூணு தடவை நான் ஹெல்ப் பண்ணிருக்கேன். ஹெல்ப்ன்னா வீடு வாடகைக்குத் தருவேன். அதாவது ரொம்ப நாளா பூட்டிக் கெடக்கற வீட்டுக்கு டூப்ளிகேட் சாவி போட்டு வெச்சி தருவேன். மூவாயிரம், அஞ்சாயிரம்னு தருவான். ரெண்டு, இல்லை மூணு நாள் ஏமாந்த பொண்ணோட வந்து தங்குவான். பாம்பே பிராத்தல் பார்ட்டிகிட்ட பேரம் பேசுவான். பொண்ணை மயக்க ஊசி போட்டு டாக்சில பெங்களூர் கொண்டு போய் ஒப்படைப்பான். பொண்ணோட வயசு, அழகுக்குத் தகுந்தபடி குப்பறா விலை பேசுவான். ஜோதி நகர் வீட்டுக்கு அந்த மாதிரி இப்போ ஒரு மாசம் முன்னாடி கூட்டிட்டு வந்த அந்தப் பொண்ணுக்கு இவனோட நம்பிக்கைத் துரோகம், மோசடி எல்லாம் தெரிஞ்சி போச்சின்னு நினைக்கிறேன். அதான் அவ ஆத்திரப்பட்டு கொன்னு கிணத்துல போட்டு எரிச்சிட்டு எங்கயோ ஓடிட்டா. மேட்டரை பேப்பர்ல பாத்ததும் எனக்கு பயமாகி தலைமறைவா ஓடிப்போயிட்டேன். இதுல இவ்வளவுதான் சார் எனக்குத் தெரியும்''

''இந்தத் தடவை அவன் கூட்டிட்டு வந்தப் பொண்ணு யாரு? அவளைப் பத்தி உனக்கு என்ன தெரியும்?'' என்றார் குருபிரசாத்.

''அந்தப் பொண்ணை கூட்டிட்டு வந்த அன்னிக்கு ஒரு தடவைப் பாத்ததுதான் சார். நல்லா அழகா லட்சணமா இருந்தா. குடும்பத்துப் பொண்ணு. பேரு, ஊரு, இதெல்லாம் எனக்குத் தெரியாது. அதெல்லாம் நான் விசாரிச்சா ரவிச்சந்திரனுக்கு கோபம் வந்துடும். சொல்ல மாட்டான். அதனால கேக்கலை''

''ஆனா.. அவ முகம் உனக்கு ஞாபகம் இருக்கா?''

''நல்லா ஞாபகம் இருக்கு சார்'' என்று அவன் சொன்னபோது ஸ்டேஷன் போன் ஒலிக்க,சப்இன்ஸ்பெக்டர் நாகேந்திரன் எடுத்துப் பேசுவதைக் கவனித்தார் குருபிரசாத்.

பெரும்பாலும் '' ம், ம், ம்'' என்று சொன்னவர் ஏதோ விபரங்களைக் குறித்துக் கொண்டு, '' தேங்க்ஸ் '' என்று வைத்துவிட்டு லாக்கப் அறைக்குள் வந்தார்.



''என்ன?''

''சைதாப்பேட்டை ஸ்டேஷன்லேர்ந்து பேசினாங்க. அந்த ரவிச்சந்திரன் பத்தி விசாரிச்ச தகவல்களை சொன்னாங்க''

''என்ன சொல்றாங்க?''

''ஒரு மாசம் முன்னாடி அவன் காலி பண்ணிட்டானாம். அது வாடகை வீடு. அங்க மூணு மாசம்தான் இருந்திருக்கான். வீட்டு ஓனர் அவனைப் பத்தி நல்லவிதமா எதுவும் சொல்லலையாம். சிகரெட், தண்ணி எல்லாம் சகஜமாம். யாரோ ஒரு பொண்ணு வந்து போச்சாம். கேட்டதுக்கு லவ் பண்றேன். கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு அவன் சொன்னானாம். இப்ப எங்க இருக்கான் என்னன்னு எந்தத் தகவலும் தெரியாதாம்''

குருபிரசாத் ஆழ்ந்த யோசனையில் இருந்தார்.

''யோவ்.. ரவிச்சந்திரனைக் கொலை செஞ்ச அந்தப் பொண்ணு சென்னையைச் சேர்ந்தவன்னு ஒரு தகவல் தெரிஞ்சிருக்கு. தவிர.. அந்தப் பொண்ணை கண்ணால பார்த்த சாட்சி இவன் நம்ப கிட்ட இருக்கான். நீங்க மறுபடி சைதாப்பேட்டை ஸ்டேஷனுக்கு போன் செய்ங்க. ரவிச்சந்திரன் காதலிச்ச அந்தப் பொண்ணு யாருன்னு தீவிரமா விசாரிக்கச் சொல்லிக் கேட்டுக்கங்க'' என்றார் குருபிரசாத்.

போனை எடுத்தார் நாகேந்திரன்.

...தொடரும்



# அவள்



வெறித்துப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள் பவித்ரா.

எதிரில் நின்ற அம்மா தவித்துப் போய்க் கெஞ்சினாள், '' என்ன பவித்ரா? என்னாச்சுடி? அந்த ஆபீஸ்ல என்னடி நடந்துச்சி? அங்கப் போயிட்டு வந்ததிலேர்ந்தே ஒரு மாதிரியா இருக்கியே.. என்னவோ பேயடிச்சவ மாதிரிப் பார்க்கறே. எத்தனைத் தடவைக் கேட்டாலும் எதுவும் சொல்ல மாட்டேங்கறே. என்னடி ஆச்சி உனக்கு? வாயைத் தொறந்து சொல்லேன்.? தவிக்கிறேன்ல?''

பவித்ரா தன் அம்மாவை நேராக ஊடுருவிப் பார்த்தாள்.

''பொணம் எப்படிம்மா பேசும்?'' என்றுச் சிரித்தாள்.

''அப்போ! என்ன வார்த்தைடி இது? ஏன் இப்படிப் பேசறே?''

''அம்மா, உலகத்துலயே மிகப் பெரிய முட்டாள் யாருன்னு உனக்குத் தெரியுமா?''

''தெரியாது''

''நான்தான். நல்லாப் பாத்துக்கோ''

''கடவுளே.. என் பொண்ணுக்கு என்னவோ ஆய்டுச்சே! உனக்கு உடம்பு எதுவும் சரியில்லையாடி? ஜுரமா?'' நெற்றியில் தொட்டுப் பார்த்தாள்.

''சவத்துக்கு ஜுரம் வராதும்மா''

''என்னடி மறுபடி மறுபடி இப்படியேப் பேசறே! புறப்படு! டாக்டர்கிட்ட போலாம்''

''எதுக்கு? அவரு வைத்தியம்தான் கொடுப்பாரு. வாழ்க்கையும் கொடுக்க மாட்டாரு. தண்டனையும் கொடுக்க மாட்டாரு''

''அவரு எதுக்கு வாழ்க்கை கொடுக்கணும்? அடப் பாவி! வேலை கிடைக்காத விரக்தில உனக்குப் புத்தி பேதலிச்சிருச்சாடி? அய்யோ! நான் என்ன பண்ணுவேன்?''

''மறந்துடும்மா''

''எதை மறக்கச் சொல்றே?''

''உனக்கு நான் பொறக்கவே இல்லைன்னு நினைச்சுக்கோ''

''ஏற்கனவே உங்கப்பாவை அப்படித்தான் நினைச்சி மனசு தேத்திக்கிட்டு தூக்கிப் போட்டாச்சு. இப்ப உன்னை விட்டா எனக்கு யாருடி இருக்காங்க?''

''என்னையும் தூக்கிப் போட்டுடும்மா. பொட்டலமாக் கட்டிக் கொடுப்பாங்க. சுடுகாட்டுல தூக்கிப் போட்டுடு''

''ஒரு எழவும் புரியலையே..''

''எழவும்மா! புரியலை?''

''எங்கடி எழவு?''

''நம்ம வீட்லதான்''

''நம்ம வீட்ல என்ன? நீயும் நானும் உயிரோடதானே இருக்கோம்?''

''ம்கூம். என் மனசு செத்துடுச்சி. உடம்பும் சாகப் போகுது''

''இன்னொரு தடவை அப்படிப் பேசினே, பல்லுலயே போடுவேன்''

''உன் கையால..''

''காபி வேணுமா?''

''இல்லை, நெருப்பு அள்ளிப் போடு. போதும்!''

''பாவி மகளே.. ஏண்டி இப்படி என்னைப் பாடாப் படுத்தறே? எனக்கு ஒரு மண்ணும் புரியலையே.. சரி. நீ இங்கயே இரு. இப்பவே போயி டாக்டரைக் கூட்டிட்டு வந்துடறேன்''

அம்மா அவசரமாகப் புறப்பட்டுச் சென்றாள்.

அவள் சென்றதும் பவித்ரா எழுந்தாள். மேஜையில் அமர்ந்து காகிதம் எடுத்து எழுதத் துவங்கினாள்.

அன்புள்ள காவல்துறை அதிகாரி அவர்களுக்கு,

பவித்ராவாகிய நான் சுயபுத்தியுடன், நல்ல மனநிலையில் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். நான் தற்கொலை செய்து கொள்கிறேன். இது விரக்தியில் எடுத்த முடிவு இல்லை. ஒரு அயோக்கியன் தண்டிக்கப்பட



வேண்டும் என்கிற நோக்கத்தில் எடுத்த முடிவு. என்னால் அவனை நேரடியாக எதிர்க்க முடியாது. பண பலம் கொண்டவன் அவன். தவிர புத்திசாலி. என்னை அவன் பாதித்ததற்கான எந்த ஆதாரமும் என்னிடம் இல்லை. என் மனசாட்சித் தவிர. அதை உங்கள் சட்டம் ஏற்காதே! ஆனால் மரண வாக்குமூலத்தை உங்கள்சட்டம் நம்பும். ஆகவே இதை என் மரண வாக்குமூலமாகக் கருதுங்கள். என் தற்கொலைக்குமுழுக்க முழுக்க அந்தச் சதிகாரன்தான் காரணம். அவன் யார், எந்த வகையில் என்னைச் சேதப்படுத்தி இப்படி தற்கொலைக்குத் தூண்டினான் என்று இதோ மிக விரிவாக எழுதுகிறேன். வழக்கமாக நான் செல்லும் நூலகத்தில்தான் முதன் முதலாக அவனைச் சந்தித்தேன்...'

பவித்ரா விறுவிறுவென்று எல்லாம் எழுதினாள். இனிமையாக பழகியது, காதலில் விழ வைத்தது, அவசரத் திருட்டுக் கல்யாணத்திற்குத் தூண்டியது, கிருஷ்ணா லாட்ஜில் சாந்தி முகூர்த்தம் நடத்தியது, கம்பெனிக்கு வரவழைத்து கொக்கரித்தது, எச்சரித்து துப்பாக்கிகாட்டியதுவரை நான்கு பக்கங்களுக்கு விரிவாக எழுதி முடித்து கையெழுத்துப் போட்டாள்.

ஒரு சின்ன யோசனைக்குப் பிறகு வீட்டை விட்டு வெளியே வந்து ஜெராக்ஸ் கடைக்குப் போனாள். அந்தக் கடிதத்தை ஒரே ஒரு நகல் எடுத்தாள். அருகில் இருந்த தபால் நிலையத்திற்கு வந்தாள். ஒரு உறை வாங்கி நகலைப் போட்டு ஒட்டி முகவரி எழுதி பெட்டியில் போட்டாள்.

ஒரிஜினல் கடிதத்தோடு வீடு திரும்பிய பவித்ரா அந்தக் கடிதத்தை மடக்கி தன் ஜாக்கெட்டுக்குள் செருகிக் கொண்டாள். சுற்றும் முற்றும் பார்த்து ஒரு புடவையை எடுத்தாள்.

நாற்காலி போட்டு ஏறி புடவை முனையை மின் விசிறியில் போட்டு இழுத்து சுருக்கிட்டுவிட்டு மிச்சப் பகுதியில் சுருக்கு வளையம் அமைத்து கழுத்தில் மாட்டிக் கொண்டாள்.

''உள்ளேதான் இருக்கா டாக்டர், வாங்க'' என்று அம்மாவின் குரல் கேட்டபோது, நாற்காலியை எட்டி உதைத்தாள் பவித்ரா.

...தொடரும்



# இவள் 9

ரெஜிஸ்ட்ரார் அலுவலகத்தில் எளிமையாக வேல் பாண்டியன், அனிதா திருமணம் நடந்து முடிந்தது. கையெழுத்துப் போட்டு, தாலி கட்டி, மாலைகள் மாற்றிக்கொண்டபோதுவந்திருந்த முக்கியமான எழெட்டுப் பேர்களும் கைத் தட்டினார்கள். ராஜாராம் வரவில்லை.

காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, '' பாத்தியா அனிதா,

கடைசிவரைக்கும் அந்த ராஸ்கல் வரல்லை. என்ன நெஞ்சழுத்தம் பாரு'' என்றார் வேல்பாண்டியன்.

''கோபப்படாதிங்க. பொறுமையா விட்டுத்தான் பிடிக்கணும்'' என்றாள் அனிதா.

''சொல்லு அனிதா, கொடைக்கானலா? ஊட்டியா? ஒரு வாரம் போய்ட்டு வரலாம். டிக்கெட் போடச் சொல்றேன்''

''இங்க பாருங்க. உங்க மனசைத் தொட்டுச் சொல்லுங்க. இப்ப பரிபூரண சந்தோஷம் இருக்கா? இந்தக் கல்யாணத்துல அண்ணன்.. தம்பி பிரிஞ்சிடுவிங்களோன்னு எனக்கும் கலக்கமா இருக்கு. நான்தான் காரணமோன்னு ஒரு குற்ற உணர்ச்சிகூட இருக்கு. முதல்ல வக்கீலைப் பாருங்க. சமாதானம் பேசுங்க. கம்பெனி சொத்து விவகாரம் சுமுகமா முடிஞ்சி உங்களுக்குள்ளே பழையபடி அன்பான உறவு வரட்டும். அதுக்கப்புறம் நிறைஞ்ச மனசோட நம்ம சந்தோஷத்தைப் பத்தி திட்டம் போடலாம். என்ன அவசரம்? இப்போதைக்கு உங்க மனைவியாகிட்ட பெருமை ஒண்ணு போதும் எனக்கு'' என்ற அனிதாவை நெகிழ்ச்சியுடன் பார்த்தார் வேல் பாண்டியன்.

''உன்னை மனைவியா அடைஞ்சதுக்கு நான்தான் பெருமைப் படணும் அனிதா. நான் கொடுத்து வெச்சவன்'' என்றார்.

15 நாட்களுக்குப் பிறகு...

அன்றிரவு விஸ்கி அருந்திக் கொண்டிருந்த வேல் பாண்டியன் அருகில் வந்து கிளாஸைப் பிடுங்கி வைத்தாள் அனிதா.

''போதுங்க. உடம்பு என்னத்துக்கு ஆகும்?''

''இன்னும் ஒரு பெக் அனிதா. தூக்கம் வர மாட்டேங்குது அனிதா. இந்த சண்டாளப் பாவி யாரை வெச்சி சமாதானம் பேசினாலும் ஒத்துவர மாட்டேங்கறானே.. அம்பது பர்சன்ட் தர்றேன்னும் சொல்லிப் பார்த்தாச்சு. கம்பெனி முழுசும் அப்படியே வேணும். விட்டுத் தர முடியாதுன்னு பிடிவாதம் பிடிக்கிறான் ராஸ்கல்! எழு கோடி அனிதா! எப்படி விடறது?''

''எல்லாம் சரியாகிடுங்க. தூங்குங்க''

இன்னொரு பெக் அடித்து விட்டுப் படுத்த வேல்பாண்டியன் உடனே உறங்கிப் போனதும் அனிதா மணி பார்த்தாள். 9.30.

தொலைபேசி எடுத்தாள். எண்கள் தொட்டாள்.

''ஹலோ.. ராஜாராம்'' என்று போதையாக குரல் வந்தது.

''அண்ணி பேசறேன் தம்பி. இந்த நேரத்தில நிதானத்தில நீங்க இருக்க மாட்டிங்கன்னு தெரியும். ஆனா அண்ணன் சொன்னதால



கூப்பிடறேன்''

''என்னவாம்?''

''சொத்துப் பிரச்சினை சம்மந்தமா ஒரு முடிவுக்கு வந்துடலாம்னு அவர் ஆசைப்படறார். உடனேப் புறப்பட்டு வர முடியுமா? உங்களுக்குச் சாதகமா ஒரு முடிவு எடுத்திருக்கார்.அதை உடனேப் பேசி முடிவு பண்ண ஆசைப்படறார். வர்ற கண்டிஷன்ல இருக்கிங்களா தம்பி?''

''அஞ்சி லார்ஜ் உள்ளேப் போயிருக்கு. ஆனா அலுங்காம குலுங்காம வண்டி ஓட்ட முடியும். என் கம்பெனி எனக்கு முழுமையா கிடைக்கப் போகுதுன்னா எங்க , எப்பக் கூப்பிட்டாலும் வருவேன். பத்தே நிமிஷத்துல அங்க இருப்பேன். வர்றேன்''

''சரி, வாங்க''

போனை வைத்த அனிதா பாத்ரூம் சென்றாள்.

அங்கிருந்த கப் போர்டில் ஆசிட் பாட்டில் அருகில் இருந்த ரப்பர் கையுறையை எடுத்தாள். நிதானமாக அதை வலது கையில் அணிந்து கொண்டாள். அறைக்குள் வந்தாள்.

உறங்கிக் கொண்டிருக்கும் வேல் பாண்டியன் அருகில் வந்தாள். அவர் தலையணையை உயர்த்தினாள். அடியில் இருந்த ரிவால்வரை எடுத்தாள். அவர் அருகில் அமர்ந்தாள். அங்கிருந்த அறை வாசலை நோக்கி குறி வைத்துப் பார்த்தாள். காத்திருந்தாள்.

பதினைந்து நிமிடத்தில் காரில் வந்து இறங்கிய ராஜாராம் லேசான தள்ளாட்டத்துடன் வாசலை அடைந்து அழைப்பு மணியை அழுத்தினான்.

கதவைத் திறந்த முத்து தூக்கம் கலைந்தபடி, '' என்ன தம்பி, இந்த நேரத்துல?'' என்றான்.

''அண்ணன்தான் முக்கியமாப் பேசி முடிவெடுக்கணும்னு வரச் சொல்லி போன் செஞ்சார். நகருப்பா. உனக்கெல்லாம் நான் பதில் சொல்லணுமா?''

மாடிப் படிகளில் ஏறி மேலே வந்து வேல் பாண்டியனின் அறைக் கதவைத் தட்டினான் ராஜாராம்.

''உள்ளே வாங்க'' என்றாள் அனிதா.

அவன் உள்ளே வந்ததும் கதவு தானாக மூடிக் கொண்டது. அறையில் இரவு விளக்கு மட்டும் எரிய.. இருட்டில் புரியாமல் தவித்தான். '' ஏன் லைட் போடாம இருக்கிங்க?'' என்றான்.

'' இதுக்குத்தான்'' என்ற அனிதா அவன் நெஞ்சைக் குறி பார்த்து படுக்கையிலிருந்து சுட்டாள்.

அலறலுடன் எகிறி விழுந்த ராஜாராம் விநாடிகளில் அடங்க.. சத்தத்தில் போதை மீறி வேல் பாண்டியன் எழுந்து உட்கார.. இப்போது

வாசல் கதவருகில் வந்த அனிதா ராஜாராமின் பேண்ட் பாக்கெட்டில் இருந்த ரிவால்வரை உறை அணிந்த கையில் எடுத்து அங்கிருந்தபடி படுக்கையில் இருந்த வேல் பாண்டியனை சுட்டாள்.

எதுவும் புரியாமல் ஏராளக் கேள்விகளோடு வேல் பாண்டியன் சிதறினார். ராஜாராமின் துப்பாக்கியை அவனருகில் போட்டுவிட்டு, வேல் பாண்டியனின் துப்பாக்கியை அவர் கையில் செருகி விட்டு, விளக்கைப் போட்டு, க்ளவுசைக் கழற்றி பாத்ரூமில் வைத்து..,

இதெல்லாமும் விநாடிகளில் செய்துவிட்டு அறைக் கதவைத் திறந்துகொண்டு திகிலோடு வெளியே ஓடி வந்த அனிதா.. மாடிப் படிகளில் ஏறி வந்து கொண்டிருந்த முத்துவிடம்,

''முத்து! அய்யோ! முத்து! அவனை ஏன் உள்ளே விட்டீங்க! அண்ணன் தம்பி ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் சுட்டுக்கிட்டாங்க'' என்று அலறினாள்.

மறுநாள் செய்தித் தாள்களில் சொத்துப் பிரச்சினை காரணமாக முன் விரோதத்தில் இருந்த அண்ணன், தம்பி இருவரும் ஒருவரை ஒருவர் சுட்டுக் கொலை செய்ததாகச் செய்தி வெளி வந்தது.

சில தினங்கள் கழித்து வக்கீல் ஆறுமுகம் அனிதாவைச் சந்தித்தார்.

''மேடம், ராஜாராமுக்கு கல்யாணம் ஆகலை, வேற உறவும் இல்லை. அதனால நெருங்கிய உறவான உங்க பேருக்கு அந்தக் கம்பெனி மாறுது. இந்த பங்களா, கார், நிலம் இதெல்லாமும் உங்க கணவர் பேர்லேர்ந்து உங்களுக்கு மாறுது'' என்றார்.

வெறித்தப் பார்வையுடன் இருந்த அனிதா நிதானமாகச் சொன்னாள்.

''வக்கீல் சார், மங்கை ட்ரஸ்ட் அப்படிங்கற பேர்ல ஒரு ட்ரஸ்ட் ஆரம்பிச்சி இந்த கம்பெனி, பங்களா, நிலம், கார் எல்லாத்தையும் அதில சேர்த்திடுங்க. அதுக்கு படிச்ச, பெண்கள் முன்னேற்றத்தை நோக்கமா கொண்ட நல்ல நாலு பெண்மணிகளை ட்ரஸ்டிகளா போட்டுருங்க. பெண்கள் முன்னேற்றம், பெண்கள் நல வாழ்வு இதை லட்சியமாக் கொண்டு இந்த ட்ரஸ்ட் இயங்கணும்.''

''ஆச்சரியமா இருக்கே. இவ்வளவு சொத்தையும் ட்ரஸ்ட்டுக்குக் கொடுத்துட்டு நீங்க என்ன செய்யப் போறீங்க?''

''நானா?'' என்றுச் சிரித்த அனிதா,'' கோர்ட்டுல சரண்டர் ஆகப்போகிறேன்'' என்றாள்.

மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் திருபர் கூட்டம் அலை மோத.. சாட்சிக் கூண்டில்

நின்றிருந்த அனிதா நீதிபதியைப் பார்த்து நிதானமாக பேசத் துவங்கினாள்.



''நீதிபதி அவர்களே, நான் மூணு கொலைகள் செய்திருக்கேன். என் பேர் அனிதா. சின்ன வயசிலேயே அப்பா போயிட்டார். அம்மாவும், பவித்ரான்னு ஒரு தங்கையும் மட்டும்தான். சந்தோஷமா வாழ்ந்தோம். ரவிச்சந்திரன்னு ஒரு அயோக்கியனை நல்லவன்னு நம்பி மனசையும், உடம்பையும் பறி கொடுத்தேன். அம்மாவை எதிர்த்து அம்மாவோட சாபத்தோட அவனோட போனேன். எங்கங்கயோப் போனோம். நல்லா என்னை அனுபவிச்சான். திருச்சில குடித்தனம் பண்ணலாம்னு ஒரு வீட்டுக்கு கூட்டிட்டுப் போனான். அங்கதான் அவன் சுயரூபம் எனக்குத் தெரிஞ்சது. அவன் என்னை பெங்களூர்ல ஒரு பார்ட்டிக்கு மூணு லட்சத்துக்கு விலை பேசினது கேட்டு உடைஞ்சிட்டேன். அவனைக் கத்தியால குத்திக் கொலை செஞ்சேன். பிணத்தைக் கிணத்துல போட்டு எரிச்சிட்டு ரகசியமா பெங்களூர் போனேன். அங்க ஒரு ஃபிரண்டு ஆதரவுல ஒரு சின்ன வேலைல கொஞ்ச நாள் இருந்தேன். என் புருஷனோட சந்தோஷமா இருக்கிறதா பவித்ராவுக்கு அப்பப்ப தபால் போட்டேன். சென்னைல ரேடியோ பிர்ச்சில எனக்கு வேலை கிடைச்சது. வந்தேன். என் அம்மாவை, தங்கையை பாக்கலை. தனியா ஹாஸ்டல்ல தங்கினேன். ஒரு பாதுகாப்புக்காக நான் கல்யாணமாகி புருஷனோட சண்டை போட்டுப் பிரிஞ்சி வந்துட்டதா எல்லார் கிட்டயும் பொய் நாடகம் ஆடினேன். என் பேருக்கு என் புருஷன் அனுப்பற மாதிரி டைவோர்ஸ் பேப்பர்ஸ் நானே அனுப்பி நானே அதைக் கிழிச்சிப் போட்டேன்.''

அனிதா தண்ணீர் கேட்டுக் குடித்து விட்டுத் தொடர்ந்தாள்.

''இந்தச் சூழ்நிலைல என் தங்கை பவித்ரா தூக்கு மாட்டி இறந்ததையும், அந்த அதிர்ச்சில எங்கம்மாவும் இறந்ததை பேப்பர்ல பார்த்துத் தெரிஞ்சிக்கிட்டேன். யாரை விசாரிச்சாலும் காரணம் தெரியலை. ரொம்ப நாள் கழிச்சி என் தங்கை பவித்ரா தற்கொலைசெஞ்சிக்கிறதுக்கு முன்னாடி போலீசுக்கு எழுதின தபாலோட நகல் ஒன்னு என் பெங்களூர் முகவரிலேர்ந்து ரீடைரக்ட் ஆகி எனக்கு வந்திச்சி. படிச்சதும் கொதிச்சிப் போயிட்டேன். போலீஸ் ஏன் நடவடிக்கை எடுக்கலைன்னு பாத்தா.. என் தங்கையை தற்கொலைக்குத் தூண்டின சம்மந்தப்பட்ட ஸ்வஸ்திக் கெமிக்கல் கம்பெனி எம்.டி. ராஜாராமோட அண்ணன் அசிஸ்டெண்ட் கமிஷனர் வேல் பாண்டியன்தான் அந்தத் தற்கொலைக் கேசை டீல் செஞ்சிருக்கார். தன் தம்பிக்கு எதிரான அந்த மரண வாக்குமூலத்தை மறைச்சிட்டு, கடிதம் எதுவும் இல்லை, வேலை கிடைக்காத விரக்திதான் தற்கொலைக்குக் காரணம்னு கேசை அழகா முடிச்சிட்டார். சத்யகுமார்னு நடிச்சி என் தங்கச்சியை நாசமாக்கின ராஜாராமையும், நீதி வழங்க வேண்டிய போலீஸ் அதிகாரியே நீதியைப் புதைச்சதால வேல் பாண்டியனையும்

கொலை செய்யத் தீர்மானிச்சேன். படிப்படியாத் திட்டம் போட்டேன். எனக்கு யாரோ போன்ல அசிங்கமா பேசறதா பொய்யான ஒரு புகாரோட வேல் பாண்டியன் கிட்ட அறிமுகம் ஆனேன். அவர் மனசுல கொஞ்சம் கொஞ்சமா இடம் பிடிச்சேன். கல்யாணம் வரைக்கும் வந்தேன். வேலையை விடணும், கம்பெனி பொறுப்பு எடுத்துக்கணும். அப்பதான் கல்யாணம்னு நிபந்தனை வெச்சேன். நான் எதிர்பார்த்த மாதிரியே அண்ணன் தம்பிக்குள்ளே சொத்துப் பிரச்சினை வந்திச்சி. அலங்கலங்க துப்பாக்கியை எடுத்து நானே ரெண்டு பேரையும் சுட்டேன். சொத்து பூரா என் கைக்கு வரக் காத்திருந்தேன். எல்லா சொத்தையும் பெண்களுக்கான ட்ரஸ்ட் அமைச்சி அதுக்கு மாத்திட்டேன். இப்பக்கூட நானா சரண்டர் ஆகலைன்னா போலீஸ் என்னைப் பிடிக்க முடியாது. ஆனா பெண்கள் வாழ்க்கையோட விளையாடற ரவிச்சந்திரன், ராஜாராம் மாதிரியான பொறுக்கிகளுக்கு இந்த வழக்கு ஒரு எச்சரிக்கையா இருக்கணும்னுதான் நான் சரணடைஞ்சேன். இந்த நீதி மன்றம் குடுக்கிற எந்த தண்டனையையும் ஏத்துக்க நான் தயாரா இருக்கேன்"

அனிதா பேசி முடித்த போது நிருபர் கூட்டத்தில் குறிப்பெடுத்துக் கொண்டிருந்த ஒரு பெண் நிருபரின் கண்களிலிருந்து உதிர்ந்த கண்ணீர்த் துளிகள் குறிப்பு நோட்டில் பட்டுச் சிதறின.

— முற்றும் —

